# இரகசியங்கள்

## சிறுகதைத் தொகுப்பு



பண்டைநகர் நாயகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரகசியங்கள்

(சிறுகதைத் தொகுப்பு)

பண்டைநகர் நாயகன்

வெளியீடு:

**சென். மேரிஸ் சனசமூக நிலையம்**

**பண்டத்தரிப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூல் | : இரகசியங்கள் |
| விடயம் | : சிறுகதைத் தொகுப்பு |
| ஆக்கம் | : A.E. பீரிஸ் (பண்டைநகர் நாயகன்) |
| பக்கங்கள் | : 105 |
| முதற்பதிப்பு | : 2024 |
| வெளியீடு | : சென். மேரிஸ் சனசமூக நிலையம், பண்டத்தரிப்பு. |
| உரிமை | : விஜயா பீரிஸ் |
| விலை | : 500/= |
| முகவரி | : பண்டைநகர் நாயகன்<br>'அன்பகம்'<br>புனித அந்தோனியார் வீதி<br>பண்டத்தரிப்பு<br>தொலைபேசி 021 225 0360, 0777048999 |
| அச்சுப்பதிப்பு | : ஜே.எஸ். பிறிண்டேர்ஸ்<br>பண்டத்தரிப்பு.<br>077 248 7212 |

ISBN : 978-624-96026-1-8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



ஓர் இரத்த உறவு இல்லாவிடினும்
ஒரங்கட்டாது என்னையும் தன்பிள்ளையாக ஏற்று
அன்போடு அறிவும், பண்போடு பாசமுந்தந்து
சான்றோர் சபையில் எனை ஏற்றிவைத்த
அன்புத்தந்தை
அமரர் வயித்தி அம்புறோஸ் ஐயா
அவர்களுக்கு
"இரகசியங்கள்"
என்னும் இந்நூலைப் பகிரங்கமாகச்
சமர்ப்பணம் செய்கிறேன்

**பண்டைநகர் நாயகன்**
**எட்வின் பீரிஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

| | |
|---|---|
| ஆசியுரை | 05 |
| வாழ்த்துரை | 06 |
| அணிந்துரை | 08 |
| என்னுரை | 10 |
| 1. அன்பு மொழி | 12 |
| 2. அவளும் நானும் | 15 |
| 3. ஆசிரியரின் பிரம்படி | 19 |
| 4. உயர்ந்தவர்கள் | 22 |
| 5. ஒரு தாயின் பாசம் | 28 |
| 6. ஒரு வாய்ச்சோறு | 31 |
| 7. கடற்கரை நண்டு | 33 |
| 8. கண் கெட்டபின் | 35 |
| 9. கதம்பமாகும் குடும்பம் | 37 |
| 10. கத்தி ஒன்று சுத்தி வருது | 39 |
| 11. குப்பையில் ஒரு கோமேதகம் | 41 |
| 12. கூட்டுக்குடும்பம் ஒரு பூந்தோட்டம் | 44 |
| 13. பரிசு | 47 |
| 14. பட்டதாரியின் வாழ்க்கைப் பயணம் | 52 |
| 15. பனையை நம்பிய பயணம் | 55 |
| 16. பாட்டியின் சுருக்குப்பை | 59 |
| 17. மலரத்துடிக்கும் அரும்புகள் | 61 |
| 18. மலரே கோபமா? | 63 |
| 19. மனித நேயம் உறவானது | 65 |
| 20. மலரச்செய்வோம் மனித நேயத்தை | 70 |
| 21. நடை மேடைப் பூக்கள் | 73 |
| 22. நன்றிக்கடன் | 76 |
| 23. நிதர்சனம் | 79 |
| 24. திருந்திய வாழ்க்கை | 84 |
| 25. துயர் தீர்ப்பான் தோழன் | 86 |
| 26. வசதிக்கே வாய்ப்பா? | 88 |
| 27. வடிவின் விடிவு | 95 |
| 28. வறுமையிலும் செம்மை | 99 |
| 29. வாழ நினைத்தால் வாழலாம் | 101 |
| 30. விடியலைத்தேடி | 104 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



எமது பங்கு மகன் "பண்டை நகர் நாயகன்" திரு அல்வின் எட்வின் பீரிஸ் என்பவரின் "இரகசியங்கள்" என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலுக்கு ஆசியுரை எழுதுவது மிக்க மகிழ்ச்சி. கணணித் தொழில்நுட்ப அறிவும், இணையத் தளங்களின் அதிவேகமான வளர்ச்சியும், கைத்தொலைபேசியின் இரகசியப் பாவனைகளும் அதிகரித்த இக்காலத்தில் இவரது இப்படைப்பு உன்னதமானது, பாராட்டுக்குரியது.

கதைகள் என்பது எல்லோருக்கும் விருப்பமான ஒன்று. கதைகள் சொல்லுகின்ற விதம், செய்கின்ற செயல் மக்களை ஈர்க்கின்றது. கதைகள் அந்தந்தப் பண்பாட்டோடும், வாழ்க்கை முறையோடும் தொடர்புடையது. அதனால் அது மக்களின் உணர்வைத் தொடுகின்றது. அந்தவகையில் ஆழ்ந்த அனுபவத்துடன் எழுதப்பட்ட இப்படைப்பானது, சிலிர்க்க வைக்கும் பல சிந்தனைகளையும், கருத்தைக் குடையும் கேள்விகளையும், மாறாத சுவையையும், மாற்றும் எண்ணங்களையும், மூக்கைத் துளைக்கும் மண்வாசனைகளையும், மறைந்து கிடக்கும் புண்படாத புன்னகைகளையும், உறவுகளை உரமூட்டும் நம்பிக்கைகளையும் நிறைத்து மெருகூட்டுகிறது.

திரு. அ. எ. பீரிஸ் ஒரு சிறந்த சமூக சிந்தனையாளர். எதிர்கால சந்ததியினர்க்கு ஒரு நல்ல படைப்பாளி. "இலைமறை காய்கள்" எனும் இவரது முதல் கவிதைத் தொகுப்பும் உயரிய சிந்தனைகளையும், சமூக விழுமியங்களையும் எடுத்தியம்பும் சிறந்த படைப்பாகும். இக்காலத்தில் இவரது இம்முயற்சியின் படைப்பிற்கு எனது வாழ்த்துக்களும் இறையாசீரும். இவரது எழுத்தறிவின் பயன் பெருகி விளையட்டும்.

**அருட்பணி. ம. பத்திநாதர்**
பரிபாலகர்
புனித பற்றிமா அன்னை யாத்திரைத்தலம்
பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தின் எழுத்தாளர்களின் வரிசையில், தனக்கென்றொரு தனித்துவத்தோடு தடம்பதித்துள்ள, 'பண்டைநகர் நாயகன்' திரு. அல்வின் எட்வின் பீரிஸ் என்பவரின் "இரகசியங்கள்" எனும் சிறுகதைத் தொகுப்பு நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

கவிஞனாக, நாடகவாளராக, எழுத்தாளராகப் பல்துறைப் பரிமாணங்களுடன் திகழும், இந்த எழுத்தாளரது நூற்பதிப்பின் முதற்தடம் "இலைமறைகாய்கள்" கவிதைத் தொகுதி வெளியீடு. இரண்டாவது தடம் "இரகசியங்கள்" எனும் சிறுகதைத் தொகுதி வெளியீடு.

சுமார் 30 சிறுகதைகளை சமூகப் பிரக்ஞையுடன் படைத்திருக்கும் இவரது எழுத்துக்கள் பாராட்டப்பட வேண்டியவை. வாழ்க்கைக் கோலங்களை அடியொற்றிய தன்மையில், ஆழ்ந்த, அகன்ற சமூகப் பார்வையுடன் நாசுக்காக எழுதுகோலின் துணைகொண்டு செதுக்கிய சிற்பமாக "இரகசியங்கள்" சிறுகதைத் தொகுப்பு அமைந்துள்ளது.

ஆசிரியரின் இயல்பான பண்பாகிய, அமைதியான மென்போக்குத் தன்மையின் எதிரொலிப்பான பண்புகளை அவரது எழுத்திலும் காணமுடிகிறது. எனினும் சமூக சீர்திருத்தக் கருத்துக்களைத் தக்கவாறு எடுத்துக்கூறும் உக்கிரமத் தன்மையும், சிறப்பாக அமைந்துள்ளது. அப்பண்பானது இரகசியத் தொகுதியின் எடுப்பாக இருக்கின்றது.

"ஒருவர் அறிந்தால் இரகசியம்"
"இருவர் அறிந்தால் பரகசியம்"
"மூவர் அறிந்தால் மோர்விட்டுக் கரைத்துக் குடிக்கலாம்"
என்பது பேச்சுவழக்கு. இரகசியத்தின் அம்சமாக ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களையும் பேசியிருப்பது இவரின் சிறப்பு. அட்டைப்பட ஓவியம் தலைப்பிற்குத் தலைப்பாகை கட்டியதாக மிளிர்வது பாராட்டுக்குரியது.

இத்தகைய சிறப்புடைய இத்தொகுப்பு, சிறந்த முறையில் வெளிவருவதற்கு எல்லாம்வல்ல ஆண்டவனின் ஆசி வேண்டிப் பிராத்திக்கின்றேன். இனிவருங்காலங்களிலும் நிறைந்த படைப்புக்களை இலக்கிய உலகிற்குச் சமைத்துக் கொடுக்கவேண்டும் என வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

**திருமதி றஜனி நரேந்திரா**
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
சண்டிலிப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



"பண்டைநகர் தந்த
பணிவான நாயகன்
அண்டை அயல் நோக்கும்
அற்புதக் கவிஞன்
தண்டமிழ் நிறைவால்
தன்னிலையில் தரமுயர்ந்து
எண்ணங்களில் நிறைந்தார்
என்றும் வாழ்த்துவோமே"

இலக்கிய வெளியானது அன்று தொட்டு இன்றுவரை பரந்து விரிந்து செல்கின்ற பெரும் பரப்பு. காலத்துக்குக்காலம் பல்வேறு படைப்பாளிகள் அங்கு பாதம் பதித்துச் சிறகடித்துச் செல்வது வழக்கம். அந்தவகையில் ஈழவளநாட்டின் வட புலத்தில், வலிதென்மேற்கில், பண்டத்தரிப்பு என்னும் அழகிய ஊரினைப் பிறந்த ஊராகக் கொண்ட அல்வின் எட்வின் பீரிஸ் என்கிற இயற்பெயருடைய "பண்டைநகர் நாயகனின்" "இரகசியங்கள்" என்னும் சிறுகதை நூலும் இலக்கிய வானில் சிறகடித்துப் பறக்க முயல்கிறது. இந்நூலுக்கு அணிந்துரை எழுதுவதில்அகம்நிறை மகிழ்வடைகிறேன்.

நூலாசிரியர் யாழ். போதனா வைத்தியசாலையில் சுகாதார முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றியவர். கத்தோலிக்க திருச்சபையின் உறுப்பினரும் கூட. அன்பாகப் பேசி, அமைதியாகப் பழகும் இவர், மிகவும் பணிவுமிக்க பன்முகப் படைப்பாளி. இவரது சிந்தனைப் புலமானது காதல், வாழ்வியல் அவலங்கள், சமூக அவலங்கள், சீர்திருத்தங்கள், கலாச்சார விழுமியங்கள், தாய்மை, பெண்மை என எல்லாமே சுமந்து, புரையோடி நிற்பதைக் காணமுடியும்.

இலை மறை காய்களாய்த் தொடங்கி இரகசியங்கள் பேசும் அளவுக்கு வளர்ந்துள்ளார் நூலாசிரியர். அழகான தலைப்புகளோடு ஒன்றன்பின் ஒன்றாகத் தொடரும் சிறுகதைகள் நாளாந்த வாழ்வியலைப் பிரதிபலித்து நிற்கின்றன. புலமைப்பரிசில் பரீட்சையில் பத்து வயதுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை பெற்றோரின் "படி படி" என்கிற திணிப்பின் வன்முறையை எதிர் கொள்வதும், சமூக ஏற்றத் தாழ்வுகளில் பெற்றோரின் வன்மம், கந்துவட்டிக்காரரின் மனநிலை, உண்மையின் உண்மை வடிவம்,பனை தரும் அழகிய வாழ்வு, கறுப்புச் சந்தையின் இன்றைய நிலவரம்,சாதியம் எனப்பல சமூக, தனிமனிதப் பிரச்சனைகள் கருத்துக் குவியல்களாகச் சிறுகதைகள் வடிவம் கொண்டுள்ளன.

படைப்புகள் சமூகத்தைப் புடமிடவேண்டிய கட்டாயம் மிக்கவை. சிறுகதைகள் ஓய்வுநேரப் பயனாகவும், தனிமனிதனைச் செப்பனிடும் ஆயுதமாகவும் உள்ளன. நூலாசிரியர் தனிமனிதனில் தொடங்கி, சமூகத்தைச் செதுக்கும் உளியாகவும் செயற்படுகிறார் என்று சொல்வதே சாலப்பொருந்தும். சிறந்த சொல்லாடல்கள், நாசுக்கான கருத்துப்பகிர்வு என்பன இரகசியங்கள் என்னும் நூலில் இரகசியம் பேணச்செய்வதை அறியமுடிகிறது.

ஆக், நூலாசிரியர் இது போன்ற பல பெறுமதிமிக்க படைப்புகளைப் படைக்கவும், இலக்கிய உலகில் தொடர்ந்து பயணம் செய்யவும், சிந்தனாசக்தி மேம்படவும், ஆண்டவர்தானே நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டும். உடலும் உளமும் ஆரோக்கியம் பெறவும், எழுத்துக்களால் தன்னையும், தான் பிறந்த ஊரையும் பெருமைப்படுத்த வேண்டுமென்கிற இறைவேண்டுதலோடு வாழ்த்தி நிற்கிறேன்.

**உடுவிலூர் கலா**
யாழிசைக் கவித்தடாகம்,
வலி. தெற்கு எழுத்தாளர் சங்கச் செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



இலங்கையின் வடமாகாணம், யாழ்ப்பாணத்தின் வலிகாமப்பரப்பின் தென்மேற்குத் திசையில், பழம் பெருமையுடன் திகழும் பண்டத் தரிப்பில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து கொண்டிருக்கும் நான், ஊருடன் இசைந்த புனை பெயராகப் பண்டை நகர் நாயகனாக உங்கள் மனங் களுக்குள் மகிழ்வாக நுழைந்திட எனது "இரகசியங்கள்" வழியாக முயல்கின்றேன். நான் பிறந்த குடும்பம், வளர்ந்த சமூகம், பழகிய சமுதாயமெனக் காலநீட்சியில், பருவவளர்ச்சியில் நிறையவே அறிந்தும் அனுபவித்தும் உள்ளேன். இது மனித வாழ்வியலில் இயற்கைதான். இருந்தும் எம்மை வழிநடாத்திய பெற்றவர்கள், அறிவூட்டிய ஆசான்கள், நன்நெறிப்படுத்திய ஆன்மீகத் தலைவர்களான அருட்சகோதரிகள், அருட்தந்தையர்களின் (நான் கத்தோலிக்க மதம் சார்ந்தவனாதலால்) அடிவருடியாக வாழ்வதில் எனக்குள் ஒரு மகிழ்ச்சி.

இவர்களின் சிந்தனைப்போக்குகள் என் சிந்தனைத் திறனையும் திறந்ததென்றால் பொய்யேது. எனது கண்முன் நடந்தேறும் நன்மை தீமைகள், நீதி அநீதிகள் என் மனக் குதிரையினைக் கட்டறுப்பது ஏதோ உண்மைதான். எனக்குள் ஒரு ஆதங்கம், ஒரு தனிமனிதனாக நான் இருந்து கொண்டே, எனது எண்ணங்களின்படி நடந்திருக்கவேண்டும் என்றே என்மனம் ஏங்கிடும். அப்போதெல்லாம் உணர்ச்சிவசப்பட்டு, எனது எண்ணங்கள் அத்தனையையும் எழுத்தில் வடித்து, என் சிந்தனையைச் சீர்செய்து கொள்வேன். அவை கவிதைகளாக, கட்டுரைகளாக வெற்றுத்தாளில் பதிந்து கொள்ளும். அவ்வழிவந்தவகையில் சிறுகதைகளாக எனது இரகசியங்களையும் அதனுள் பொதிந்து வைத்துள்ளேன். ஒவ்வொரு சிறுகதையும் ஏதோ ஒரு வழியில் உங்கள் மனத்தினுள் நிலைத்துக் கொள்ளும் என்பதும் எனது நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளாக, நண்பர்களாக, அறிமுகமானவர்களாக, அதிகாரிகளாக இன்னும் எம்மிடம் எதிர்பார்ப்பவர்களாகப் பலரைச் சந்திக்கின்றோம். ஆனால் அவர்களின் உண்மை உணர்வுகள் சந்தர்ப்பங்களில் வெளிவரும்போதுதான் அவர்களிடம் நாம் பார்த்த முகமூடிகள் கிழிபட்டு மூலங்கள் தெளிவுறத் தெரியவருகின்றன. அந்த வகையில் உண்மையைச் சொல்லி நல்லதைச் செய்து பெயர் வாங்கா விடினும், என் மனதுக்குள் ஓர் ஆத்மதிருப்தியை ஏற்படுத்தும் மூலங்களாக இக்கதைகள் உள்ளன என்பதை, நீங்களும் உணர்வீர்கள் என்பதில் மீண்டும் மகிழ்ந்து நிற்கிறேன்.

அன்புடன்
பண்டை நகர் நாயகன்
**அல்வின் எட்வின் பீரிஸ்**
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ☞ அன்பு மொழி

அன்றைய புதினப்பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டிய ஆதவன் வழமைபோல விளம்பரப்பக்கத்தில் தன்கவனத்தைத் திருப்பினான். இருந்தும் எவ்வித பயனும் இல்லையே என்ற ஆதங்கமில்லாமல் தொடர்ந்தவனுக்கு அன்றைய தபால் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. வங்கி வேலைவாய்ப்பு ஒன்றுக்காக வந்த நேர்முகத்தேர்வு அழைப்பே அதுவாகும். கொழும்பில் நேர்முகத்தேர்வு, அளவு கடந்த மகிழ்ச்சி அவனுக்கு. தன் தாயோடு தன் காதலி நந்தாவுக்கும், நண்பன் சுரேசுக்கும் தெரியப்படுத்தியவனாக கொழும்பு செல்லத்தயாரானான் ஆதவன். மறுநாள் விட்டு மறுநாள் நேர்முகத்தேர்வை எதிர்கொள்ளவேண்டும்.

இராணுவ நடவடிக்கை ஒன்றில் இளம் வயதிலேயே தந்தையை இழந்த ஆதவன், தாயின் தனி ஒரு உறவினோடே பண்புடனும் பணிவுடனும் வளர்ந்து வந்தான். சொத்துக்களின் வரவும், தாயின் விடாமுயற்சியும் அவனை நல்ல முறையில் வளம்பட வளரவைத்தது.

யாழ்ப்பாண இடப்பெயர்வின் போதுதான் அவன் உயர்தர வகுப்பை முடித்துப் பரீட்சையும் எடுத்திருந்தான். காலத்தின்பிடி யாரை விட்டுவைத்தது. இடப்பெயர்வு அவன் படிப்பை மட்டம்தட்டவே, தாயின் நிலையையும் தன் நிலையையும் உணர்ந்தவன் வேலை வாய்ப்புத் தேடிப் புறப்பட்டான். மகனின் மேற்படிப்பை எப்படியும் தொடரவேண்டும் என்ற நப்பாசையில் தன் அண்ணன் மேனனிடம் உதவிகேட்டு, கொழும்புக்குக் கடிதம் வரைந் திருந்தாள் அவன்தாய். என்னவென்பது, அவர் பதில் இவர்கள் இருவரையும் கலங்கவைத்தது. *"கொழும் பெண்டால் விளையாட்டோ? என்ர இரண்டு பெண்பிள்ளை களும் இங்க படிக்கினம், அவயளுக்கு என்ன செலவெண்டு உங்களுக்குத்தெரியுமே? உவனுக்கு உங்க இனி என்ன படிப்பு, ஏதும் வேலையைத்தேடி உழைக்கச்சொல்லு. காசு அது, இது என இனிமேல் எனக்கு இஞ்ச கடிதம் எழுத வேண்டாம்."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விடயம் ஆதவன் மனதை மட்டுமல்ல, அவன் தாய் மனதையும் புண்ணாக்கிப் புடம்போட வைத்தது. இனி என்ன நிலை வந்தாலும் இவரின் உறவு அவ்வளவுதான். ஆனால் நாம் ஒரு நல்ல நிலைக்கு வந்து, அவரை அவரின் ஒட்டாத உறவு நிலையை உணர்ந்து வெட்கப்பட்டு, வேதனைப்பட வைக்கவேண்டும் என்ற முடிவுடன் ஓர் இலட்சிய வெறிக்கே ஆளானான் ஆதவன்.

காலம் திசை மாறிக் கவலைகள் கரையத்தெடங்கின. நேர்முகத்தேர்வில் தேறியவனை, உடனேயே உள்வாங்கிக் கொண்டது செலான் வங்கி. கொழும்பில் வேலை, மாமாவின் வீடு இருந்தும் மனம் ஒத்து வராததினால் தனியார் விடுதி ஒன்றில் இருந்தே அம்மாவுடன் நந்தாவிற்கும், சுரேசுக்கும் தனித்தனி கடிதம் போட்டிருந்தான் ஆதவன். கொழும்பும் மொழியும், வேலையும் புதிதென்றாலும், எதையும் சமாளிக்கும் திறனும் ஆளுமையும் நிறைந்தவனுக்கு, அவனுடன் கடமை புரியும் சுமணா என்ற சிங்கள யுவதியின் உன்னத நட்புக்கிட்டியது. அவள் மூலம் ஒரு தனி இடமும் சாப்பாட்டு வசதியும் பெற்றுக்கொண்டான். நாளுக்குநாள் வளர்ந்த நட்பு தன்மனதில் உள்ளவற்றையும், குடும்ப நிலையையும் ஏன், அவனது காதலி நந்தாவைப்பற்றியும் பகிர்ந்து கொள்ளும் அளவிற்கு ஒரு புரிந்துணர்வுள்ள நட்பாக மாறியதில் வியப்பில்லை. அது சுமணாவின் குடும்பம்வரையும் விஸ்தரிக்கப்பட்டு, அவர்களின் அன்பையும் பரிவையும் பெற்றுக்கொள்ள வைத்தது.

இவர்கள் சிங்களவர்களாயினும், நல்ல பண்பான தமிழ் குடும்பப் பையன் என்ற மட்டில் ஆதவனிடம் அன்புடன் மரியாதையும் கொண்டிருந்தனர். மகனைப் பார்க்கவென்று கொழும்பு வந்த தாயும் சுமணா வீட்டில் தங்கிச்சென்றாள்.

வழியில் ஒருநாள் ஆதவனைக்கண்டு வியந்த மேனன் மாமா, விபரம் அறிந்து மனதில் ஏற்பட்ட சங்கடத்தை மறைத்தவராகத் தன்வீட்டிற்கு வரும்படி அழைத்தார். அவனோ இன்னோர் நாள் வருவதாகக் கூறி மெல்ல நகர்ந்து கொண்டான். வசதிகள் வாய்ப்புகள் வரும்போது மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் இணையத்துடிப்பதை எண்ணி மனதுக்குள் சிரித்தவனாய் இருப்பிடம் வந்தவனுக்கு, நண்பனின் கடிதம் கண்ணில் பட்டது. மறுநாள் கடமைக்குச் சென்றவன் லீவு கொடுத்துவிட்டுச் சென்றது சுமணாவுக்கு ஏதோபோல் இருந்தது. அமைதி இழந்த நிலையில் அவளும் வேலையை முடித்த பின், ஆதவனைக் காணச்சென்றபோது நண்பனின் கடிதம் சொன்ன செய்தி தெரியவந்தது. ஆதவனின் அன்புக்காதலி நந்தா, வெளிநாட்டு மாப்பிள்ளை ஒருவனுக்கு நிச்சயமானது என்ற செய்தி சுமணாவிற்கும் அதிர்ச்சியைத் தந்தது. என்னதான் உறுதி உடையவனாயினும், காதலின் இழப்பைத் தாங்க இதயம் இன்னும் இறுக வேண்டி இருந்தது. அவனது மனச்சோர்வையும், கலங்கிய விழிகளையும் காணச் சகியாதவளாக ஆறுதல்கூற முயன்ற சுமணாவிற்கு, அவனது விசும்பல்கள் அழுகையாகமாறத் தன் கண்களும் பனித்தது புரிந்தது.

ஒருகணம் சிந்தித்தவள் தனக்குள் ஒருமுடிவுக்கு வந்தவளாக, மெல்ல அவன் தலையை நிமிர்த்தித் தன் மார்போடு அணைத்துக்கொண்டாள். இன, மத, மொழி வேறாயினும் அன்புக்கு இவை அணைபோட முடியாதவை தானே, அவளது அணைப்பில் ஆறுதலானான் ஆதவன்.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ☞ அவளும் நானும்

வாழ்க்கையின் பரபரப்பு வழக்கம்போல் அன்றும் பிரதேசசெயலகத்தில் வழமையை மிஞ்சிய கூட்டம். ஈழப்போரின்போது இடம்பெயர்ந்து மீள்குடியேறியவர்களும், இராணுவம் விடுவித்த தங்களின் சொந்த மண்ணில் மீள்குடியேறத்துடித்து இடர்படுபவர்களும், அரச மானியமாக வழங்கப்படும் வீட்டுத்திட்டத்துக்குத் தெரிவாகி சிபார்சு செய்யப்பட்டதால், இறுதி அனுமதிக்கான பிரதேச செயலரின் நேர்முகத்தேர்வுக்காக ஒன்றுகூடியதால் இப்பரபரப்பு.

கிராம அலுவலகர் பிரிவுகளாகத் தங்கள் முறைக்குக் காத்திருப்பவர்களும், அனுமதிபெற்று மகிழ்வுடன் திரும்பிச் செல்பவர்களுமாக மக்கள் கூட்டத்துடன் கூட்டமாகத் தன் முறைக்காகக் கடந்த வருடம் பிறந்த தன் மகனுடன் காத்திருந்தாள் ரதி.

பாலுக்காகப்படுத்தும் மகனுடன் பார்வையாளர் மத்தியில் பாலூட்ட, அவள் என்ன பத்துப்பெற்ற பெரியவளா? பதினெட்டுக்கடந்த இளம்பருவத்தாயவள். இளமை வேகத்தில், கண்காணிப்பற்ற செல்வச்செழிப்பில் மனதைப் பறிகொடுத்து, அதனால் கல்வியுடன் உறவுகள், உடன்பிறப்புக்கள், உடமைகள் யாவையும் இழந்தவளுக்குக் கிடைத்திருப்பது இரத்த சொந்தமான மகன் உறவு மட்டுமே.

அவளின் முறை வந்தது. மூடிய கதவைத்தள்ளியவாறு உள்நுழைந்தவளுக்குப் பிரதேசசெயலரின் தரிசனம் அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் தந்தது. மனதுக்குள் கலா என்ற உச்சரிப்பு சத்தமின்றி வெளிவர "ரதி என்னடி நீயா?" என்றவாறு இருக்கையிலிருந்து எழுந்த கலாவதி பிள்ளையைப்பற்றிப் பறித்தாள். ஏக்கத்துடன் பேச்சறியாது நின்றவளுக்கு "இரு ரதி எப்படி, எங்கிருக்கிறாய் இவனுக் கென்ன பெயர்" என்ற கேள்விகள் நிலை உணரவைத்தது.

இருவரும் பள்ளித்தோழிகள், இப்போ அவள் அதிகாரி. இவள் அனுமதி கோரியவள். பத்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையிட்டு அனுமதி வழங்கப்பட்டது.

"பக்கத்து ஊரில்தான் என் வீடு கட்யாயம் நீ வரவேண்டும். சந்தித்ததில் மகிழ்ச்சி என்றாலும் உன்னுடன் பேச நிறையவே உண்டு" என்ற கலாவதியின் அழைப்போடு மகனையும் வாங்கியபடி,

"நிச்சயமாக வருவேன், சந்திப்போம்" என்றவாறு வெளிவந்தாள் ரதி.

என் தோழி கலாவா பிரதேசசெயலர்? நம்பவே முடியவில்லை. பள்ளிப்பருவ நினைவுகள் நிழலாட, தன் நிலமையையும் அவள் நிலமையையும் எடைபோட்டுக் கொண்ட மனது குழம்பித் தவித்தது. அனுமதி கிடைத்த சந்தோசம் கூடப் பெரிதாகவிடாத குற்ற உணர்வுடன் தலை குனிந்தவாறே வந்தவள் சிந்தித்த வண்ணமே வீடு வந்து சேர்ந்தாள். கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. இருந்த குடிசை வீட்டின் தாழ்வாரத் தூணுடன் சரிந்து மகனுக்குப் பாலூட்டியவண்ணம் பழைய நினைவுகளில் மனதைப் படரவிட்டாள்.

ஒரே தெருவில் எம்மிருவரது வீடும் அமைந்திருந் தாலும், சொந்தமென்று சொல்லுமளவுக்கு உறவில்லை. கலாவதி குடும்பத்தில் மூத்தபிள்ளை, என்னைவிட இரண்டு வயது மூத்தவள். தோட்டத்துடன் அமைந்த குட்டி வீட்டில் கூலிவேலை செய்யும் பெற்றோரும் தம்பி ஒருவனுமே குடும்ப உறுப்பினர்கள். அவ்வப்போது எங்கள் வீட்டிலும் வேலைக்கழைத்தால் வந்து செய்து சம்பளம் பெற்றுக்கொள்வார்கள். படிப்பும் பணவசதியும் இல்லாவிடிலும், பண்பும், உண்மை அன்பும் அவர்கள் குடும்பத்தின் மகிழ்ச்சியைக் குலைக்கவேயில்லை.

எங்கள் அப்பாவோ அரச வேலையில் உயர் பதவியில், அம்மாவோ பல சொத்துக்களுக்குச் சொந்தமான குடும்பத்தின் ஒரே மகள். தெருவில் பெரியவீடு எங்களது. பணத்துக்கோ, பணத்துக்காக உறவாடும் சொந்தங்களுக்கோ, கழியாட்டங்களுக்கோ, கொண்டாட்டங்களுக்கோ குறைவேயில்லை. நானும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் தங்கையுடன் ஐவரும் ஐஸ்வரியத்திலேயே மிதந்தோம். தேவை என்று கேட்பது தேவைக்கதிகமாகவே கிடைத்தது. நாம் என்ற மமதையிலேயே காலம் கடந்து கொண்டிருந்தது.

ஊர்ப்பள்ளிக்கூடத்தில் அவளும், நகர்க் கல்லூரியில் நானும் பயின்றாலும், கலாவதியும் நானும் நல்ல தோழிகளாகப் பழகினோம். ஊரில் சமயச்சடங்குகள் நிகழ்வுகள் யாவற்றுக்கும் சேர்ந்து கொள்வோம். வசதி வாய்ப்புக்கள் குறைந்தாலும், கலாவதி பள்ளிப்படிப்பில் முன்னிலையானவள். ரியூசன் நாகரிகத்தில் நான் ரியூட்டறி செல்வேன். அவளோ, அவளது பாடசாலை ரீச்சர் வீட்டில் தெரியாதது கேட்டுப்படிக்கும் இலவசப்படிப்பு. தந்தையும் தாயும் சேர்ந்து கூலிவேலை. வேலை முடிந்து வந்து சமையல். இரவில் ரீவியோ, போணோ இல்லாத குடும்ப உறவு. தாங்களும் தன்குடும்பமும் என்ற தனிமைப்போக்கு. எந்தவித ஆடம்பரம் அற்ற, அமைதியான அழகான குடும்பம்.

எதிராக எங்கள் குடும்பத்தில் என்னவென்று சொல்வது. ஒவ்வொருவரும் தன்தன் சந்தோசத்துடன் தனிமையில், விரும்பியபோது விரும்பிய சாப்பாடு, நோயுறும்போது பிரபல வைத்தியர், மருந்துகள். இதே எமக்கு மட்டும் கிடைத்த, யாருக்கும் கிடைக்காத வாய்ப்பு வாழ்வு என தனக்குத்தானே தன்னுள்ளேயே பெருமைப்பட்டுக் கொண்டனர். நானும் அப்படியே இருந்து கொண்டேன்.

எல்லாவித வசதிகள் வாய்ப்புக்கள் தந்த எம்மைப் பெற்றவர்கள், எம்மைக் கண்காணிக்கவும், எம் நடத்தைகளில் கவனம் செலுத்தவும் தவறியதை அவர்கள் உணர்ந்தார்களோ இல்லையோ, காலம்கடந்து நான் மட்டும் உணர்ந்து கொண்டேன். என் தவறை அல்ல, என்மேல் அவர்கள் தவற விட்டவைகளை. என் வாழ்க்கைப் பிறழ்வு அவர்களுக்கும் நிச்சயமாய்ப் பாடமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பாடசாலை நாட்களில் படிப்பைவிட அனைத்திலும் முன்னுரிமை பெற்றேன். பகட்டிலும் பணத்திலும் தற்பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டேன். போண் மூலம் சகலதும் அறிந்தேன். பொருத்தமில்லா நட்புகள் கொண்டேன். இளமைப்பருவ உடலாசைக்கும் இச்சை கொண்டேன், இணங்கினேன்.

தானுண்டு தன்சுகமுண்டு எனத் தற்பெருமை பேசிய என் பெற்றோர், தாம் விட்ட பிழை அறியாது என் பிழை அறிந்தனர். உறவுகள் முறிந்தன, உடமைகள் மறுத்தனர், உரிமையை அழித்தனர். சரியோ தவறோ, அறியாப்பருவத்தில் எனை அறியாது வளர்ந்த காதலில் எனையே இழந்தேன். காதலனை நம்பி நான் காவியம் படைக்கவில்லை. என் உள்ள நிலையறிந்தவன் வசதியற்றவனானாலும், வரம்புக்குள் வளர்க்கப்பட்ட கலாவதி போன்றவன். என்னைக் கைப்பற்றி இன்றுவரை கள்ளமில்லா அன்புடன் தன் பெற்றோரின் துணையுடன், பணம் பதவியென்றில்லாவிடினும் நல்ல மனம். பண்பு பழக்கத்தில் அவர்களுடன் மருமகளாய் நானும் மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றேன். நானும் என் மகனை அவளாக உருவாக்குவேன் என்ற எண்ணத்தில் "பிள்ளை இந்தா தேனீர், விட்டால் இன்னும் உறுஞ்சுவான். அவனை இங்கதா, நீ தேனீரைக்குடி" என்ற மாமியாரின் குரல்கேட்டுச் சுயம் திரும்பினாள் ரதி.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ☞ ஆசிரியரின் பிரம்படி

கிராமமட்டத்தில் படித்த இளைஞர்களுக்கான சுய தொழில் ஊக்குவிப்பு சம்பந்தமாக, நகரில் அமைந்துள்ள மாவட்டச் செயலகத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான இறுதித்தேர்வு செயலாளர் தலைமையில் நடைபெற இருந்ததால், தனது பண்ணையை விரிவாக்கும் முயற்சியில் சேரனும் தன் முறைக்காகக் காத்திருந்தான். கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது

"சரி, சரி ஐயா வந்திட்டார், இனி டக், டக்கென்று கூப்பிடுவினம்" என்றான் ஒருவன்

"ஓம், ஓம் ஐயா நல்லமாதிரி, மனிசர்களின் பிரச்சனை களை உணர்ந்தவர். மற்றும்படி கதைக்கப் பேசவும் நல்லவர்" என்றார் வேறொருவர்.

சேரனின் முறை வரவே கடவுளை வேண்டியபடி உட்சென்றவன் "சரி, வாங்கோ இருங்கோ" என்றவரின் முகத்தைப் பார்த்து திகைத்து நின்றான். "ஐயா இருங்கோ" என்றவாறு கோவைகளில் இருந்து தலை நிமிர்த்தியவர், சேரனைப் பார்த்ததும் "சேரா நீயா?" என்றவாறு எழுந்தவர், கிட்டவந்து கட்டித் தழுவிக்கொண்டார். திகைத்த அலுவலக உதவியாளர்களின் ஏக்கத்தை "இவர் என் பள்ளித் தோழன், இருவரும் சிறுவயதில் ஒன்றாகப் படித்தோம்" என்ற விளக்கம் தீர்த்துவைத்தது. இருவரும் கதைத்துப்பேசி அன்றைய நிகழ்வுகளைத் தொடர்ந்தனர்.

"டேய் சேரன், பின்னேரம் வீட்ட வருவன், உங்கள் எல்லாரையும் பார்க்க வேணும். ஒரு இடமும் போகாம வீட்டில இரு என்ன? எல்லாம் வெல்லுவோம்" என்ற படியே சேரனை அனுப்பி வைத்தான் கோபால்.

சிந்தித்தபடியே வீடு வந்தவன், அவ்வளவு அலுவலகர்கள் முன்னாலும் எவ்வளவு பெரிய பதவியையும் பாராமல், எழும்பிவந்து என்னக் கட்டிப்பிடிச்சத நினைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பமுடியேல. அவன் வருவதற்குள் வீடு வாசலக் கூட்டித்துடைத்து சுத்தப்படுத்தி வைக்க வேணும் என எண்ணியபடியே மனைவியை அழைத்து "சரசு, பின்னேரம் ஒரு பெரியவர் வீட்ட வாறார். பண்ணைப் பக்கங்களையும் வீடுவாசலையும் சுத்தப்படுத்தி வைக்க வேணும், வா நானும் வாறன், சேந்து செய்வோம்" என்றவனின் பரபரப்பைக்கண்டு "யாரடா சேரா, இந்த அவசரப்படுறாய்" எனக் கேட்ட தாய்க்கு

"அம்மா, சொல்லமறந்திட்டன் எங்கட கோபாலத் தெரியுமே, நினைவிருக்கோ?"

"யாரடா அது"

"என்னோட படிச்சவன், நான் பள்ளிக்கூடத்தில அடி வாங்கிப் பள்ளிக்கூடம் போகமாட்டன் என்று நிக்கேக்க, நீங்கள் வந்து ரீச்சருக்குப் பேசிப்போட்டு என்னப் பெரிய பள்ளிக்கூடத்தில சேர்த்தனீங்கள். அப்ப கோபாலின் அம்மாவும் வந்து, ரீச்சரிட்ட மன்னிப்புக்கேட்டுப் பிள்ளைய நான் பார்க்கிறன் எண்டு சொல்லும்போது, நீங்கள் அவவுக்கும் புத்தி சொன்னனீங்கள். உவையளச் சும்மா விடப்பிடாது, நாலு கேள்வி கேக்க வேணும், சும்மா சம்பளம் வாங்கிக்கொண்டு சும்மா அப்பிடி இப்படியெண்டு"

"ஓம், ஓம்"

"வீட்டுப்பாடம் செய்யேல, ஒண்டும் ஒழுங்கில்ல எண்டு என்னோட சேத்துக் கோபாலுக்கும் தான் அண்டைக்கு ரீச்சர் அடிச்சவா, அந்தக் கோபால் தான்"

"ஓ, ஓ, அவன் அந்தப்பள்ளிக்கூடத்திலதான் தொடர்ந்தும் படிச்சவன், இப்ப என்ன செய்யிறானாம்? எங்க கண்டனீ"? என்ற தாயின் கேள்விகளுக்கு இன்று செயலகத்தில் நடந்ததைச் சொல்லி முடித்தான் சேரன். வாய் பிளந்து அதிசயித்தவள் "ஆ, அப்படியே, உன்ன மறக்காமல் நினைவு வச்சிருந்திருக்கிறான்." என்று அடங்கிக் கொண்டாள். பண்ணைவேலை, வீடுவாசல் வேலையெல்லாம் முடித்து ஓய்ந்தவனின் எண்ணங்கள் ஓயவில்லை.

சேரனும் கோபாலும் சிறுவயது முதலே தோழர்கள். விளையாட்டிலும் குறும்புகளிலும் உள்ள கவனம் படிப்பில் இல்லை. அவர்களது வகுப்பு ரீச்சர் மலர் மிகவும் கண்டிப்பானவர். பிள்ளைகளில் மிகுந்த கரிசனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர். அவரவர் நிலையறிந்து அதற்கேற்றாற்போல் தண்டனை வழங்குவதிலும் வல்லவர். அந்தவகையில் இவர்கள் இருவரின் கூட்டையும் அறிந்து அடிக்கடி கண்டிப்பவர். அன்று ஒருநாள் பிரம்பால் தண்டனை வழங்கிப் பெற்றோரை அழைத்து வரும்படியும் சொல்லியிருந்தார்.

சேரனின் தந்தை சிவம் வெளிநாடொன்றில் வேலை பார்த்ததால் அம்மா சரசுவிற்கு கொஞ்சம் பணத்திமிர்தான். ஊதாரித்தனமான செலவுகளும், எதிர்காலத் திட்டமில்லா நகர்வுகளும்தான் சேரனையும் இந்நிலைக்கு தள்ளியது. அன்று மலர் ரீச்சரிடம் சண்டையிட்டு, எனக்காக வாதாடி, ரீச்சரைத் தரக்குறைவாகப்பேசியது எனக்குமகிழ்ச்சியாகவும், அம்மாவின் செயலில் பெருமையாகவும்தான் இருந்தது. ரீச்சர் எத்தனை சொல்லியும், அம்மா விடாப்பிடியாக என்னை வேறு பள்ளிக்கூடத்தில் சேர்த்தவ. ஆனால் இத்தனைக்கும் மாறாகக் கோபாலின் அம்மா, ரீச்சரிடம் மன்னிப்புக்கேட்டு கோபாலையும் கண்டித்துப் படிக்க வைத்ததும், என் அம்மாவின் புத்திமதி கேட்காமல் செயற்பட்டதும் இப்பொழுது பலனைக் கொடுத்துள்ளது.

என்னதான் ரீச்சர் கண்டித்தாலும், சந்தர்பங்களில் தன் பிள்ளைகள்போல் அன்பு காட்டுவதிலும், பகிர்ந்து கொள்வதிலும் எமக்கும் அவர்மேல் ஒரு பாசம் இருந்தது. ஆனாலும் சிறுவயதில் என் அம்மாவின் முடிவே சரியெனப்பட்டது எனக்கும். கெடுகுடி சொற்கேளாது என்ற உண்மை இப்போது விளங்கி என்ன? அது இன்னும் அம்மாவுக்குப் புரியாதது தான் அதிசயம். என் பிள்ளைகள் மட்டில் நான் விழித்திருந்தால் போதும் என்றவாறு நினைவு திரும்பினான் சேரன்.

அன்றைய ஆசிரியரின் பிரம்படி, பெற்றோரின் வித்தியாசமான நடைமுறையால் ஒருவனைக் கால்நடை மேய்க்கவும், ஒருவனை மாவட்ட செயலாளராக்கவும் வைத்தது யாருடைய பங்கு என்பது இப்போதுதான் எனக்கும் புரிந்தது.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 ☞ உயர்ந்தவர்கள்

கிணற்றடி வேப்பமர நிழலில் வைத்து, மகன் கொண்டுவந்த தன் காலை உணவை உட்கொண்டு கொண்டு, அப்படி, இப்படி என்று தண்ணீர் மாறும் மகனை வழிப்படுத்திய வண்ணம், தன் கவனம் எல்லாவற்றையும் பயிர்கள் மீதே செலுத்திய கார்த்திகேசு, அடிக்கடி கிணற்றையும் எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தார்.

படிப்பில் நல்ல திறமை இருந்தது, அரச தனியார் துறை வேலைகளுக்குமான வாய்ப்புகளும் இருந்தது. இருந்தும் அதிகாரிகளுக்குக் கீழோ, முதலாளிகளுக்குக்கீழோ ரைகட்டி, கைகட்டி வாழவிரும்பாததால் தன் தனித்திறமைகளை எல்லாம் ஒன்று திரட்டிய நல்விவசாயியாக வலம்வருகிறார் இவர். நல்ல குடும்பம். கமலம் என்ற மனைவியும் லதா, ராஜன் என்ற இரு பிள்ளைகளுடனும், முதுசமாய்க்கிடைத்த பெற்றோரின் சொத்துடன், சீதனமாய்க் கிடைத்த மனைவியின் சொத்தும் சேரந்த வயல், பயிர் நிலங்களுக்குச் சொந்தக்காரனாக, ஊரில் பெயர் சொல்லக்கூடிய ஒருவனாக கார்த்திகேசு வாழ்ந்து வருகிறார்.

இத்தனைக்கும் இரண்டு பிள்ளைகளையும் படிக்க வைத்து, மூத்த மகள் லதாவை ஆசிரியர் ஒருவருக்கு மணம் முடித்துக் கொடுத்து, அயலூரில் மணமகனின் குடும்பத்தோடு வாழவிட்டிருக்கிறார். மருமகனும் அவர்களுக்கு ஒரே பிள்ளை என்பதால், மாமா மாமிக்கு லதாவும் இன்னொரு பிள்ளையாக அன்புடன் வாழ்ந்து வருகிறாள். கார்த்திகேசுவும் மாதாமாதம் ஒருமுறையாவது குடும்பத்தாருடன் மகளிடம் சென்றுவருவது வழக்கமானது. மகன் ராஜன் பள்ளிப்படிப்பு முடித்து பல்கலைக்கழகத்தில் இறுதிவருட மாணவனாய்ப பயின்று வந்தாலும் தகப்பனுக்குத் தப்பாமல், அவ்வளவு குணஇயல்பும் கொண்டு விவசாய நடவடிக்கையில் தந்தைக்கு வலதுகையாகவே வளர்ந்து வருகிறான்.

அன்றும் வழமைபோல வயலுக்குச் செல்லும் வழியில், எதிரே நடராசா மாஸ்ரரைக் கண்டதும், பவ்வியமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிள் விட்டிறங்கிய கார்த்திகேசு, தொப்பியை கழட்டி கையில் வைத்தபடி "வணக்கம் ஐயா, ஏன் நடையில எங்க போய் வாறிங்கள், நான் கொண்டுபோய் விடவோ" என்று பயபக்தியோடு கேட்டார்.

"என்னடா, நீ இப்பவும் சின்னப்பிள்ளை மாதிரி," "இல்லை சேர், நீங்கள் எப்பவும் எங்களுக்கு வாத்தியார் தானே, நீங்கள் சொல்லித்தந்ததும் பழக்கிவிட்டதும் இன்னும் எங்கள விட்டு போகேல.சொல்லுங்கோ சேர்."

"நான் உதில பாங்க்குக்கு போட்டுவாறன், நேற்றுத்தான் இந்த மாச பென்சன் வந்தது அதுதான். நீ போ, நான் உதிலதான் நடந்து போறன். நடக்கிறதுதான் நல்லமாம். நான் ஒன்று கதைக்கவேணும் ஒரு நாள் வீட்ட வாறன்."

"ஐயா, உங்களுக்கு ஏன் சிரமம் எப்ப எண்டாலும் நான் வாறன் சொல்லுங்கோ."

"சரி சரி, நீ போ நான் பாக்கிறன்" என்றபடி, நடராசா மாஸ்ரர் நடையைத் தொடர்ந்தார். அவர் விலகிய பின்பே கார்த்திகேசு சைக்கிளை எடுத்துச் சென்றார்.

அதே ஊரில் கொஞ்சம் வசதிபடைத்த, வளமான, உத்தியோகக்கார குடும்பம் எண்டால் நடராசர் குடும்பம் தான். அவரிடம் படித்தவர்கள் ஏராளம், ஆனால் அவர் வசதிவாய்புகளைப் பார்த்துப் பொறாமைப்படுபவர்களும் தாராளம்தான். இன்னும் அவர்மேல் மதிப்பு மரியாதை, பயபக்தி உள்ளவர்களும் உண்டு. அந்த வகையில் கார்திகேசுவும் ஒருத்தன் தான். நடராசா மாஸ்ரருக்கு மூன்றும் பெண்பிள்ளைகள். இரண்டைக் கட்டிக் கொடுத்ததோடு மனைவியும் போய்ச்சேர, கடைசிமகள் கவிதாவுடனேயே காலம் கழிகிறது.

கவிதாவும் பரம்பரைப் பெருமை மாறாது, கல்வியிலும் சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றவள் ஆதலால், அவளுக்கும் அரசபணியாக ஆசிரியர்பணியே கிடைத்தது. தகப்பனின் வழிப்படுத்தலில் அவளும், அனைவராலும் விரும்பப்பட்ட பண்பான ஆசிரியராய் வலம்வருகிறாள் என்றே சொல்லலாம். என்னதான் சாதிமத பெருமைகள் இருந்தாலும், நடராசா மாஸ்ரர் தனக்குச் சரியெனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதையே செய்து நிறைவேற்றுவதில், அடுத்தவரின் கருத்துக்கு இடமளிக்கமாட்டார் என்பது அவரின் உறவுகளும் அறியும். அதில் பிழை நிகழ வழிகளும் அமைந்ததில்லை என்பதும் உன்மைதான். இந்தவகையில் நீண்ட சிந்தனைக்குப்பின் கவிதாவுக்குப் பொருத்தமான வாழ்க்கைத்துணை ஒன்றைத் தேடும்பணியில், ஊரோடும் தன் முதுமைக்காலத்தை மகளோடும் கழிக்கும் வகையில், காரத்திகேசுவின் மகன் ராஜன் மீது மாஸ்ரரின் கவனம் ஈர்த்தது. இதைப்பற்றி மனதுக்குள் எண்ணிய நடராசர், சந்தர்ப்பத்தில் மகள் கவிதாவிடமும் நேரடியாகவே கேட்டு அவளின் சம்மதத்தையும் தெரிந்து கொண்டார். இனி கார்த்திகேசனுடன் கதைத்தால் சரி என்ற எதிர்பாரப்பிலேயே, அன்று அவனிடம் ஒரு கதை போட்டும் வைத்தார். காணும் இடத்தில் சந்தித்துக்கொள்ளும் மனிதர்களுள் கார்த்திகேசு வித்தியாசமானவனாகவே இருந்தான். அவனின் பணிவும், பண்பும் பக்குவமும் நடராசரை நிரம்பவே கவர்ந்திருந்தது. அவனின் வழியிலேயே அவனின் பிள்ளைகளும் இருந்ததால் ராஜனை இன்னும் அதிகமாகவே பிடித்திருந்தது. எண்ணியவாறே தன் வீட்டு மாம்பழங்களுடன் கார்த்திகேசு வீட்டைநோக்கி நடராசர் புறப்பட்டார்.

"கார்த்திகேசு, கார்த்திகேசு" கூப்பிட்ட படியே நடராசர் வாசலில் நிற்க, "அவர் இல்ல" என்ற படியே எட்டிப்பார்த்த கார்திகேசுவின் மனைவி கமலம் "ஐயா, நீங்களே வாங்கோ, வாங்கோ, உள்ள வாங்கோ. அவர் இன்னும் வரேல, வாற நேரமாச்சு, இருங்கோ வந்திடுவார். என்ன விசயம் அவசரமோ" என்றபடியே கூனிக்குறுகி முன்னால் நிற்க, "இல்லப்பிள்ளை சும்மா வந்தனான். அவனோட ஒருக்காக் கதைப்பம் எண்டு. இந்தா பிள்ளை, எங்கட வீட்டு மாம்பழம்" என்றபடி கொன்டு சென்றதைக் கொடுக்க, என்ன ஐயா என்றபடியே அவவும் வாங்க, வயலுக்குச் சாப்பாடு கொடுத்து விட்டு வந்த ராஜனும் சைக்கிளில் வந்திறங்கக் கணக்காய் இருந்தது. நடராசா மாஸ்ரரைக் கண்ட ராஜன் "வணக்கம் சேர், அப்பா சந்தைக்குப் போட்டார், இப்பவந்திடுவார். அம்மா எனக்கும் நேரமாச்சு, நானும் போட்டுவாறேன்" என்று பாக்கை எடுத்துக் கொண்டவனிடம் "தம்பி கொஞ்சம் பொறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறன், சாப்பாடு கட்டி வச்சிருக்கிறன். எடுத்திட்டு வாறன்" என்றவள் சாப்பாட்டைக் கொண்டுவர அதையும் வாங்கிப் பையில் திணித்தவனாய் "அப்ப இருங்கோ சேர், அப்பா வந்திடுவார். நான் போட்டு வாறன்" என்ற படியே ராஜன் பல்கலைக்கழகம் புறப்பட்டான்.

"ஐயா இருங்கோ, நான் உங்களுக்குக் குடிக்க ஏதாவது கொண்டு வாறன்" என்றபடியே கமலம் உள்செல்ல, வீட்டை நோட்டம்விட்டபடியே ராஜனின் பண்பான நடவடிக்கைகளையும், அவன் பள்ளிக்காலத்தில் பெற்ற வெற்றிக்கிண்ணங்கள், பதக்கங்களையும் பார்த்து ரசித்துக் கொண்டார் நடராசர். உள்ளே சென்ற கமலம் தேனீருடன் வந்து "இந்தாங்கோ ஐயா, குடியுங்கோ" என, அதை வாங்கியபடியே நடராசர் "இதெல்லாம் தம்பின்ரதானே, சரி சரி, போய் உங்கட வேலையைப்பாருங்கோ, நான் இருக்கிறன்" என்றவர் சத்தம் கேட்டு வாசல் பக்கம் பார்த்தார். அங்கே கார்த்திகேசு வருவதைக்கண்டு "வா வா, நானும் இப்பதான் வந்தனான்" என்றார்.

"ஐயா, சொன்னா நான் வந்திருப்பன்தானே, உங்களுக்கு ஏன் கஸ்டம்" என்றவாறு சைக்கிளை நிறுத்தி,சாறத்தின் சண்டிக்கட்டை கழற்றி விட்டபடி "சொல்லுங்கோ ஐயா" என்றார் பணிவுடன்.

"சரி சரி, நீ கை கால் அலம்பிக்கொண்டு ஆறுதலா வா, நான் தேத்தண்ணி குடிச்சிட்டு இருக்கிறன்" என்றார். "சரி ஐயா" என்று போன கார்த்திகேசு சற்றைக்கெல்லாம் வந்து அமர்ந்தார்.

"கார்த்திகேசு மனிசியையும் கூப்பிடன் கதைப்பம்" என்றவர் குரல்கேட்டுக் கமலமும் வர, நடராசர் கதையைத் தொடங்கினார். "சுத்தி வளைச்சு நான் கதைக்கேல, நேரடியா விசயத்துக்கு வாறன். என்ர மகள் கவிதாவுக்கு உங்கட பையனைக் கேக்கத்தான் வந்தனான்." கார்த்திகேசுவும் கமலமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். "ஐயா, என்ன சொல்லுறீங்கள்" என்று ஏக்கத்துடன் கார்த்திகேசு "நீங்கள் எங்க, நாங்கள் எங்க, சபைசந்தில நாளைக்கு உங்கட உறவுகள்....? என்ன ஐயா....? ஏன் இப்படி" என்று சொல்ல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலமும் "அதுதானே ஐயா, நாளைக்குச் சபைசந்தியால உங்களையும் விலத்தி வைச்சிடுவினம் உங்கட உறவுகள்."

"கார்த்திகேசு நான் சிந்திக்காம, சின்னத்தனமா இப்படி ஒரு முடிவு எடுக்கமாட்டன். அது உங்களுக்கும் தெரியும் உங்களுக்கு சம்மதம் எண்டா மிச்சம் நான் பாப்பன்."

"ஐயா சொல்லுறன் எண்டு தப்பா எடுக்கதையுங்கோ, இது முதல்ல உங்கட பிள்ளை கவிதாவுக்கு தெரியுமோ?"

"நான் என்ன மடையனே? பிள்ளையிட்ட மட்டும் இல்லாமல், மற்றரெண்டுபிள்ளையளிட்டையும், மருமக்களிட்டையும் கதைச்சு அவையின்ர சம்மதத்தோடையும்தான் இஞ்ச வந்தனான். நீங்களும் தம்பிற்றையும் ஒருக்காக்கேட்டு சரி எண்டால் சொல்லுங்கோ. மற்றவேன்ர பிரச்சன எங்களுக்குத் தேவையில்ல" என வெட்டுஒண்டு துண்டுரெண்டாகக் கதைத்தார் நடராசார்.

"ஐயா, ஊராரையும் உங்கட உறவுகளையும் நினைக்கத்தான் பயமா இருக்கு. வேற ஒன்றும் இல்ல. மகனும் நாங்கள் சொன்னால் தட்ட மாட்டான். உங்கட பிள்ளையும் பவுண் குஞ்சு, அத உரசிப்பாக்கத் தேவையில்ல. உங்களோட எங்களையும் சரிசமனாப் பாக்கிறதுதான் மனசுக்க ஏதோ பண்ணுது."

"கார்த்திகேசு, ரெண்டுபேரும் நல்லாக் கேளுங்கோ, வாழ்க்கை எண்ணுறது கொஞ்சக்காலம். இதில என்ர மகளுக்கும் உங்கட மகனுக்கும் காவாசிக்காலம் போட்டுது. மிச்சம் தான் இருவரும் சேர்ந்து வாழப்போற காலம், இதில அவை ரெண்டுபேரும் சந்தோசமா வாழுறத்துக்கு அந்தஸ்து ஒரு தடையா இருக்க கூடாது. அது போக ஒரு மனிசன்ர நடை உடை பாவனை, பண்பு மரியாதை, பழகிற விதம் இவைதான் உயர்வு தாழ்வை நிச்சயிக்கும். இதவிட்டிட்டுக் குலம் கோத்திரம், பரம்பரை பாரம்பரியம் எண்டு பழம் பெருமை பேசிக்கொண்டுதலைகீழா நடந்தால் அவையள்தான் கீழினம். உயர்வு தாழ்வு எண்றது திரும்பவும் செல்லுறன் ஒருதன்ர பண்பான மனிதநேயமான பழக்கவழக்கத்திலேயேயின்றி வேறஒண்டிலும் இல்லக் கண்டியளோ. போதுமோ இன்னும் சொல்லவோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா இவ்வளவும் சொன்னாப்பிறகு இனி நாங்கள் ஒன்றும் சொல்லுறத்துக்கில்ல" என்று ஒரே குரலில் கார்த்திகேசுவும்கமலமும்சொன்னார்கள்."கார்த்திகேசுஉன்ன எனக்கு எப்பவோ இருந்து தெரியும். உன்ர சிந்தனையளும் செயற்பாடுகளும், பண்பும் பணிவும், இவ்வளவு வயசாகியும் இன்னும் சின்னப்பிள்ள மாதிரி கள்ளம் கபடமற்றுப் பழகிறதும், பிள்ளைகளையும் உன்னப்போலவே வளர்த்து வைத்திருக்கிறதும் எனக்கு உன்மேல பெரிய மரியாதையைத் தருகிறது. இவ்வளவு நவீன யுகத்திலையும் உன்ர பெடியன் காதுக்க வயறக் கொளுவி, தலைமயிரக் குறுக்கால வெட்டி, களுசானுகள் கிழிச்சுப்போட்டு நான் பாக்கேல. மற்றவையள் மாதிரி இல்லாமல், ஒழுங்கான முறையில் இருக்கிறதும், மற்றவைய மதிச்சுக் கண்ணியமா நடக்கிறதும் நான் அவதானிச்சிருக்கிறன். அந்தவகையில் எனக்கும் பிடிச்சு, பிள்ளையளுக்கும் பிடிச்சதாலதான் வாழப்போற ரெண்டு பேரும் ஒருத்தர ஒருத்தர் புரிஞ்சு கொண்டால், சாதி சமயம் எல்லாம் ஒரு பொருட்டில்ல. இன்னமொண்டு கார்த்திகேசு நீங்கள் பெடியனத் தாறனீங்கள், சீதனம் சீர்வரிசை" எண்டு தொடங்கிய நடராசாரின் பேச்சை நிறுத்திய கார்த்திகேசு,

"ஐயா இனி ஒண்டும் பேச வேண்டாம். என்னட்ட இருக்கிறது அவனுக்கும், உங்களிட்ட இருக்கிறது பிள்ளைக்கும் எண்டு, உங்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். சந்தோசமா வாழுறத்துக்கு சொத்துக்களும் முக்கியமில்ல. அவ்வளவு தான் என்ன கமலம்? என்று கார்த்திகேசு கமலத்தைப் பார்க்க "உங்களுக்கு நான் என்ன மறுப்பே" என்று நிறுத்திக்கொண்டாள் கமலம்.

"அப்ப சரி, ஒரு நல்ல நாள் பாத்துச் சொல்லுறன். தம்பியையும் கூட்டிக்கொண்டு எங்கட வீட்டை வாருங்கோ" என்ற நடராசர் கைகூப்பி வணக்கம் சொல்லி விடைபெற்றுப் புறப்பட்டார். சிரித்தபடியே வழியனுப்பிய கார்த்திகேசுவும் கமலமும் திரும்பவும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டனர்.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 ☞ ஒரு தாயின் பாசம்

"அம்மா இனி எப்பவருவீங்க"நின்று திரும்பிய தாய் லட்சுமி "நான் வாறசனிக்கிழமைதான் வருவேன் ஏனம்மா"

"இல்ல, வரேக்க அண்ணாவையும் கூட்டிட்டு வாங்கோ, பாக்க ஆசையாய் இருக்கு"என்றாள் மல்லிகா.

"சரி சரி கட்டாயம் கூட்டிட்டுவாறேன்" என்றுகையை அசைத்தவாறே நடந்தாள் லட்சுமி.

அழகு, அறிவு, அடக்கம் நிறைந்தவள்தான் லட்சுமி. பத்து வருடங்களுக்கு முன் கட்டிட ஒப்பந்தகாரரான சரவணனை மணந்து ராஜன், மல்லிகா என இரு பிள்ளைகளைப்பெற்று வாழ்ந்தவளுக்குக் கடந்த இரு வருடங்களுக்கு முன் மணவாழ்வு முடிவுக்கு வந்தது. கணவன் சரவணன் கொஞ்சம் சபலபுத்தி படைத்தவன். மனைவி பிள்ளைகள் இருந்தாலும் கூட திருப்தி அற்றவனாய்ப் பிறன்மனை புகும் பழக்கத்தால், லட்சுமிக்கும் சரவணனுக்குமிடையில் சண்டைக்குக் குறைவே இல்லை. பிள்ளைகளோடு மிகவும் சிரமப்பட்டவளைத் தன் சுய நலனுக்காக விலக்கிக் கைவிட்டுத் தனக்குப் பிடித்த ஒருத்தியுடன் சென்று வாழத் தொடங்கினான் சரவணன்.

தாய் தந்தையரின் இழப்பின் பின்னர் கணவனே தஞ்சம் என இருந்தவளுக்கு இந்நிலமை. இருந்தாலும் தன் இரு பிள்ளைகளையும் வளர்த்து, சமூகத்தில் உயர்த்த வேண்டுமென்ற இலட்சியம் அவளைப் புடம்போட்டது. பழகிய தையல் கைகொடுக்க வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. இவளின் இளமையும் அழகும், தற்போது கணவனற்ற நிலையும் சமுதாயத்தில் பெரும் இன்னல்களைக் கொடுத்தாலும், அத்தனையையும் தற்துணிவோடு தாண்டிப் பாரதியின் புதுமைப் பெண்ணாக வாழ்ந்து வந்தாள் லட்சுமி.

இவர்களின் நிலையறிந்த கன்னியாஸ்திரிகளின் மடம் ஒன்று மல்லிகாவைப் பொறுப்பேற்றுக் கொண்டது. ராஜனும் படிப்பைத் தொடர்ந்து வந்தான். கால ஓட்டம் தடையின்றிப் பல வருடங்கள் கடந்துபோக, ராஜனும் படிப்பு முடிந்து அரச நிறுவனம் ஒன்றில் பணிக்கமர்ந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகாவும் தற்போது ஆசிரியையாக வலம் வருகிறாள். தன் இலட்சியம் நிறைவேறிய திருப்தியில் லட்சுமி. இருந்தும் இளமைக்காலம் துணையின்றித் தனிமையில் கடந்து, முதுமைக் கோலத்தில் முடிகள் நரைத்துத் தளர்வுகள் தோன்ற மக்களின் அறிவுரைப்படி, தையல்வேலையைவிட்டு வீட்டு வேலைகளுடன் மகள், மகனின் திருமண ஏற்பாட்டை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

பிள்ளைகளின் சிறுபராயத்தில் தகப்பனின் நிலைப் பாடுகளை மறைத்தவள், அவர்கள் வளர்ந்ததும் உண்மை களைச் சொல்லியிருந்தாள். நிலமை உணர்ந்த இருவரும், தங்களையும் அம்மாவையும் தவிக்க விட்டுச்சென்ற அப்பாவில் வெறுப்பை வளர்த்தனரே தவிர, பாசம் கொள்ளவில்லை.

அம்மா எல்லாவற்றிலும் உறுதியாய் இருந்ததால் தந்தைபோல் வழித்தடம்மாறாமல், தன் இளமை இன்பங்களை எல்லாம் தொலைத்து எம் சந்தோசத்திற் காகவே உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப் பணித்து, இம்முதுமைக்கோலத்தில் கணவன் இருந்தும் கைம்பெண்ணாகவே வாழ்கிறாள் என்பதில், அவர்கள் இருவருக்கும் ஆற்ற முடியாத ஆதங்கம் இருந்தது. தாய்ப்பாசம் தாய்க்கு மட்டும் தானா, தந்தைக்குப் பங்கில்லையா? அம்மா இழந்தவை இழந்தவைதான். அதை எம்மால் எப்படி மீட்டுக்கொடுக்க முடியும்?அவளை அன்புடன் மகிழ்ச்சியாய் வாழவைப்பதே எம் கடமையாகும் என சமாதானப்பட்டுக் கொண்டனர் இருவரும்.

“தம்பி, தம்பி” என்று போக்குவரத்துப் பாதையில் வாகனங்களை மறித்துக்கொண்டு நின்ற முதியவரை யாருமே கண்டுகொள்ளாதபோது, வேலை முடிந்து வீடு திரும்பிய ராஜன் மட்டும் மனம்கேளாமல் வண்டியை நிறுத்தி “என்ன பெரியவரே, என்ன விடயம்” என வினவினான். “எனக்கு ரொம்பவும் பசிக்குது, ஏதாவது இருந்தால் குடப்பா, சாப்பிட்டு நாளாச்சு” என்றார் அந்தப் பெரியவர். தன்வசம் ஏதுமில்லாததால் “ஐயா வீடுபக்கத்திலதான், ஏறுங்கோ வண்டியில், அங்கபோய் சாப்பிடலாம்” என்று அவரைத்தன் வீட்டிற்கு அழைத்துச்சென்று முன்னால் இருத்திவிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளேசென்று அம்மாவிடம் விடயத்தைக்கூறி சாப்பாடு கொடுக்கச்சொன்னான் ராஜன். சாப்பாட்டுடன் முன்னுக்கு வந்தவள், முதியவரைக்கண்டதும் அப்படியே திரும்பி உள்ளே ஓடிவிட்டாள். "என்னம்மா" எனக்கேட்டவனுக்கு அப்போதுதான் புரிந்தது, அதுதான் அப்பா என்று.

திரும்பியவனின் கையைப்பற்றி "என்ன மன்னிச்சிடு தம்பி, நான் போறேன்" என்று எழும்பியவர் "நான் கொடியவன் உங்களைத்தவிக்கவிட்டுச் சென்றவன். ஆண்டவன் எனக்கு நல்ல தண்டனை கொடுத்திட்டான். லட்சுமிக்கு நான் செய்த துரோகம் திரும்பி, நான் நம்பியவளால் எனக்குக் கிடைத்து விட்டது. என்சொத்து சுகங்கள் எல்லாவற்றையும் தனதாக்கி, வயோதிபத்தில் என்னைக் கலைத்துவிட்டாள் பாதகி" என்றான் சரவணன். அந்நேரம் மல்லிகாவும் வீடு திரும்பியவள் அம்மாவிடம் முழுவிபரமும் அறிந்து கொண்டாள். இளமையில் செய்த தவறை முதுமையில் புரிந்து என்ன பயன். சுதாகரித்துக்கொண்டே தாயும் பிள்ளைகளும் காரசாரமான விவாதங்களின் பின் ஒரு முடிவிற்கு வந்தனர்.

இல்லாதவர் இல்லாமலே இருக்கட்டும். இதுவரை வாழ்ந்த நாங்கள் இனியும் வாழ்வோம், என்ற மன நிலையில் ராஜனும், மௌனத்தில் மல்லிகாவும் இருக்க, "இல்லப்பிள்ளையள், அவசரத்தில் எடுக்கும் முடிவுகள் சரியாகாது. என்ன இருந்தாலும் உங்கள் அப்பாதானே. என் காலம் முடிந்தாலும் கடமை முடியவில்லை. எனக்குத் துரோகம் செய்தாலும் உறவு நிலை மாறாது. உங்களுக்கு மட்டும் நான் தாயில்ல, அவருக்கும் நான்தான் தாய்போல. மன்னிக்கும் குணம்தானே மனிதனின் உயர்ந்த ஆயுதம். அந்தக் குற்ற உணர்வே நிதமும் தண்டிக்கும். இன்னொரு தண்டனை எதற்கு? இந்தா இதைக் கொண்டுபோய்அவரிட்ட கொடு. முதலில சாப்பிடட்டும்"என்று திரும்பிக் கொண்டுவந்த சாப்பாட்டை ராஜனின் கையில் திணித்தாள் லட்சுமி. ஒரு தாய்க்குப் பிள்ளைகள் மட்டுமல்ல, கணவனும் ஒரு பிள்ளைதான். ஒரு தாயின் பாசம் இப்படி வியாபிக்கிறது. அது தாய்க்குரிய பண்பு, பாசம் என்பது லட்சுமியில் தெரிந்தது.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 ☞ ஒரு வாய்ச்சோறு

பாடசாலை விடுமறைக் காலம் ஆதலால், தாயாரும் பிள்ளைகளுமாய் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு வேலையைத் திட்டமிட்டு செய்வதன்படி, இன்று மகள் ரேவதியும் தாய் பார்வதியும் பழைய படங்களைத் துடைக்கும் போது, ஒருதாய் பிள்ளைக்கு உணவூட்டும் படமொன்றை எடுத்த ரேவதி "இது யாரம்மா" எனக்கேட்டாள். "உன் அப்பாவும் பாட்டியும்" என்றாள் பார்வதி.

"ஓ, எங்கட அப்பாவும் அம்மாவுமா?" என்றவள் ஆசையுடன் பார்த்தபடி "அப்பா அழகாக இருக்கிறார்" என்றவளுக்கு "அது அப்பாவைப் பெற்ற தாயில்லை, ஆனால் அப்பாவின் அம்மாதான்"என்றாள் தாய்.

"என்னம்மா குழப்பிறிங்கள்"

"இல்ல ரேவதி அப்பா பிறக்கும் போதே தாய் இறந்துவிட்டா. அப்புறம் பாட்டிதான் அப்பாவை எடுத்து வளர்த்தவ. வளந்தாப்பிறகுதான் இது அப்பாவுக்கும் தெரியும்".

"ஐயோ, அப்பா பாவம் என்னம்மா, இரவு அப்பாவோட கதைக்கேக்க நான் கேக்கவேணும்". என்றவாறே வேலைகளைத் தொடர்ந்தாள்.

ராஜனின் தாயார் இறந்தது தெரியாவண்ணம் ரமணியம்மாள், தன் இரு பிள்ளைகளுடன் ராஜனையும் வளர்த்து படிக்க வைத்து, திருமணமும் முடித்து ஆக வேண்டிய எல்லாமே செய்து கொடுத்திருந்தாள். அவளின் இரு பிள்ளைகளும் நல்ல நிலையிலேயே வாழ்ந்து வருகையில் ரமணியின் கணவன் இறந்து போக, இவர்கள் பரம்பரை நாற்சார வீட்டில் கூட்டுக்குடும்பமாகவே வாழ்ந்து வந்தனர். ராஜன் வெளிநாடு சென்றதால் குடும்பம் பார்வதியின் வீட்டிலேயே, அவளின் தாய்தந்தையரின் காலத்திற்கு பின்னரும் வாழ்ந்து வருகிறார்கள்.

ராஜன் வெளிநாட்டில் இருந்தாலும் அடிக்கடி பார்வதியும் பிள்ளைகளும் பாட்டியைப்போய் பார்த்து வருவது வழக்கம். பாட்டிக்கும் இவர்களிடம் பாசமதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டியின் பிள்ளைகள் குடும்பத்தோடு வேலை, படிப்பென பரபரப்பாய் இருப்பதால், பாட்டிக்கென தனிஅறையை ஒதுக்கிப் பராமரிக்க வேலையாளையும் அமர்த்தியிருந்தனர். இது பாட்டிக்குப் பிடிக்காவிட்டாலும், வேறுவழியில்லாமல் இருந்து வருகிறார்.

ராஜன் இன்னும் இரண்டுமாதத்தில் வேலையை முடித்துக்கொண்டு ஊருடன் வரப்போவதால், ரேவதியும் தம்பியும் பாட்டியைத் தங்களுடன் கூட்டிவந்து வைத்திருக்க நினைத்துப் பெற்றோரிடம் அனுமதியும் பெற்றிருந்தனர்.

அந்த நாளும்வர ராஜன் குடும்பமாய்ப் பாட்டியின் வீட்டிற்குப்போய் விடயத்தை சொல்லிக் கேட்கையில், உள்ளுக்குள் அவர்கள் கரைச்சல் முடிந்தது, பேசாமல் அனுப்பிவிட்டால் எங்கள் பாரம் குறைந்திடும் என நினைத்தாலும், வெளியில் காட்டிக் கொள்ளாமல் இழுத்தடித்து, இறுதியில் நீயும் அம்மாவுக்குப் பிள்ளை தானே, சரி கூட்டிட்டுப் போ என மனம் வருந்திக் கொடுப்பது போல் நடித்துத் தப்பிக்கொண்டனர்.

அன்று தொடக்கம் ராஜன் குடும்பத்துடன் வாழத் தொடங்கிய பாட்டி, சந்தோசமாகப் பேத்தி, பேரனுடன் உறவாடி கதைகேட்டுக் கதை சொல்லி வந்தாலும், சாப்பிடும் வேளையில் ரேவதியும் தம்பியும் பாட்டிக்கும் ஒருவாய் தங்கள் கையால் ஊட்டிவிடுவதை வழக்கமாக்கி இருந்தனர். பாட்டியும் அவர்கள் கையால் ஒருவாய் சோறு உண்ண எதிர்பார்த்தே இருப்பாள்.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 கடற்கரை நண்டு

"சிறு நண்டு கரைமீது படமொன்று கீறும், சிலவேளை அலைவந்து அதைக்கொண்டுபோகும்" சின்ன வயசில் பாடப்புத்தகத்தில் படிச்சது இப்போது தனிமையில், கடற்கரையில் இருந்தவளுக்குக் கண்முன்னே காட்சியானது. என்னதான் நாம் முயன்றாலும், நினையாத, விரும்பாத நிகழ்வுகள் நடந்தேறித்தான் செல்கின்றதே என்பதில் சலித்துக் கொண்டவள், தன் வாழ்க்கையில் இதுவரை நடந்தவற்றைச் சிந்திக்கத் தொடங்கினாள் மீனா,

மீனவ சமுகத்தில், குடும்பத்தில் மூத்தபிள்ளைதான் மீனா. தந்தை நல்ல தொழிலாளி, வருமானத்திற்கேற்ற வசதியான வாழ்க்கை. இவளைத் தொடர்ந்து இன்னும் இரண்டு பேர் ஒன்று தம்பி, இன்னொன்று தங்கை. அக்கிராமத்தில் பெயர் சொல்லும் குடும்பமானது மீனாவின் குடும்பம்.

காலவோட்டத்தில் மீனாவும் பெரியவளாகிப் படிப்பிலும் திறமை காட்டியதில் தகப்பனுக்குக் கொஞ்சம் பெருமைதான். தன் உறவுகளுக்கும் மீனாபற்றிச் சொல்லிப் பெருமைபட்டுக் கொள்வார். இந்நிலையில்தான் இயற்கை அனர்த்தம் என்ற பெயரில் ஆழிப்பேரலை கரையை அண்டிய குடும்பங்களையும், அவர்களின் சொத்துக்களையும் அள்ளிச் சென்றது. இதில் தந்தை தம்பியுடன் வீட்டின் ஒருபகுதியையும் இழந்து, தாய் தங்கையுடன் தனிமையானாள் மீனா. எதிர்பாரா இந்நிகழ்வு சொந்தங்களுக்கும் தப்பாமல் இழப்புகளைக் கொடுத்துக் கிராமத்தையே சோகமயமாக்கியது.

வசதியோடு வாழ்ந்த குடும்பம் இரு உயிர்களைப் பறிகொடுத்து நொந்துபோயிருந்தது. இச்சூழலில் அயற்கிராம மக்களின் ஆதரவும், உதவியும் கொஞ்சம் கைகொடுத்தது உண்மைதான். இவளது சமுகமல்லாத, கொஞ்சம் தாழ்வாக மற்றவர்களால் பார்க்கப்படும் சமுகத்தில் ஒருவனான ராசனின் பழக்கம் நட்பாகிப் பின்காதலானதும் உண்மைதான். ராசனும் ஒழுக்கமானவன்தான். இருந்தும் படிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவு செல்லாததால் தந்தையாரோடு விவசாயத்துக்கு உதவியாகவும், அதிலேயே பழக்கப்பட்டும் இருந்தான். இது மீனாவின் மாமனாருக்குக் கடுகளவும் பிடிக்கவில்லை. தந்தை இல்லாதவிடத்து அவரே இவர்களின் குடும்பத்திற்கு நிர்வாகியானதால், மீனாவைத் தங்கள் சமுகத்துக்குள் கட்டிக்கொடுக்க முயற்சிக்க, ராசனின் குடும்பமும் இவர்கள் காதலை எதிர்க்க, இருவரும் புறப்பட்டுப் பல மைல்களுக்கப்பால் மீனாவின் தூரத்து உறவுக்காரரின் உதவியுடன் பதிவுத்திருமணம் செய்துகொண்டு, தனித்து வாழத்தொடங்கினர்.

அங்கு விவசாயத்திற்கு ஏதுவான நிலையற்றதால், ராசனும் அவர்களின் உதவியோடு கடல்தொழில் புரியத் தொடங்கி, மெல்லமெல்ல முன்னேறிக் கொண்டிருந்தான். தாம் தனியே வாழ்ந்தாலும் எவருக்கும் பாரமில்லாமல் தமக்கும் குறையில்லாமல், முயன்று முன்னேறி வாழ்ந்து காட்டவேண்டும் என்ற இலட்சியத்துடன் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. சிறுகச்சிறுகச் சேமித்ததில் ஒரு நிலமும் வீடும் வாங்கிக்கொண்டார்கள். என்னதான் இருந்தாலும் கடல் வாழ்க்கை நிரந்தர வருமானமில்லாமல் தொடர்ந்தது. ஒருநாள் வரும் இல்லையேல் சேமிப்புக்குலையும்.

கணவனைக் கடலுக்கனுப்பிவிட்டுக் கரையில் காத்திருந்தவள் கண்ணிலேயே அக்கடற்கரை நண்டு அலையோடு வருவதும், தரையில் ஓடிவளையெடுப்பதும் கால்களால் படம்வரைவதும், மீனுண்ணும் பறவைகளிடம் பதுங்கி ஒளிவதும், மீண்டும் அலையுடன் அள்ளுப்பட்டுச் செல்வதும் கண்களில் பட்டது. இதுபோலவே எம்வாழ்வும், ஓயாத அலையுடன் தீராத போராட்டமாகச் செல்கிறது. இச்சிறு கடல் நண்டு எனக்கு வாழ்வின் தத்துவத்தைப் புரிய வைத்துவிட்டதே என எண்ணியவாறே, பழைய நினைவில் இருந்து மீண்ட மீனா, வாழ்க்கை என்பது இப்படித்தான். நாம் வாழுமட்டும் இருவரும் சந்தோசமாக வாழ்ந்து செல்வோம் என எழுந்து கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 ☞ கண் கெட்டபின்

"ராஜன், நீ அவங்களோட பழகிறது எனக்குப் பிடிக்கேல்ல, ஏனெண்டால் அவங்கட குடும்பம் எங்கட ஊர் எல்லையிலதான். சட்டவிரோதச் செயல்களால் எப்போதும் சண்டையும் சச்சரவும்தான். இரண்டுதரம் இவனையும் காவல்துறை பிடிச்சு, படிக்கிற பெடியன் எண்டு எச்சரித்து விட்டவங்கள். நான் சொல்லிற்றன், அதுக்குமேல உன்ர விருப்பம்" என்று கண்ணன் தன்னிலைப்பாட்டை ராஜனுக்குப் பலதடவை எடுத்துக் கூறியும் ராஜன் கேட்பதாயில்லை.

ராஜன் வசதியான குடும்பப்பையன். மேற்படிப்புக் காகக் கல்லூரியில் இணைந்தபோதுதான் கண்ணனும் அறிமுகமாகி நண்பர்களானார்கள். கண்ணன் பெற்றோரின் கண்காணிப்பில் பாதை தவறாமல் பண்போடு வளர்ந்தவன். உண்மை, உதவும் தன்மை என ஆளுமை மிக்கவன். ராஜனின் பெற்றோரோ ஆடம்பரமாக வாழ்வதுடன் தங்களது சுகத்தில் கவனம் கொள்வதுபோல், பிள்ளையை நல்வழிப்படுத்துவதில் அக்கறையற்றே இருந்தனர். தேவைக்கதிகமான வழங்கல் களால் ராஜன் வழிமாறிச் செல்வதைக்கூடக் கவனிக்க நேரமற்றவர்களாய் இருந்தனர்.

கல்லூரியிலும் ராஜனின் பழக்கவழக்கங்களை அவதானித்த அதிபர் பெற்றோரிடம் முறையிட்ட போதும், அவர்கள் கல்லூரியில் தவறு காண்பதுபோல் பேசி தங்கள் மகனைக் குறையற்றவனாகவே பார்த்தனர். கல்லூரிக்காலம் கடந்தது, கண்ணன் ஓர் அரச நிறுவனத்தில் வேலைக்கு அமர்ந்து கொண்டான். ராஜனின் நட்பையும் அவனின் தவறுகளையும் சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்த முனைவதும் தொடர்ந்தது. சில இக்கட்டான நிலையில் கண்ணன் உதவியதை ராஜனால் மறக்க முடியவில்லை. இதனால் கண்ணனிடம் கோபம் வந்தாலும், அதை அடக்கி ஆளப்பழகிக் கொண்டான். அந்த வகையில் ராஜனும் மிகவும் மென்மையான குணமுடையவன்தான், போதைக்கு அடிமை யாகி அதிலிருந்து விடுபட முடியாமல் இருந்ததே உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில்தான் ராஜன் தன் நண்பர்களுடன் தலைநகர் செல்வதாக்கூறிப் புறப்பட்டான். நண்பர்களின் போதைப்பொருள் பரிமாற்றம் புரியாமல், அவர்களின் பயணப்பொதிகளுடன் தலைநகரில் வைத்துக் காவல் துறை யினர் அணுகியபோது, நண்பர்கள் சுதாகரித்துக் கொண்டு தப்பிச்செல்ல, ராஜன் வசமாக மாட்டிக் கொண்டான். எத்தனை முயன்றும் முடியாதுபோக, இறுதியில் தீர்ப்பு இருபதுவருட சிறைவாசமானது. பெற்றோரின் பண பலத்தாலும் முடியவில்லை. இதை அறிந்த கண்ணனும் மிகுந்த வேதனையடைந்தான். நற்குடிப்பிறப்புக் கூட சேரிடம் தவறும்போது சகதியாவதற்கு ராஜனே உதாரணமாகி விட்டான் என ஏங்கினான்.

கண்ணனும் திருமணமாகிக் குடும்பத்துடன் தலைநகரில் வாழ்ந்தான். சந்தர்ப்பம் கிடைக்கும்போது ராஜனைச் சிறைச்சாலையில் சந்திப்பான். இளமை கடந்து முதுமையின் வாசலில், தலைமுடி தாடிமீசைகள் நரைத்துப் பார்க்கவே பரிதாபமாக இருந்தான் ராஜன். பெற்றவர்களின் கவனயீனமும், கற்றவர்களின் அறிவுறுத்தலைக் கேளாமை யும், ராஜனின் இளமை வாழாமலே சிறையில் கடந்து போனது. ராஜன் விடுதலையாகிக் கண்ணனைச் சந்திக்கும் நேரமெல்லாம் உன்சொல் கேட்காமல், பெற்றோரின் கண்காணிப்புமில்லாமல் வாழ்ந்தது, இன்று இந்நிலையில் கொண்டுவந்து சேர்த்தது என்றே சொல்லி கண்கெட்பின் இனி என்ன எனக் கலங்கினான். ஆறுதல் கூறித் தந்தையின் நிர்வாகத்தைக் கவனிக்க அறிவுறுத்தி அனுப்பிவைத்தான் கண்ணன்.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 கதம்பமாகும் குடும்பம்

விமலும், வாணியும் சகோதரர்கள். தந்தை சேகர் தனியார் நிறுவனமொன்றின் உயரதிகாரி. தாயார் ரேவதி பள்ளி ஆசிரியை. விமலுக்கு பத்து வயதும், வாணிக்கு எட்டு வயதுமாகிறது. இருவரும் படிப்பிலும், விளையாட்டிலும் மிகவும் திறமையானவர்கள். பண்பு பாரம்பரியத்துடன் அன்பில் வாழ்ந்துவரும் இனியகுடும்பம். தொழில் காரணமாக சொந்த ஊர் உறவுகளைவிட்டுப் பல மைல்களுக்கப்பால் வாழ்ந்து வந்தாலும், அயலவருடன் சிறந்த உறவைப் பேணி வந்தனர்.

பாடசாலை, வேலைகள் நிமித்தம் எல்லோரும் இரவிலேயே ஒன்றுசேர்வது வழக்கம். இரவில் அவரவர் வேலைகள் எல்லாம் முடிந்தபின்பு, எல்லோருமாகக் கூடிக் கதைகள்பேசி விளையாடி, ஒருவரை ஒருவர் கிண்டல் செய்து, நான்கு பேருக்குள்ளும் போட்டிகள் வைத்துப் பரிசில்கள் வழங்கிப் படுக்கைக்குப் போவதே வழக்கமாயிருந்தது. இதனால் பிள்ளைகளின் ஆளுமை விருத்தியடைவதுடன், அவர்களின் நுண்ணறிவும் வளர்ச்சியுறும் என்பதில் பெற்றோர்க்கு அதீத நம்பிக்கை. விமல் அப்பாவைப் போலவும், வாணி அம்மாவைப் போலவும் வரவேண்டும் என்பதே அவர்களின் இலட்சியமாயும் இருந்தது.

பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோரின்பாரிய பங்கு பிள்ளைகளின் நடையுடைபாவனையில் தெரியும் என்பார்கள். அந்தவகையில் சேகரும், ரேவதியும் திறமைமிக்கவர்கள் என்பதில் ஐயமில்லை. பிள்ளைகளின் வெற்றிதானே பெற்றவரின் வெற்றி. சிறுசிறு விளையாட்டுகளில் தாங்கள் தோற்பதுபோல் நடித்துப் பிள்ளைகளை வெல்லவைத்து, அவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்வதே அறிவுசால் பெற்றோரின் தூய பண்பாகும்.

அன்று இரவும் தந்தைக்கும் விமலுக்கும் கைமடக்கும் பலப்பரீட்சை ஒன்று நடந்தது. இதில் தாய் விமல் பக்கமும், வாணி தந்தை பக்கமும் கட்சி சேர்ந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியில் வழமைபோல தந்தை தோற்றுப்போக, மகன் வெற்றிபெறுகிறான். அவனது மகிழ்வுக்கு அளவே இல்லை. தந்தையை வென்ற பெருமிதம். தந்தைக்கோ மகனின் நிலைகண்டு பெருமிதம். விமலிடம் ஒரு புத்துணர்வு. எதிலும் என்னால் வெல்லமுடியும் என்ற ஒரு மனத்துணிவு. நல்ல பண்பான, பாரம்பரியங்களை மதித்துச் செயலாற்றும் சந்ததியை உருவாக்கும் திருப்தியுடன் குடும்பம் ஒரு கதம்பமாய், நாளும்நாளும் மற்றவர்க்கும் முன்மாதிரியாய் வாழ்ந்து செல்கின்றது சேகர், ரேவதி குடும்பம்.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 ☞ கத்தி ஒன்று சுத்தி வருது

"மணி பத்தாச்சு, வரவேண்டியவர்களை இன்னும் காணேல்ல. நானும் வேலைக்கு லீவு போட்டுட்டு நிக்கிறன். போனும் எடுகேல்ல, என்ன பிரச்சன இம்" என்றவாறே யோசித்த குமார், அங்குமிங்கும் நடக்கிறதும், வழியை வழியைப் பாக்கிறதுமாக அவதிப்பட்டுக்கொண்டிருந்தான்.

மகளை வெளிக்கிடுத்தியபடியே தானும் கொஞ்சம் வெளிக்கிட்டு, செய்து வைத்த பலகாரத்தை எல்லாம் திரும்பவும் ஒருதரம் சரிபாத்துத் திரும்பிய ராணிக்கும் மகள் ராதாவுக்கும் அப்பாவின் ஆதங்கம் புரிய, இவர்களும் சிந்திக்கத் தொடங்கினர்.

குமாரின் குடும்பம் ஒரே புதல்வியுடன் அரச உத்தியோகத்தனாக, சிக்கனமாக, ஒருவருக்கும் ஒரு குறையுமில்லாமல் வாழ்க்கை இனிதே நகர்ந்தது. தற்போது மகளுக்கு மாப்பிள்ளை பார்க்கும் படலத்தில், வெளிநாட்டு மாப்பிள்ளை ஒருவர் பெண்பார்க்க வருவதாக ஏற்பாடு. சொன்ன நேரம் கடந்தும் இன்னும் வராததாலேயே இந்தப் பதட்டம். சமுதாயத்தில் எவருக்கும் இடைஞ்சலில்லாமல், எவரோடும் பகை வளர்க்காமல் ஓடிக்கொண்டிருந்தது குடும்ப வாழ்க்கை. இருந்தும் இவர்களிடத்தில் அன்பு காட்டுபவர்கள் போல் பொறாமை கொண்டவர்களும் இருக்கத்தான் செய்தனர்.

அதே தெருவில் நாலு வீடுதள்ளி மதனும் மனைவியும் சாடிக்கேத்த மூடியாய் இருபிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தனர். மூத்தமகன் வெளிநாட்டில் அகதியாய்ப் பதிந்து வாழ்கிறான். இளையவள் படித்துவிட்டு வீட்டோடு உள்ளாள். இவர்களின் நடவடிக்கைகள் எந்நாளும் குமார் குடும்பத்துக்கு இடைஞ்சலாகவே இருக்கும். குமாரின் மகளுக்கு வரும் வெளிநாட்டு மாப்பிள்ளையைத் தன் மகளுக்குத் திருப்பும் முயற்சியிலேயே மதன் ஏதாவது செய்திருக்கலாம் என்ற சந்தேகம் ராணிக்கு இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ஒன்றுமே நடக்காததால் மனமுடைந்தாலும் இதிலும் ஏதோ நன்மை இருக்கும் என்றவகையில், ஒழுங்கு செய்தவரைத் தொடர்பு கொண்டபோது, ராதாவைப்பற்றி தவறாகக் கேள்விப்பட்டதால், அவர்களுக்கு இதில் விருப்ப மில்லை என்ற உண்மை புரிந்தது. மகளுக்கும் ஆறுதல் சொல்லித் தெய்வத்திடம் பழியைப் போட்டு அமைதியாகினர். காலம் பாடம் சொல்லுமென்று காத்திருந்தவர்களுக்குக் கண்முன்னேயே அதே மாப்பிள்ளை மதனுக்கு மருமகனா னதும், மகள் அடுத்த மாதமே வெளிநாடு சென்றதும், இதை மதன் ஊர்முழுக்கத் தம்பட்டமடித்ததும் அடுத்தடுத்து நடந்து முடிந்தாலும், தற்போது செய்தி ஒன்று மெல்லக் கசியத் தொடங்கியது.

மாப்பிள்ளை ஏற்கனவே வெள்ளைக்காரியைத் திருமணம் செய்து பிள்ளையும் இருக்காம். இதனால் மதனின் மகளுக்கு ஒரே பிரச்சனையாம். துளியும் சந்தோசம் இல்லாமல் ஏன் வாழ்வான் என, ஒருமுறை தற்கொலைக்கும் முயன்றாளாம். இப்போது முடியாதென ஊர் திரும்பப் போறாளாம். சீதனம் என்ற பெயரில் மதனின் வீடுவளவு, நகை பணம் எல்லாம் மாப்பிள்ளை வசமானபின் இப்போ ஏதிலியாய் மதன்.

இவைகளை அறிந்த குமார் குடும்பம் தாங்கள் தப்பியது இறைவன் செயல் எனமகிழ்ந்தனர். கெடுவார் கேடு நினைப்பார் என்ற முதுமொழிக்கிணங்க நண்பர்கள் சொன்ன “நீ வீசும் கத்தி உன்னையே சுத்திவரும்” என்ற உண்மை மதன் விடயத்தில் உண்மையானது புரிந்தது.

தனது குடும்பமும் மகளும் காப்பற்றப்பட்டாலும், தாய் தகப்பனின் கெட்ட எண்ணத்தால், வாழ்வைப் பறிகொடுத்த அந்தப் பிள்ளையின் மேல் குமாருக்கு ஓர் ஆதங்கம் இருந்தது உண்மையே.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 ☞ குப்பையில் ஒரு கோமேதகம்

"என்னங்க கொஞ்சம் வண்டிய ஓரமா நிறுத்துங்க. வண்டியில் வெற்றுப்போத்தல்கள், சாப்பாட்டுக் கடதாசிகள், பழக்கோதுகள் எனக்கொஞ்சம் கழிவுகள் இருக்கு, அதோ அந்தக்குப்பை மேட்டில போட்டிட்டு வந்திடுறன்" என்றபடியே நிறுத்திய வண்டியில் இருந்து இறங்கிப்போன காவேரி, தன்னளவு உயர பொலித்தீன் பையுடன், தள்ளாடி விழப்போன ஒரு சிறுவனைக் கைத்தாங்கலாகப் பிடித்து அமரச்செய்தாள்.

"என்னப்பா என்ன செய்யுது" என்றவாறு மெல்லத் திரும்பி "அந்த தண்ணீர்ப் போத்தலைக் கொண்டுவாங்கோ" என வண்டியிலிருந்த தன் கணவன் கணேசனை அழைத்தாள். அந்நிலையிலும் தன் பையைக் கைவிடாத அந்தச்சிறுவன் "பசிக்குது, பசிக்குது" என முனகிக் கொண்டான். அச்சிறுவனுக்குத் தண்ணீர் பருக்கி,

"வாப்பா, வண்டியில ஏதாவது இருந்தா தாறன்" என்று அவனையும் அவன் பையுடன் அழைத்துச் சென்றவள், பண் ஒன்றைச் சாப்பிடக் கொடுத்தபடியே "பாவம் பையன், இந்த சின்ன வயசில இப்படி ஏனப்பா, உனக்கு யாருமே இல்லையா ஏன் இப்படி"? அவனது பையில் வெற்றுப்போத்தல்களும், பிளாஸ்ரிக் பொருட்களும் கொஞ்சம் இருந்ததை அவதானித்த படியே கேட்டாள் காவேரி.

"அம்மா, அப்பாவ நான் பார்த்ததே இல்ல, பாட்டி யோடதான் இருந்தனான். நான் பிறந்த ராசி சரியில்லையாம், அதுதான் அம்மா, அப்பாவ அரை வயசில கொண்டு போட்டுதாம். எல்லாரும் என்னத் தள்ளிவைச்சுப் பழி சொன்னாங்களாம். அதுதான் பாட்டி என்னத் தனிய வளத்தவா. அவவுக்கும் யாருமில்ல, அவவும் இறந்துபோக நான் இப்படி இதில ஏதாவது பொறுக்கி வித்து, அதில கிடைக்கிறத்தில சாப்பிடுறனான். இண்டைக்கு ஏதுமில்ல அதுதான் பசி. நன்றிங்க அம்மா, ஐயா நான் போறன்" என்று எழுந்தவனை,

"பொறடா தம்பி, அப்ப எங்க தங்கி இருக்கிறாய்"? என்ற கணேசனின் கேள்விக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொஞ்சத்தூரம் போனா ஒரு கடைத்தெரு, அங்க கொஞ்சப் பிச்சைக்காரர் இரவில படுப்பினம், அவயளோட நானும் படுத்தெழும்புவன்" பரிதாபமாகப் பார்த்த காவேரியின் கணவன் பையை வாங்கிக்கொண்டு "நீ வாடா எங்களோட தங்கலாம், நாங்கள் உன்னப் பாப்போம்" என அழைத்தவருக்கு,

"ஐயோ வேண்டாம், நான் ராசியில்ல, என்னச் சேர்த்தீங்கள் எண்டா உங்களுக்கும் ஆபத்துத்தான், வேண்டாம் ஐயா" என்று பெரிய தோரணையில் கதைத்தான் பையன்.

"இல்லை, இல்லை. அதெல்லாம் ஒண்டுமில்ல. நாங்கள் இருவரும் தனியத்தான். கடவுள்தான் உன்ன சந்திக்க வைச்சிருக்கிறார். நாங்களிப்ப கோவிலுக்கு ஒரு வேண்டுதலுக்காகப் போய்கொண்டு இருக்கிறோம். நீயும் வா" எனக் கட்டாயப்படுத்தித் தங்களுடன் அழைத்துச் சென்றார்கள் அவர்கள்.

காவேரியும், கணேசனும் ஓய்வுபெற்ற அரச அலுவலர்கள். இவர்களுக்கு ஒரே மகள் லக்சனா. படிப்புகள் முடிந்ததும், வெளிநாட்டு மாப்பிள்ளை ஒருவருடன் திருமணமாகி, ஒருவருடம் இவர்களுடன் இருந்தவள், கணவனுடன் அங்கேயே சென்றதால், இவர்கள் இருவரும் தனியாகவே வாழ்ந்து வருகிறார்கள். இருவரது ஓய்வூதியத்துடன் தானதர்மம், கோவில் குளம் என வாழ்க்கை ஓடுகின்றது. கோவில் சேர்ந்தவர்கள், பையன் கண்ணனைக் குளிக்க வைத்து, ஆடைகள் மாற்றி வேண்டுதலோடு இவனையும் உறவாக்கிக் கொண்டனர். மூன்றாம் வகுப்புடன் படிப்பை நிறுத்தியவனை, மீண்டும் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்ததுடன், இருவராக இருந்த உறவு மூவராகி மகிழ்வில் நகர்ந்தது காவேரி கணேசன் குடும்ப வாழ்வு.

மிகவும் பணிவும் பக்குவமும் கொண்ட கண்ணன், பல நற்பண்புகளுடன் கல்வியிலும் ஆர்வத்துடன் வளர்ந்து வந்தான். காலம் தன் கடமையைச் செய்ய, வயோதிபகாலத்தில் கணேசனுக்குப் பக்கவாத நோய் ஏற்பட்டு, ஒரு கையும் காலும் வழங்காமல் போனது. வைத்தியசாலை வீடென மாறிமாறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்வர வேண்டியதாயிற்று. இந்நிலையில் காவேரியும் தனித்திருந்திருந்தால்? எல்லாம் இறைவன் சித்தம்தான் என மனதில் நினைத்த வண்ணம், கண்ணனின் கைத்துணையுடன் காரியங்களை நடாத்தி வந்தாள் காவேரி. கணேசனுக்கு ஒரு சத்திர சிகிச்சை செய்யவேண்டி வந்தபோதும், அவரது இரத்த மாதிரி வைத்தியசாலையில் இல்லாமல் அவதிப்பட்டபோது, கண்ணனின் இரத்தம் பொருந்திப்போகவே அதுவும் நல்லபடி முடிந்தது. ஒவ்வொரு நகர்விலும் கண்ணன் கடவுளாகவே அவர்களுக்குத் தென்பட்டான்.

சத்திரசிகிச்சையின் பின், அவருக்கு இயன் மருத்துவ சிகிச்சைமுறை வழங்கப்பட்டு அதைத்தொடர அறிவுறுத்தப் பட்டது. அதற்கான பயிற்சி முறைகளையும் பழகிக்கொண்ட கண்ணன் அவரது முழுத்தேவைகளிலும், அவரைக் குளிப்பாட்டி, இயற்கைக்கழிவுகள் எல்லாம் அருவருப்பின்றி அகற்றி, அத்தனை வேலைகளையும் பெற்ற பிள்ளையாக இருந்து பார்த்தான். நாளடைவில் உணர்வுகள் மீட்டப்பட்டு, கையும் காலும் இயல்பாகச் செயற்படத் தொடங்கியது. வைத்தியசாலையிலும் கண்ணனின் செயற்பாட்டை மெச்சிய வைத்தியர் "இவ்வளவு சீக்கிரம் சரிவரும் என எதிர்பார்க்க வில்லை. இப்போது எல்லாம் சரி, இன்னும் ஒரு மாதம் பயிற்சியைத் தொடர்ந்தால் போதும்" என அனுப்பி வைத்தார்.

காவேரிக்கும் கணேசனுக்கும் ஒரு தெய்வமாகக் காட்சிப்பட்ட கண்ணன், அன்று அக்குப்பை மேட்டில் கிடைத்த கோமேதகம் ஆனான். இப்போது கண்ணன் பல்கலைக்கழக இறுதி ஆண்டுத் தேர்வுக்காகக் கண்ணும் கருத்துமாகப் பயின்று வருகின்றான்.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 ☞ கூட்டுக்குடும்பம் ஒரு பூந்தோட்டம்

பார்வதிப் பாட்டி தாம்பூலத்தட்டை மெல்ல இழுத்து, அதிலிருந்து வெற்றிலை பாக்கை எடுத்து உரலில் போட்டு இடிக்கத் தொடங்கினாள். இச்சத்தம் கேட்டதும் மீரா, ரோஜா, ரவி, மோகன் என நாலு பிள்ளைகளும் ஓடிவந்து பாட்டியின்முன் அமர்ந்துகொண்டு "இம், இண்டைக்கு என்ன கதை பாட்டி" என்று ஆர்வத்துடன் வினவினர்.

"இண்டைக்குப் பேராசை பெருங்கேடு என்பதற்கு ஒருகதை சொல்லப்போகிறேன்" என்று ஆரம்பித்தாள் பாட்டி. அக்கிராமத்தில் பரந்தாமன், பார்வதி தம்பதியினர் நீண்ட காலமாகவே வாழ்ந்து வருகின்றனர். நாற்சார வீடும், அதனோடிணைந்த பண்ணையும், வயலுமென விவசாயத்தை நம்பிய குடும்பம். பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த வீட்டை, முறைக்குமுறை புனரமைத்து நவீன வசதிகளுடன் வாழ்கின்றனர். பரந்தாமனுக்கும் பாட்டிக்கும் இரண்டு ஆண், இரண்டு பெண்ணென நான்கு பிள்ளைகள். முதல் மூவரும் முறைப்படி திருமணம் செய்துகொள்ள, இளையவன் சந்திரன் மட்டும் திருமண வயதில் அரச உத்தியோகத்துடன் வலம் வருகிறான். மூத்தவள் ராதிகாவின் பிள்ளைகள் மீராவும், ரவியும், இளையவள் நிவேதாவின் மகன் மோகனும், சரவணனின் மகள் ரோஜாவுமாக நான்கு குட்டிகள் மட்டுமல்லாது, பரந்தாமன் பார்வதியுடன் மூன்று பிள்ளைகளும் அவர்களின் துணைகளும், இளையவன் சந்திரனென பதின்மூன்று பேரும் ஒன்றிணைந்து ஒரே வீட்டில் கூட்டுக்குடும்பமாகவே வாழ்ந்து வருகிறார்கள்.

சரவணன், தன் தந்தை பரந்தாமனுடன் பண்ணை நிர்வாகம் வயல் வேலைகளெனவும், ராதிகா மாவட்டச் செயலகத்திலும், கணவன் தனியார் நிறுவனமொன்றில் பதவிநிலை உத்தியோகத்தராகவும், நிவேதாவும் கணவனும் ஆசிரியர்களாகவும், சந்திரன் பிரதேசச் செயலராகவும் கடமைகள் புரிந்து வருவதால், இவர்கள் அனைவரும் இரவிலேயே சந்தித்து ஒன்றாக உணவருந்துவது வழக்கம். அண்ணன் சரவணனின் மனைவியும், பாட்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுவேலைகளுடன் சமையலையும் உதவியாட்களுடன் சேர்ந்தே செய்வதால், ஒரே குடும்பம் ஒரே சமையலென வேறுபாடுகளின்றி, நான்கு குடும்பமும் நாற்சாரவீட்டினுள் நகரீகமாக வாழ்ந்து வருவது மற்றவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தாலும், ஊரில் இவர்களுக்கென ஒருமரியாதை இருந்தே வந்தது.

அவ்வப்போது சிறுசிறு குழப்பங்கள், விவாதங்கள் வரும், ஆயினும் அன்றைய இரவு சாப்பாட்டு நேரத்தில் கலந்துபேசித் தீர்ந்தும்விடும். எங்கு பிழை? எப்படி நடந்தால் இப்படி வராது, யாருடன் யார் போட்டி? எல்லாம் ஒரே இரத்தம், இப்படியான பாட்டியினதும் பரந்தாமனதும் ஆலோசனை அறிவுறுத்தல்களுடன் நிலமையைப் புரிந்து, ஒவ்வொருவரும் சமாதானமாகிக் கொள்வதில் அவர்களுக்கு நிகர் அவர்களேதான். நாற்சார முற்றத்தில் நான்கு குடும்பமும் கூடியிருந்து, கதைத்துப் பேசி மகிழ்ந்து கொள்வதில் பட்டதுன்பங்கள், வேலைப்பளுக்களெல்லாம் பறந்தே போய்விடும். பிள்ளைகளுக்குக் கூட ஒவ்வொருவரும் சகல பாடங்களையும் கற்றுத்தருவதனால் அவர்களும் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லவேண்டிய தேவையுமில்லை. சகலரது எல்லாத்தேவைகளும் எவ்வித பாகுபாடுமின்றி நிறைவேற்றப்படுவதுபோலப் பாகுபாடின்றிப் பணமும் பரிமாறப்படுவதும் உண்மை.

நன்மையோ, தீமையோ ஒரு குடும்பமாகி, உறவுகளும் நண்பர்களுமாகச் சேரும்போது பெருங்கூட்டமாவதும் உண்டு. இந்நிலையில் சந்திரனுக்கும் பெண்பார்க்கும் படலம் ஆரம்பமானது. அண்ணன், அக்காமாரென அறிந்தவர்களிடம் சொல்லியும் வைத்திருந்தனர்.

ராதிகாவுடன் கடமைபுரியும் குமாரி, வயதில் முதிர்ந்தவள் என்றாலும், ராதிகாவுடன் நல்ல நட்புறவை வளர்த்துக் கொண்டவள். பட்டணத்தில் வாழ்ந்தாலும் பகட்டில்லாமல் பந்தபாசத்துக்கு ஏங்குபவள். இருந்தும் கிடைத்த வாழ்க்கையில், கணவனும் மாமியாரும் எதிலும் இவளிடம் குறைகாண்பதிலும், குதர்க்கம் பேசுவதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலானவர்கள். கணவன் குடிப்பழக்கத்துடன் தற்பெருமை பேசி, தன்னைப் பெரியவனாக நிலைகாட்டுவதில் வல்லவர். இருந்தும் குமாரி, தனது ஒரே மகள் செல்வியை மிகவும் கவனமாக வளர்த்து வருகிறாள். செல்வி கல்லூரிப்படிப்பை முடித்து, வேலைகளுக்கான நேர்முகத் தேர்வுகளை எதிர்கொண்டு வருகிறாள். குமாரி தனது மனக் கிடக்கைகளையும், வீட்டு நிலமைகள், தன் எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்களையும் ராதிகாவுடன் பகிர்ந்து கொள்வதில் ஆறுதலடைவதும் வழக்கம்.

ராதிகாவின் நீண்டநாள் அழைப்புக்கிணங்க, கணவன் மாமியாரின் அனுமதியுடன் விடுமுறையில், இரண்டு நாட்கள் ராதிகாவின் வீட்டிற்குச் சென்றனர் குமாரியும் செல்வியும். பண்ணையிலும் வயல்களிலும் எல்லோருமாக வேலை செய்வதும், இவர்களது குடும்ப நடைமுறைகளும், ஒரே சமையல், ஒரே குடும்பமாக முற்றத்தில் கூடிப்பேசுதல், மாமன் மாமி, மருமக்கள், பேரன், பேத்தி ஒற்றுமைகளைப் பார்த்த குமாரிக்கும் செல்விக்கும் இவ்வளவு பேரும் ஒன்றாக, ஒரே குடும்பமாக, மகிழ்ச்சியாக வாழ்வது சாத்தியமாகுமா என எண்ணியவர்களுக்கு, காட்சிகள் கண்முன்னே நிதர்சன மானதும் தம் கண்களையே நம்பமுடியாது போனது உண்மைதான்.

குமாரி, ராதிகாவுக்கு அடிக்கடி சொல்லுவாள். செல்விக்கு என்போலில்லாமல் புரிந்துணர்வான கணவனும் உறவுகளும் கிடைக்கவேண்டும் என்று. இவர்களின் குடும்ப நிலையைக் கவனித்த குமாரிக்கு சந்திரன்மேல் கண்பட்டது. எந்தத் தயக்கமும் இல்லாமல் நேரடியாகவே இதுபற்றி ராதிகாவிடம் கேட்டேவிட்டாள். அன்றிரவு முற்றத்தில் திருமணப்பேச்சு முடிவானது. குமாரியின் கணவனதும் மாமியாரதும் சம்மதமும் கிடைத்ததில் குமாரிக்கும் மகிழ்வானது. அடுத்த மாதமே அனைவரின் ஆசியுடன் சந்திரன், செல்வி திருமணம் சீரும் சிறப்புமாக நடந்தேறியது. திருமணத்தின்போது எடுக்கப்பட்ட கூட்டுக்குடும்பப் புகைப் படத்தைப் பார்க்கும் போதெல்லாம், அது ஒரு அழகிய பூந்தோட்டமாகவே தெரிந்தது அனைவருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 பரிசு

"விலத்துங்கோ, விலத்துங்கோ, அக்சிடன்ட் போலக் கிடக்கு, டேய் மச்சான், ஸ்ரெச்சரைக்கொண்டு வாடா" கத்தியபடியே சனக்கூட்டத்தை ஊடறுத்து, வாசலுக்கு விரைந்தான் போதனாவைத்தியசாலை ஊழியன் ஒருவன். ஒபிடியில் திடீர்க்கூட்டம், வாசலில் நின்ற ஓட்டோவில் இருந்து வயோதிபர் ஒருவர் தலையில் இரத்தப்பெருக்குடன் இறக்கப்பட்டு, ஓட்டோ சாரதியுடன் மிக அவசரமாக அட்மிசன் றூமுக்குள் கொண்டு செல்லப்படுகின்றார். அவருக்கோ சுயநினைவில்லை. வைத்தியர் பார்வையிட்டு நோய் நிலைகளைப் பதிந்து "பெயர் என்ன, யார் கொண்டு வந்தது, ஒரே பிளீடிங்காயிருக்கு, உடனேயே வாட் 24க்கு கொண்டு போங்கோ" என அவசரப்படுத்தவும்,

"நான்தான் கொண்டு வந்தனான். எனக்குப் பெயர் தெரியாது. நான் வாற வழியில செம்மணி றோட்டில, ஆரோ அடிச்சுப்போட்டு நடுறோட்டில் விட்டிட்டுப்போட்டாங்கள். நான் பாத்திட்டு என்ர ஓட்டோவில் ஏத்திக்கொண்டந்தனான்." என்றான் ஓட்டோ சாரதி சிவம்.

கூடி நின்றவர்கள் "ஓம், ஓம் நல்லாகதை விடுகிறான், இவனே தட்டிப் போட்டு, இப்ப ஒன்றும் தெரியாத மாதிரி நடிக்கிறான் பார்" என்ற பேசிக்கொள்வதும் சிவத்தின் காதில் விழுகிறது "அப்ப உங்கட பெயர் விலாசத்தைச் சொல்லுங்கோ" என்று கேட்டு எழுதியவர், ரிக்கட்டைக் கொடுத்து அனுப்பினார். பாவம் பார்த்த மனசு, தனது உறவுபோல காயப்பட்ட முதியவரைப் பதிவுசெய்து, வைத்தியசாலைப் பணியாளருடன் விடுதிக்கு அனுப்பிவிட்டு "யாரோ பாவம் என்ன நடக்குமோ, என்னால் முடிஞ்சத செய்திருக்கிறேன். அதில ஒரு திருப்தி" என மனதுக்குள் நினைத்துத் தன்னையே தான் திருப்திப்படுத்திக்கொண்டு வெளியேறினான்.

வீட்டில் தனது வழமையான வேலைகளை முடித்துக் கொண்டு, ஓட்டோவைச் சுத்தப்படுத்திக்கொண்டிருக்கையில் வீட்டு வாசலில் பொலீஸ் ஜீப்வந்து நின்றதும், அதிலிருந்து பொலீஸ்காரர் அவசரமாய் இறங்கிவந்ததும் "சிவம் என்றால் யாரு நீங்களா?", 'ஓம்' என்று சொல்லவும், "இவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரஸ்பண்ணுங்கள்" என்று மற்றைய பொலீஸ்காரருக்குக் கூடவந்தவன் கட்டளையிடவும், சிவத்தின் கைகளுக்கு விலங்குமாட்டி, ஜீப்பில் ஏத்தவும் நேரம் எடுக்கவே இல்லை.

"ஏன் சேர், என்ன விடயம்" என்பதுக்குள் "ஆளையும் அடிச்சுப்போட்டு, ஏதும் தெரியாதவன்போல கொஸ்பிட்டலிலையும் அட்மிட் பண்ணிட்டு, ஒன்றும் தெரியாதவன்போல தப்பிவாறது என்ன?". அவன் போய்ச்சேந்திட்டான் இப்ப நீ மாட்டிட்டா, போய் உள்ள இரு சரியா", என முதுகில் பிடிச்சுத்தள்ளவும், ஒன்றுமே செய்யமுடியாதவனாய் சிவம் ஜீப்பில் ஏறிக்கொண்டான். வயசான தாயும் தகப்பனும், ஒரே ஒரு தங்கச்சியும் என்ன என்று வெளியில் வரவும், ஜீப் புறப்படவும் நேரம் சரியாய் இருந்தது. பக்கத்து வீட்டுக்காரர் வேலிக்கிளாலும், முன்வீட்டுக்காரர் றோட்டு வாசலுக்குள்ளாலேயும் எட்டிப்பார்த்துப் புதினம் தேடுகின்றனர். இவர்களோ ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து முளிச்சுக்கொள்ள, தங்கை ரதியோ 'அண்ணா' என அழத்தொடங்கிவிட்டாள்.

சிவமும் தங்கையும், தாய் தகப்பனுடன் நால் வருமே தனிக்குடும்பம். விவசாயத்தை நம்பி வாழ்ந்தவர் களுக்கு இப்போ வயசான காலத்தில் மூத்த மகன் சிவத்தின் ஒட்டோ தொழிலும், விவசாயமும் சேர்ந்து வாழ்க்கையைச் சமாளிக்கிறது. ஓ/எல் வரையும் படித்தவனுக்குப் படிப்பு மேலிடாததால், அவன் விரும்பிய படியே லீசிங்கில் எடுத்த ஓட்டோ, தங்கையின் படிப்பிற்கும் சேர்த்து உதவுகிறதே உண்மை நிலை. பண்பும் பணிவும், மற்றவர்க்கு உதவும் மனிதநேயமும் கொண்டவனாதலால், எல்லோராலும் விரும்பப்படுகின்றவனாயும், சமூகத்தில் நற்பெயரைச் சம்பாதித்தவனாயும் இருந்தான் சிவம்.

"வயோதிபர் மரணம், ஆட்டோ சாரதி ஓட்டம் அடையாளம் காணச் சவச்சாலையில் இறந்தவரின் சடலம்" என்ற தலைப்பில் பத்திரிகைச் செய்திகள். யாழ் பொலீஸ் தடுப்புக் காவல் பிரிவில், மாறி மாறி வந்த விசாரணைகளுக்கு, விபரம் சொல்லியும் சிவத்தை சந்தேகத்திலேயே பொலீஸ்காரரைத்தவிர, குடும்பத்தினர் உறவுகளைவிட மற்றவர்களும் பார்த்துக் கொண்டனர்.தான் செய்யப்போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்காக்கும் மனித நேயச்செயலுக்கு கிடைத்த பரிசு இதுதானா? சீ, என்ன உலகம்? என்ன மனிதாபிமானம்? மனதுக்குள் சலித்துக் கொண்டாலும், மனம் ஒரு நிலையில் இல்லாமல் வீட்டு உறவுகளையும், அவர்தம் நிலைகளையும் நினைத்துக் கண்கலங்கக் கவலையில் ஆழ்ந்தான் சிவம்.

தனது அன்றைய வாடகைச் சவாரியை முடித்துக் கொண்டு கைதடியில் இருந்து செம்மணியூடாக யாழ் நோக்கிவரும் வழியில், தனியாக வீதியில் காயப்பட்டுத் துடித்துக் கொண்டிருந்தவரைக் கண்டும் காணாதது போல் எப்படி வரமுடியும்? எதையும் யோசிக்காமல் காயப்பட்டுக் கிடந்தவரின் உயிரைக்காக்க வேண்டும் என்ற உயரிய ஆதங்கத்தில் நான் செய்த உதவி, இப்படி என்னை அந்தரத்தில் விடும் என்று நினைத்திருந்தால், மற்றவர் போல் கண்டுகொள்ளாமலே விட்டிருக்கலாம் என்றும் எண்ணினான் சிவம். என்ன இருந்தாலும் எனது மனச்சட்சிக்கு நான் செய்தது நூறுவீதம் சரியே. இருந்தும் மனச்சாட்சி இல்லாத சமூகம் என்னைக் கிரிமினலாய்ப் பார்ப்பதைத்தான் என்னால் ஏற்க முடியவில்லை. எந்த நாளும் ஒருவனை அவன் செய்த செயலை நல்லதென நினைக்காமல், அதில் பிழை கண்டுபிடித்து அதைக் கெட்டதாக்கி, மானத்தை வாங்குவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறது இந்தச்சமூகம். இதன் அர்த்தம்தான் என்ன? எனத் தன்னுள்ளேயே புளுங்கிக் கொண்டான் சிவம்.

மறுநாள் சிவம் நீதிபதி முன்னால் ஆஜராகினான். பொலீஸ்தரப்பில் விளக்கப்பட்ட விபரங்களுக்கு இணங்க, வேறு சாட்சிகள் இல்லாமையால் சந்தேக நபராகத் தீர்மானித்து, சிவத்துக்கு விளக்கமறியலே தீர்ப்பானது. என்னதான் முயன்றும் அவனை அவனாலேயே காத்துக் கொள்ள முடியவில்லை. வீட்டிலிருந்து அம்மா அப்பா, தங்கை வருவதும், அப்பப்போ உறவுகள் வருவதும், பார்த்துப் பேசுவதும் தப்பில்லாமல் நடந்து கொண்டே இருந்தது.

"உனக்கேன் தேவையில்லாத வேலை அடிபட்டுக் கிடந்தால் பாத்திட்டுப்போக வேண்டியதுதானே, இப்ப பாத்தியா, உன்ர மனிதாபிமானச் செயலுக்குக் கிடைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசு" இப்படி எத்தனையோ பேச்சுக்கள். நான் செய்தது சரியான செயல் என்றாலும், இப்படிக் கஸ்டப்படும்போது இவர்கள் பேசுவதுபோல் இருந்திருந்தால், இந்தக்கஸ்டம் வந்திருக்காதே எனவும் சிந்தித்தான் அவன். அவனின் நல்ல மனசை ஆண்டவன் தவிர யார் புரிவார்.

ஒரு நாள் காலை சிறைக்காவலாளி ஒருவனால் அழைக்கப்பட்டு ஒருவர் முன் நிறுத்தப்பட்டான் "பயப்படாதே, நான் உன்னைப் படிப்பித்த தர்மினி ரீச்சரின் கணவன், சட்டத்தரணி. உன்னைப்பற்றி அவ சொல்லக்கேட்டு, உன் பழக்கவழக்கங்கள், பள்ளிப்பருவத்தில் உன் நடத்தைகள் பற்றிச்சொல்லி, ஒரு நல்ல பெடியனுக்கு இப்படி ஒரு நிலை வந்தது பற்றி நிறையவே கவலைப்பட்டாள். அதுதான் உன்னைப்பற்றி விசாரித்து உனக்கு உதவிசெய்யலாம் என்று வந்தனான். நடந்ததைச் சொல்" என்றார் அவர்.

அவனுக்கு கண்கள் கலங்கிவிட்டது தர்மினி ரீச்சரின் முகம் கண்ணுக்குள் வந்து போனது. பாடசாலை காலத்தில் ரீச்சர் செய்த உதவிகளும், என்னில் வைத்த அன்புக்கும் இன்று இப்படியான உதவிக்கும், நினைத்துப்பாரக்க முடியாமல் நா தளதளக்க நடந்தவற்றைக்கூறி "இப்படி நடக்கும் என்று தெரிந்திருந்தால் நான்" என விம்மி நிறுத்திக்கொண்டான். "அம்மா, அப்பா, தங்கச்சி" என்று அழவே ஆரம்பித்து விட்டான். மாதங்கள் இரண்டாகியும் சிவத்தின் கதைக்கு முடிவே கிடைக்கவில்லை.

ஒரு நாள் மாலை வழமைபோல் காவலாளி வந்து, நாளைக்கு கோட்டுக்குப் போபவர்களின் பெயர்ப் பட்டியலை வாசித்தான். அதில் சிவத்தின் பெயரும் இருந்தது. நம்பிக்கையுடன் சிவம் தர்மினி ரீச்சரைக் கடவுள்போல் நினைத்துக் கொண்டான். அவன் நம்பிக்கை வீண்போகவில்லை, சட்டத்தரணி பேசி அவனுக்கு விடுதலை கிடைத்து விட்டது. உண்மை உலகிற்கு மெல்ல மெல்லப்புரிய வந்தது. இருந்தும் பொய்யை நம்பும் சமுதாயம் மெய்யை நம்பக்கஷ்டப்பட்டது, நேரம் எடுத்தது, பத்திரிகைச் செய்திகளும், வாசகர் திருமுகங்களிலும், உதவிக்கு கிடைத்த உபத்திரவம் என எழுதியும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவம் மனதுக்குள் நினைத்துக்கொண்டான். அவனவன் விதி அவனவன் கைகளில்தான் என்று இருந்திட வேண்டியதுதான். நான் உண்டு, என் வேலை உண்டு என இருந்திருந்தால் இந்த நிலை வந்திராதே, மனித நேயத்துக்கு மனிதரிடையே நல்ல மதிப்பு, காலம் கடந்து ஒருநாள் வழமைபோல் வந்த கடிதத்தில் ஓர் அழைப்பும் வந்திருந்தது. தாங்கள் செய்த புண்ணிய, மனிதநேயச்செயலை மெச்சி தங்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, கவர்னர் இல்லத்தில் நடைபெற அழைக்கப்பட்டிருந்தான் சிவம். ஆனால் அவன் மனது இதற்குச் சம்மதிக்கவில்லை. தான் சிறையில் உள்ளபோது எனது உடன்பிறப்பும், பெற்றோரும் பட்ட துன்பங்களே, நான் செய்த உதவிக்குக் கிடைத்த கௌரவம் என்று அந்நிகழ்வைப் புறக்கணிப்பதென்று தீர்க்கமான முடிவெடுத்துக் கொண்டான். இருந்தும் அன்று கோட்டில் சட்டத்தரணி பேசிய பேச்சுக்கள் அவன்காதில் மீண்டும், மீண்டும் ஒலித்து, அவன் பட்ட கஷ்டத்துக்கு நட்டஈடு போலானது.

"விழுந்த பாட்டுக்குச்சுடுவதல்ல குறி, குறிப்பிட்ட இடத்தில் போடுவதே குறி. இவ்வாறு தான் சட்டமும் மிக நுணுக்கமாக ஆராய்ந்தறிந்து தீர்ப்பிடும். அதுமட்டும் யாரும் குற்றவாளிகளல்ல, குற்றம் சுமத்தப்பட்டவரே. ஒரு நல்ல மனிதப் பண்பு. இன்னொரு உயிரின் இன்னல்களில் கை கொடுப்பதுதான். அதைத்தான் இவனும் செய்தான். ஆனால் சாட்சிகள் இல்லாததால் சந்தேகம் வந்தது, எவனோ ஒருவன் மிருகமாய்ச்செய்த செயலால் வந்த விளைவு."

மனிதனாய்ப் பார்த்துச் செயற்பட்டவனுக்குக் கிடைத்த அனுபவம் இது. இப்படி நடக்கும் என்பதால்தான் யாழில் பல உயிர்கள் நடுத்தெருவிலேயே போய்ச்சேருகிறது. உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாமல் மகான்களாக மறைகின்றனர். காப்பாற்றப் போகிறவர்கள் கள்வர்களாகிறார்கள். சமூகம் அதைத்தான் நம்புகிறது. மறுபக்கமும் கொஞ்சம் யோசித்தால் என்ன தவறா? இச்சமூக நிலமை மாறவேண்டும். மனிதனை மனிதனாய் மதிக்கும் நிலை தோன்றவேண்டும். இல்லையேல் எம் சமுதாயத்தை யாராலும் காப்பாற்றவே முடியாது. எமது சமூகம் சிதைவடைவதை யாராலும் தடுக்கவும் முடியாது என்பதே உண்மை, மெல்ல மனதுக்கள் சிரித்துக்கொண்டான் சிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 ☞ பட்டதாரியின் வாழ்க்கைப் பயணம்

வழமையான பரபரப்புடன் ரகுவின் இயற்கை விவசாயப்பண்ணை இயங்கிக் கொண்டிருந்தது. பால், முட்டை, இறைச்சிக்கோழிகள், பழங்கள் என விநியோகப் பிரிவிலும். புற்கள், தீவனங்கள் என சேமிப்புப் பிரிவிலும் போவதும் வருவதுமாக இருந்தது. மேலும் கால்நடைக் கழிவுகள், பண்ணைப்பகுதியிலிருந்து சேதனப்பசளையாகத் தனியாக விநியோகம் செய்யப்படுகின்றது.

ரகுவின் நிர்வாகத்தில், அலுவலக ஊழியர்களுடன் பண்ணைப்பராமரிப்பு வேலையாட்களும் சேர்ந்து சுமார் ஐம்பது பேர் வரையில் கடமை புரிந்து வருகின்றனர். எந்தவித இயந்திரத் தொழினுட்பமும் இல்லாமல் தீவனங்கள், புற்கள், யாவும் கால்நடைக் கழிவுகளாக, சேதனப் பசளையாக மாற்றப்பட, அகத்துறிஞ்சப்பட்டவை பால், முட்டை, இறைச்சியாக உற்பத்திப் பொருளாகிறது. பெருநிலப்பரப்பில் ஒருபகுதி பண்ணையும் மறுபகுதி புற்கள், பழமரங்களின் வளர்ப்பிடமாகவும் திட்டமிடப்பட்டு செயலாற்றுவதாலும், இயற்கை உணவுகளையும் மூலிகைகளையும் செலவின்றிக் கையாளுவதாலும், சீரான வருமானம் தொய் வில்லாமல் செல்வதோடு, குறிப்பிட்டோருக்கு வேலை வாய்ப்பாகவுமானது அனைவரது கவனத்தையும் கவர்ந்த ஒன்றானது.

ஆனால் இத்தனைக்கும் ரகு பிரமச்சாரியாகவே வாழ்ந்து வருகின்றார். அவரது ஒருபக்கம் இது என்றாலும், மறுபக்கம் சோகம் நிறைந்ததாகவே இருந்தது. சிறந்த பண்புகளும் புத்திக்கூர்மையும் இருந்தும், குடும்ப நிலமை வறுமைக்கோட்டிற்குள் அகப்பட்டதாலும், தாயார் மாற்ற முடியாத நோய்த்தாக்கத்திற்குள் அகப்பட்டதாலும் படிப்பைத் தொடரமுடியாதவன், தந்தையாரின் சிறு கால்நடைப் பட்டியைத் தரமுயர்த்தி, தகுந்த ஆலோசனைகளோடு விவசாயப்பண்ணை ஆக்கியதில் ரகுவின் முழு முயற்சியும் பயன்படுத்தப்பட்டது உண்மையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிப்பருவத்தில் பல கனவுகளுடன் காதலும் கனிந்தது. ரகுவுக்கு மட்டுமல்ல, கலாவுக்கும் மகிழ்ச்சி தான். இருவரும் வெவ்வேறு கிராமம் எனினும், ஒரே கல்லூரியில் பயிலும்போது ஒருவருக்கொருவர் ஏற்பட்ட நட்பு, நாளைடைவில் காதலானதும் அது கண்ணியமாய்த் தொடர்ந்ததும் தனிரகம் தான். ரகுவின் படிப்பு பாதியில் தடைப்பட, கலா தொடர்ந்து முன்னேறிப் பட்டதாரி ஆகிக் கொண்டாள். இருந்தும் இருவரது காதலும் ரகசியமாகத் தொடர்ந்தே வந்தது. கலாவுக்குப் பல்கலைக்கழகத்தில் பல நட்புகள், வசதி படைத்தவர்களின் அன்பு கிடைத்தும், கலாவை அடைந்திட சிலர் முயன்றும் ரகுவின் காதல் கலாவைக் கட்டுப்பாட்டிற்குள்ளேயே வைத்திருந்தது.

கலாவின் படிப்பு நிறைவடைந்து அரச நியமனம் கிடைத்ததும், கலாவிற்குத் திருமண ஏற்பாடு செய்ய பெற்றோர் முற்பட்டபோது, கலா அவர்களிடம் தன் காதலையும், ரகுவை மனதார விரும்புவதையும், தனது வாழ்வு அவரோடுதான் என்பதையும் வெளிப்படுத்தினாள்.

தனது மகள் ஒரு பட்டதாரி என்பதில் தற்பெருமை கொண்டிருந்த பெற்றோரால் இதை ஏற்க முடியவில்லை. “கட்டினால் நீ ஒரு பட்டதாரியைத்தான் கட்டவேண்டும். அதுதான் எனக்கும், எங்கள் குடும்பத்திற்கும் பெருமை” என்று வாதிட்டு நின்றார் கலாவின் அப்பா ரத்தினத்தார். எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்காத அவர் “அப்படி ஒரு பட்டதாரி இல்லாது, பண்ணைக்காரன்தான் வேண்டும் என்றால் என் சாவில் உன் வாழ்க்கையை அமைத்திடு” என ஆணித்தரமாகச் சொல்லி நின்றார்.

விதி வழி வாழ்வென்றதற்கிணங்க, ரகு நிலைமையைப் புரிந்து விலகிக்கொள்ள, ரத்தினத்தாரின் பிடிவாதம் நிறைவேறி ஒரு பட்டதாரியும், தற்போது பிராந்திய உயர் அதிகாரியுமான கோபி என்பவர் கலாவின் கணவனானார். கிடைத்த வாழ்வை வாழலாம் என்ற நம்பிக்கையோடு இல்லறத்தில் இணைந்த கலாவிற்குக் கோபியின் பழக்க வழக்கங்களும், நண்பர்களும் ஓரிரு மாத்திலேயே வெறுப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியது. ஆனால் ரத்தினத்தாரோ, தனது மருமகன் பற்றி நிறையவே எதிர்பார்த்து, மற்றவர்முன் எடுப்பாகப் பேசி, பெருமைப்பட்டுக்கொள்வது தொடர்ந்த வண்ணமே இருந்தது.

மெல்ல, மெல்ல வாழ்வில் விரக்தி அடைந்த கலா ஆறுதலுக்குக்கூட ஆதரவற்றவளாகத் தனிமையில் மிகவும் சிரமப்பட்டாள். தந்தையிடம் வந்து மனதில் அடக்கி வைத்திருந்த உண்மைகளை உடைத்தாள். "பட்டதாரி, பட்டதாரி என்று ஆசைப்படீர்களே அப்பா, அவரது பழக்கவழக்கங்கள் பற்றிச் சரிவர விசாரிக்காமல் அவசரப்பட்டு இன்று என்வாழ்வை அலங்கோலப்படுத்தியது தான் மிச்சம்"

மருமகன் பற்றிச் சில விடயங்கள் ரத்தினத்தாரின் காதுகளுக்கும் எட்டியதுதான். என்செய்வார், மனைவி யிடமோ, மகளிடமோ சொல்ல முடியாமல் தன் அவசரமும், தற்பெருமையும் மகளின் சந்தோசத்தைக் கெடுத்ததை நினைத்து, மனதுக்குள் புளுங்கிக் கொள்வார். இருந்தும் எதுவும் தெரியாதது போல் "ஏன், என்ன?" என்றார்.

எப்படிச் சொல்வது சொல்லித்தான் ஆக வேண்டு மென்று பட்டியலிட்டாள் கலா "மதுப்பழக்கம், பண்பாடற்ற கதைபேச்சுக்கள், இலஞ்சம், இதனால் வீடுவரை பிரச்சினைகள். இன்னும் பிற பெண்களுடன் நெருக்கம் ஒன்று கூட நல்லதென்று சொல்வதற்கில்லை அப்பா" எனக் கொட்டித்தீர்த்தாள்.

"ஒரு பட்டதாரியின் வாழ்க்கைப்பயணம் ஆசைகள் நிறைவேறாத அவலத்திலும். மறுபட்டதாரியின் வாழ்க்கைப் பயணம் இலஞ்சம், குடி கும்மாளம் என்ற வேகத்திலும் ஒன்று சேராப் பாதைகளாகிப் பிரிந்து நின்றதுதான் மிச்சம்" என்றாள் கலா.

ஆனால் ரகுவோ பட்டதாரி இல்லாததால், காதலை இழந்து, நினைவுகளுடன் தனிமையில் வாழ்கின்றான்.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 ☞ பனையை நம்பிய பயணம்

முதற்பிரசவத்திற்காக வைத்தியசாலையில் மனைவியை அனுமதித்து விட்டு வீடு வந்தவன், தன்தாய் தந்த இரவு உணவை உண்டுவிட்டுப் படுக்கைக்குச் சென்றான். நீண்ட நேரமாகியும் தூக்கமின்றி மனைவியையும், பிறக்கப்போகும் தன் முதல் வாரிசையும் பற்றிய சிந்தனையில் சிக்கிச்சுழன்று, விழித்தபடியே இருந்தான் கதிரவேலு.

சுமாரன படிப்பு, கட்டுமஸ்தான உடம்பு, யாருக்கும் தலைவணங்காத சுயதொழில் தெரிவு, தாராள வருமானம் நீதியான சேர்க்கை, நிம்மதியான வாழ்வு. ஆம், கதிரவேலு ஒரு சீவல் தொழிலாளியின் ஒற்றைப்பெடியன். தந்தையின் தொழிலைத் தொடர்த்தவன். தன் இனத்தில் அண்டை ஊரில் பெண் எடுத்துக் கண்ணியமாய் வாழ்கையில், காலனவன் அழைப்பேற்றுத் தந்தையவன் சென்றுவிட, மனைவியும் தாயுமென வாழ்ந்தவனுக்கு, வாரிசொன்று வரும் மகிழ்வில் நாட்கள் மெல்ல நகர, பிரசவத்திற்காய் மனைவியை அனுமதித்தவன் தூக்கம் தூரநிற்க, அவன் பழைய நினைவுகள் பக்கங்கள் புரட்டின.

தன் இளமைப்பருவத்தில் தந்தையின் காலத்தில் சீவல்தொழில் அவன் குலத்தொழிலானது. அப்போது அதை அவ்வளவு கேவலமானதாக யாரும் நினைப்பதில்லை. தன் சமூகம் சார்ந்த சூழலில் இத்தொழில் வருமானமே வாழ்வாதாரமாய் இருந்தது. ஆனால் நாளடைவில் தங்களால் உயர்ந்த சமூகமென எண்ணியவர்களின் செயற்பாடுகள், இத்தொழில் செய்யும் சமூகத்தினரைக் கீழ்த்தரமாக நடாத்தவும், சரிசமனாக சமூகத்தில் ஏற்றுக்கொள்ளவும் மறுத்தது. இந்நிலை இவர்கள் இத்தொழிலை விட்டு மெல்ல மெல்ல விலத்தி, வெவ்வேறு தொழிலுக்கு மாறிக் கூலியாகவும், இன்னொரு முதலாளிக்குக் கீழாகவும் வேலை வாய்ப்பைத்தேடி நகரச்செய்தது. குலத்தொழிலாக இருந்தாலும், இது சுயதொழில் என்பதில் கதிரவேலுவின் தந்தைக்கு ஒரு தனித்துணிவிருந்தது. யாருக்கும் தலை வணங்கத் தேவையில்லை. நேரகாலம், முன்பின் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சத்தேவையில்லை. நானே ராஜா, நானே மந்திரி என்பது போல் தன் திறமையையும் தற்துணிவையும் மூலதனமாக்கி, எவருக்கும் தலைவணங்காமலும், தானும் தன் குடும்பமும் என்றில்லாமலும் ஏழை எளியவர்க்கும் உதவி வந்தார்.

என்னதான் சாதியில் உயர்ந்தவர்கள் என்றாலும் சமயத்தில் தன்னிடம் வந்து கெஞ்சுவதையும், தங்கள் தேவைகளுக்காக எங்களைப் பெருமையாய்ப் பேசுவதை யும், எங்கள் பாத்திரங்களைப் பாவிப்பதையும் நினைத்தால் சிரிப்புத்தான் வரும். இதே இவர்கள் பொது இடங்களில் எங்களை வேறுபாடு காட்டி விலத்தும் போதோ கோபம் பொத்திக்கொண்டு வரும். இருந்தும் எம்மில் சிலரின் நடவடிக்கைகள், பண்பற்ற பழக்கங்கள், நடை உடை பாவனைகள், சுகாதாரச் சீர்கேடுகள் மற்றவர்கள் எம்மை பிரித்து வைப்பதற்கு வாய்ப்பாகிறது என்பதும் உண்மை தான். செய்தொழில் எதுவாகிலும் உண்மை, நேர்மை, பண்பு, பணிவு மட்டுமே மனிதனை உயர்ந்தவனாக்கும் என்பதில் கதிரவேலுவின் தந்தையின் போக்கு எல்லோரையும் கவர்ந்ததை விட, கதிரவேலுவுக்கு இவர் ஒரு கதாநாயகனாகக் காட்டிக்கொண்டதால், அவ்வழியிலேயே தானும் செல்ல வேண்டும் என்ற உத்வேகத்தைக் கொடுத்ததும் மறுக்க முடியாத ஒன்றுதான்.

படித்துவிட்டு இருக்கையில், இவனது நண்பர்கள் எல்லோரும் வெவ்வேறு வேலைகளுக்கு என வெவ்வேறு இடங்கள் செல்கையில், இவன் மட்டும் தகப்பனின் தொழிலையே மேற்கொண்டு வாழ்ந்து காட்டவேண்டும் என இளமையிலேயே உந்தப்பட்டதால், அத்தொழிலில் தந்தையின் வழிகாட்டலில் சந்தோசமாகவே ஈடுபட்டான். பயம் காட்டியவர்கள் பலபேர் எனினும், எந்தத்தொழிலில் ஆபத்துக்கள் இல்லை; சிந்தித்தவன் சிந்தையைச் சீர் செய்து கொண்டான். இத்தொழிலில் கதிரவேலு தன் தந்தையை விஞ்சிய நுணுக்கங்களைக் கையாண்டு நிறைந்த விளைச்சலைப் பெற்று வந்தான். இதற்கு அவனது தாயாரும் உந்து சக்தியானாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் அவன் நடை உடை பாவனைகள் மேல்குலத்தார் எனத் தங்களை காட்டிக்கொள்வோர்போல் இருந்ததால், இவனும் இச்சமூகம் என்பதையே அடையாளம் காட்ட மறுத்து நின்றது. எதிலும் எப்போதும் கவனமும் கண்ணியமுமாக இருந்ததாலும், தொழிலில் சுகாதாரமான நடைமுறைகளைப் பின்பற்றி இருந்ததாலும், இவன் உற்பத்திகளுக்குச் சந்தையில் நல்ல வாய்ப்புகள் கிடைத்தது. இவன் பெயர் சொல்லி கதிரவேலுவின் பொருள் எனக்கேட்டு வாங்குவது வாடிக்கையானதால், சக தொழிலாழிகளும் இவன் ஆலோசனைகளைப் பெற முயன்றனர்.

பனையின் உச்சக்கட்ட நன்மைகளைப் பெறும் வகையில் கள், கருப்பணி என இறக்குவதால் கருப்பணியினை சந்தைப்படுத்துவதுடன் மிகுதியில் கருப்பட்டி செய்ய சிறுகச்சிறுக ஆரம்பித்தவன், அம்மாவுக்குத் துணையாக இருபெண்களையும் வேலைக்கமர்த்திப் பருவகாலம் தவிர்ந்த ஏனைய காலங்களில் பனை ஓலை, சார்வைப் பயன்படுத்தி பெட்டி, கடகம், நீத்துப்பெட்டி, பாய், உமல் மற்றும் கைவினைப் பொருட்களையும் வண்ணவண்ண ஓலைகள் சேர்த்துச் செய்து கொள்வதால், இவன் உற்பத்திகள் பழமை விரும்பிகளாலும், இயற்கையோடு இசைந்தவர்களாலும், இன்னும் வெளிநாட்டவர்களாலும் விரும்பிக் கொள்வனவானது. தற்போது ஓர் சிறுநிறுவனத் தொழிலதிபர் போலவே இயங்கிக் கொண்டான். இதனால் சில பெண்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கி, அவர்களின் குடும்ப வருவாய்க்கும் வழிசமைத்து வந்தான்.

இந்நிலையிலேயே இவனுக்குத் திருமணமும் நடந்து, இன்று வாரிசை எதிர்பார்த்துத் தூக்கமின்றி, பழைய நினைவுகளை மீட்டியவனின் கவனத்தைக் கைத்தொலைபேசி அழைப்பு சுயநினைவிற்குத் திருப்பியது.

தொலைபேசியை எடுத்தவன் "ஓம் ஓம் கதிரவேலு தான் சொல்லுங்கோ" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்கு பெண்பிள்ளை பிறந்திருக்கு, தாயும் பிள்ளையும் சுகமாய் இருக்கினம். உனக்கு உடனேயே சொல்லச்சொல்லி உன்ர மனிசி போனைத் தந்தவா. அது தான் எடுத்தனான். விடிய நீ வந்து பாக்கலாம். நான் வைக்கிறன்." என வைத்தியசாலையில் கடமை புரியும் இவனது வாடிக்கையாளனின் தகவல் கிடைத்த சந்தோசத்தில், தாயையும் தூங்க விடாது எழுப்பியே நின்றான் கதிரவேலு. தினமும் தூர இடம் சென்று, இன்னொருவன் கீழ் வேலை செய்து, அவனின் ஏச்சுப் பேச்சுக்களைச் சமாளித்துக் கைநீட்டிச் சம்பளம் வாங்குவதை விட கதிரவேலுவின் வழி தற்போதைய நாகரீக இளைஞரையும் கவர்ந்திழுத்தது தப்பில்லையே. மெல்ல மெல்ல எது சுயகௌரவம், எது மனித உயர்வை, மேலாண்மையைத் தருகிறது என்பதை விளங்கிக் கொண்ட சிலர், இவன் வழியில் பனையை நம்பிய பயணத்தை ஆரம்பித்தனர்.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 பாட்டியின் சுருக்குப்பை

"தம்பி, அம்மா வந்திட்டன், கதவத்திறவுங்கோ." "சரி, சரி வாறன்" என்றவாறே கதவைத்திறந்த வாசன், "எங்க பாட்டி என்னாச்சு" என்றான்.

"பாட்டிய வாட்டில மறிச்சுப் போட்டினம். பின்னேரம் பெரிய வைத்தியர் வந்து பார்க்கவேணுமாம். அதுதான் நான் விட்டிட்டுவந்திட்டன். இனி மத்தியானம் சாப்பாட்டோட போவோம். அப்பா எங்க இன்னும் வயலுக்குள்ளால வரேல்லையோ?"

"இல்லை அம்மா, அப்பிடி பாட்டிக்கு என்னவாம், நான் பின்னேரம் போய்ப்பாப்போம்" என நினைத்துக்கொண்டான் வாசன்.

வாசன், பெற்றோருக்கு ஒரே பிள்ளை. விவசாயக் குடும்பம் என்றாலும் மதிப்பு மரியாதையானவர்கள். படித்துப் பல்கலைக்கழகத்திற்காகக் காத்திருந்தாலும், தந்தைக்குத் தாயுடன் விவசாயத்தில் உதவிசெய்வதே தற்போது அவனின் வேலையாக இருந்தது. தாயாரின் தாய்தான் வாசனின் அன்புப் பாட்டி பாக்கியம். நல்ல திடகாத்திரமான உடல்வாகும், பழமைமாறாத மனபலமும் கொண்டவள். இப்போதும் முற்றத்து வேப்பமரப்பூக்கள் பத்திரமாய்ச் சேர்த்து, வடகம் போட்டு விற்றுப் பணம் பண்ணுவதே பாட்டியின் வேலை. காசு சேர்க்கும் சுருக்குப்பை எந்நேரமும் பாட்டியின் முன்னிடுப்பில் பத்திரமாய்த் தூங்கும்.

பின்னேரம் பாட்டியைப் பார்க்கப்போன வாசனை, வைத்தியர் சந்தித்துப் பாட்டிக்கு ஒரு சத்திரசிகிச்சை செய்யவேண்டும், அதற்கு இரத்தம் தேவை, ஏற்பாடு செய்தால் நாளை மறுநாள் செய்யலாம் என்றார். ஏற்கெனவே பல தடவைகள் கல்லூரியில் இரத்ததானம் செய்த வாசன் தான்தருவதாகக் கூறி, உடனேயே இரத்தவங்கியில் இரத்தம் கொடுத்துவிட்டு, பாட்டியையும் பார்த்துப் பேசிவிட்டு வீடு வந்தான். இரவு சாப்பிட்டுத் தூங்கப்போனவனுக்குப் பாட்டியின் சுருக்குப்பையில் காசு திருடிய பழைய ஞாபகங்கள் மீண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது வாசன் பத்தாம் வகுப்புப் படித்த காலம், கல்லூரியால் சுற்றுலா செல்லப் பணம் தேவைப்பட்டது. அந்த வருடம் மழைவெள்ளம் போட்டதால் விவசாயமும் அழிந்தது. ஆனால் பாட்டியிடம் வருமானம் சுருக்குப்பையில் சேமிப்பில் இருந்தது. இரவு படிப்பதுபோல் பாசாங்கு காட்டி, பாட்டி தூங்கும் வரையிருந்து மெல்லப்போய் சுருக்குப்பையை எடுத்து விரித்துச் சரித்தபோது, சில்லறைக் காசுகள் சிந்த, பாட்டி விழிக்க, வாசன் கையும் களவுமாய்ப் பிடிபட்டான்.

"என்ன பழக்கமிது? அப்பா அறிஞ்சால் நீ துலைஞ்சாய்" என்று பாட்டி திட்டவும், பாட்டியின் பொக்கை வாயைப் பொத்திக்கெஞ்சியதும், பின் பாட்டி காசு தந்ததும், சுற்றுலா சென்றதும் நினைவில் மீண்டது. கண்கள் பனிக்கத் துடைத்தபடியே தூங்கிவிட்டான் வாசன்.

நாட்கள் நகர்ந்தன. அன்று பாட்டியின் சத்திர சிகிச்சை. அம்மா பாட்டியுடன் நிற்க, வாசன் வெளி வாசலில் காத்திருந்தான். "இந்தா தம்பி, பாட்டியை சத்திரசிகிச்சைக் கூடத்திற்குக் கொண்டு போகினம். இதைப்பத்திரமாய் வை" என, பாட்டியின் தோடுகளுடன் சுருக்குப்பையையும் வாசனிடம் கொடுத்துச் சென்றாள் அம்மா.

மூன்றாம் நாள் எல்லாம் சரியாகிப் பாட்டி திரும்பவும் வீட்டுக்கு வந்தாள். "வாங்கோ பாட்டி, எப்படி எல்லாம் சுகம்தானே சரி, சரி" என்று பாட்டியை மேலும் கீழும் பார்த்தவன் "ஒன்றுகுறையுதே, ஆ ஞாபகம் வத்திட்டுது. நில்லுங்கோ, எடுத்து வாறன்" என்றவன் தோடுகளை அம்மாவிடம் கொடுத்து, சுருக்குப்பையைப் பாட்டியின் முன்னிடுப்பில் தன்கையாலேயே செருகிவிட்டான். பாட்டியின் பொக்கை வாய்ச்சிரிப்புடன் இவர்களின் சிரிப்பும் கலந்து கொண்டது.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 மலரத்துடிக்கும் அரும்புகள்

மீராவும், ராஜனும் தரம் எட்டில் கல்வி பயிலும் கிராமத்துப் பிள்ளைகள். வறிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தாலும், அக்கிராமப் பாடசாலையின் நம்பிக்கை நட்சத்திரங்கள். படிப்பில் மட்டுமல்லாது, விளையாட்டுத் துறையிலும் பல வெற்றிகளை ஈட்டிப் பாடசாலைக்குப் பெருமை சேர்ப்பவர்கள் என்றால் மிகையாகாது.

ஆம், இருவரும் அயற்கிராமவாசிகள்தான். இருவரின் பெற்றோரும் வறிய நிலையில் இருந்தாலும், தாங்கள் படிக்காவிடினும் பிள்ளைகளை எப்படியாவது படிக்கவைத்து மேல் நிலையாக்க வேண்டுமென்ற இலட்சியத்தோடு உழைப்பவர்கள். அதற்கு ஏற்றாற்போல் பிள்ளைகளும் நடப்பதால் எண்ணங்கள் தொய்வின்றி நகர்ந்து கொண்டிருந்தது வாழ்க்கை.

தடகளப் போட்டிகளில் ராஜன் ஓட்டம், ஈட்டி எறிதல் மற்றும் கால்பந்தாட்டம் போன்றவற்றிலும், மீரா வலைப்பந்து, கபடியுடன் கோலூன்றிப் பாய்தலிலும் திறமை காட்டியதால், கிராமப்புறப் பாடசாலைகள் மட்டத்தில் சாதனையாளர்களாகத் தெரிவாகி, நகரப்பாடசாலைகள், கல்லூரிகளுடனான போட்டிகளிலும் பங்கேற்க வாய்ப்பைப் பெற்றுக்கொண்டனர்.

அந்த வகையில் மாவட்டப்பிரிவில் ராஜன் ஈட்டி எறிதலுக்கும், மீரா கோலூன்றிப் பாய்தலுக்கும் தெரிவாகிப் பங்கேற்ற போட்டியில், நகரக் கல்லூரிப் பிள்ளைகளுடன் சரிக்குச்சரி ஈடுகொடுத்து விளையாடி, இருவருமே முதல் நிலையில் தேர்வாகியது அனைவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்ததுடன், வழமையில் முதன்நிலையாகும் பிள்ளை களுக்கும், அவர் சார்ந்த கல்லூரிகளுக்கும் எதிர்பாராத ஏமாற்றமானதும், இவர்களிடம் சிறு பொறாமை உண்டானதும் மறைக்க முடியாத உண்மையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரையும் அழைத்துச் சென்ற கிராமப் பாடசாலை ஆசிரியரையும், பிள்ளைகளையும் சூழ்ந்து பத்திரிகை யாளர்கள் பேட்டி கண்டனர். வசதி, வளமற்ற நிலையிலும், முறையான பயிற்றுவிப்பாளர்கள் இல்லாத நிலையிலும், இருக்கும் வசதியைக் கொண்டே இம்முயற்சியும் வெற்றியும் என ஆசிரியரால் விளக்கம் கொடுக்கப்பட்டது.

போட்டிக்குப் பிரதம விருந்தினராக வருகைதந்திருந்த மாவட்டச் செயலாளர், பிள்ளைகளைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டி அவர்களுடன் பேசியதில், அவர்களது சுறுசுறுப்பும் ஆர்வமும் அவரை ஈர்த்ததால், அவர்களுக்கான சகல வசதிகளையும் தான் அரசினூடாகச் செய்து தருவதாகவும், எதிர்காலத்தில் இவர்கள் தேசிய மட்டம் வரை திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் உருவாக்கிக் கிராமட்ட, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் மிளிர்ந்து பாடசாலைக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்கவைப்பது எனது பொறுப்பெனக் கூறி அதற்கான விபரங்களையும் பெற்றுக்கொண்டார். அதே வேளை அவர்களைத் தங்கள் கல்லூரியில் இணைக்கவும் சிலர் முயன்றதையும் காணக்கூடியதாக இருந்தது.

இருந்தும் அவர்களது பெற்றோர்கள் அதை விரும்பாது எங்கள் கிராமப் பாடசாலையே இவ்வளவு பெருமைக்கும் காரணமானது. இங்குள்ள ஆசிரியர்களின் விடாமுயற்சியே இம் மலரத்துடிக்கும் அரும்புகளுக்கு ஊட்டம் கொடுத்தது. கிராமம் என்றால் என்ன தாழ்வு? நாமும் மலர்ந்து மணம் பரப்புவோம் என்ற வகையில், பண்பு பணிவுடன் இருவரும் அனைத்திலும் வீறுநடை போட்டு, தங்கள் பாடசாலைக்கும் கிராமத்துக்கும் பெருமை சேர்த்து வந்தனர்.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 மலரே கோபமா?

வறுமையின் பிடியில் வசதிகளற்ற குடும்பத்தில் மூத்த மகளாகப் பிறந்த இவளுக்குப் பெற்றவர் வைத்த பெயர் மலர்விழி. பெயருக்குப் பொருந்த அழகானவளும் அறிவாற்றல் மிக்கவளும் கூட. வசதி வளம் குறைவென்பதைத் தவிர, மற்றைய அனைத்திலும் சிறப்பானவள் என்பதில் தவறு ஏதும் இல்லை. செல்லமாக அனைவரும் மலர் என்றே அழைப்பதுண்டு. இதுவே பாடசாலையிலும் வழமையானது. பக்கத்துப் பாடசாலையில் தரம் ஆறில் கல்வி பயின்று வரும் இவளிடம் உள்ள, திறமையும் மதிநுட்பமும் அனைவராலும் விரும்பப் படுவதோடு, வகுப்பாசிரியர் வதனி ரீச்சரின் செல்லப் பிள்ளையாகவும் இருக்கிறாள் என்பது மிகையில்லை.

அன்றும் வழமைபோல முதல்நாள் வீட்டுப்பாடங்களை வகுப்பாசிரியரிடம் காண்பித்துக் கொண்டிருக்கையில், சகமாணவர்களின் முண்டியடிப்பில், மலரின் கைபட்டு மேசை மீதிருந்த ரீச்சரின் தண்ணீர்ப் போத்தல் தட்டுப்பட்டு வீழ்ந்து, ரீச்சரின் பதிவேடுகளும், அப்பியாசக் கொப்பிகளும் அவரின் சேலையும் நனைந்ததுடன், போத்தல் நிலத்தில் வீழ்ந்து உடைந்ததால், சிதறிய போத்தல் துண்டொன்று அவரின் காலிலும் தைத்து காயம் ஏற்படுத்தி விட்டது.

சற்றும் எதிர்பாராத விதமாக ரீச்சர் எடுத்தவுடனேயே மலரைத் திட்டித்தீர்த்து, கன்னத்திலும் பளார் என அறைந்து விட்டார். அதிர்ந்துபோன மலர், அழுகையை அடக்கிக் கொண்டு ஓரமாகப் போய் ஒதுங்கிக்கொண்டாள். தன் கவனயீனத்தால் நடந்த தவறால், ரீச்சரின் பதிவேடுகளும் சேலையும் நனைந்ததுடன் அவரின் காலிலும் காயமாச்சே என தனக்குள் வேதனைப்பட்டுக் கொண்டாள். செய்வதறியாது திகைத்த மலருக்கு, ரீச்சரின் எதிர்பாராத திட்டும் அறையும், அதுவும் மிகவும் அன்பும் பாசமுமானவர் இப்படிச் செய்தது பொறுக்கமுடியவில்லை. அதுவும் எல்லோர் முன்பும் திட்டியது நிரம்பவே வேதனை தந்தது. எடுத்ததற்கெல்லாம் புகழ்ந்து முன்னுதாரணம் காட்டிய எனக்கு சீயென, தனக்குள்ளேயே முனகிக்கொண்டாள் மலர். இருந்தும் ஆசிரியரின் நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்பிழையையும் ஒத்துக்கொண்டவளுக்கு, அவரின் மீது கருணையும் பிறந்தது.

ஓரக்கண்ணால் ஆசிரியரை நோக்கியவளுக்கு, அவர் தன் பதிவேடுகளைப் பத்திரப்படுத்திவிட்டு, கால் காயத்துக்கு முதலுதவிப் பெட்டியில் இருந்து சகமாணவரின் உதவியுடன் கட்டுப்போடுவது தெரிந்தது. அன்பான மனம் தான் போடவில்லையே என ஆதங்கப்பட்டுக்கொண்டது. உடைந்த போத்தல் துண்டுகளையும், சிந்திய நீரையும் சுத்தப்படுத்திய மாணவர்களை வழிநடத்திக்கொண்டு மலரைத் தேடிய ரீச்சரின் விழிகள், அவள் பாவமாய்த் தன்னைப் பார்ப்பதைப் புரிந்து கொண்டன. என்ன இருந்தாலும் நான் அப்படி எடுத்தவுடன் திட்டி அடித்திருக்கக் கூடாது. என் பதிவேடுகள் நனைந்ததும் என்னை நான் மறந்து விட்டேனே என, வதனியும் மனதுக்குள் சலித்துக்கொண்டாள். மலரோ விம்மியபடி தலை குனிந்துகொண்டாள்.

மலரின் இனிமையான பேச்சையும், பண்பான நடத்தையையும், எதையும் தன்தாய் போல் தன்னிடம் பகிர்ந்து கொள்வதையும், எண்ணிய வதனிக்குத் தான் செய்தது இழிவுச்செயலாகப்பட்டது. என்ன அவசரம், கண்களில் நீர் பனிக்க மலரென அழைக்கிறாள். விம்மியழுத சிவந்த கண்களால் ரீச்சரைப் பாத்தவள், பார்வையால் ஆயிரம் மன்னிப்புக் கேட்கிறாள். அதே நிலையில்தான் ரீச்சரும். மெல்ல சைகையால் மலரை அழைக்கிறாள் வதனி ரீச்சர். கிட்ட வந்தவளை மார்போடு அணைத்துத் தட்டிக் கொடுத்தவள் நாதளதளக்க 'மலர்' என்கிறாள். மலரின் அழுகையே பதிலானது. மௌனம் பேசுகிறது, மலரே கோபமா என்கிறது.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 ☞ மனித நேயம் உறவானது

நடமாட்டம் குறைந்த வீதி அது. பள்ளிச்சிறுவர்கள் மூவர் அங்கும் இங்கும் ஓடி ஓடிஅவசரப்படுவதையும், யாரோ ஒருவர் வீதியில் விழுந்துகிடப்பதையும், ஒரு சிறுவன் சைகை காட்டித் தன்னை மறிப்பதையும் தூரத்தில் வரும்போதே அவதானித்தான் மதன். கிட்டவந்து காரை நிறுத்தி இறங்கியவனுக்கு யாவும் புரிந்தது. மூதாட்டி ஒருவர் மயங்கி விழுந்திருப்பதும், சிறுவர்கள் பள்ளிப்பையிலிருந்த போத்தலில் இருந்த நீர் எடுத்து முகத்தில் தெளித்து "ஆச்சி, ஆச்சி" என எழுப்புவதையும் பார்த்த அவன், சிறுவர்களின் உதவியுடன் பாட்டியைக் காரில் ஏற்றி அவசர அவசரமாக அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்ப்பித்துக் கொண்டான். தன் பெயர் விபரங்களைப் பதிவுசெய்து, பாட்டியின் பையிலிருந்த கிளினிக் கொப்பி மூலம், அவவின் விபரங்களையும் பதியும்படி சொல்லி, நடந்தவற்றையும் கூறித் திரும்பி வரும்போது வந்து பார்ப்பதாகவும் கூறித் தன் பயணத்தை தொடர்ந்து கொண்டான் மதன்.

இராசாத்தி என்பது பாட்டியின் பெயர். வயது 76, வருத்தம் சலரோகம். விபரங்கள் அறிந்து வைத்தியம் தொடர்ந்தது. இரத்தத்தில் சீனியின் அளவு குறைந்ததால் ஏற்பட்ட மயக்கம், பாரதூரம் இல்லை, படிப்படியாக பாட்டியின் நினைவு மீண்டு கொண்டது. குளுக்கோஸ் கரைசலை பருகக்கொடுத்தப்படியே "பாட்டி, என்ன நடந்தது சாப்பிடேலையோ, எங்க இருக்கிறது, தனியவே வந்தனிங்கள்."

இப்படியே கேள்விகளை அடுக்கினாள் அங்கு கடமையில் இருந்த உதவியாளர். "இல்ல பிள்ள, தேத்தண்ணியோட வந்திட்டன், நேரம் போகுமெண்டு. உதில நேர போய்த்திரும்பினால், பக்கத்து ஒழுங்கேக்க பாக்கியத்தின்ர வீட்டிலதான் இருக்கிறன். சொந்த இடம் யாழ்ப்பாணம், இப்ப இஞ்ச வந்து கனகாலமாச்சு." சொல்லி முடித்தாள் இராசாத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரிசரி, இதக் குடிச்சால் எல்லாம் சரி, ரத்தத்தையும் சோதிச்சிட்டு பெரிய டொக்கடர் வந்தா, பின்னேரம் வீட்ட போக விடுவினம்."

"அது சரி பிள்ள, நான் என்னண்டு இஞ்ச வந்தனான். நடந்து வரேக்க ஒருமாதிரி வந்தது மட்டும்தான் தெரியும். இப்ப இஞ்ச இருக்கிறன், அதுதான் கேக்கிறன்."

"ஆரோ ஒரு ஆள் காரில கொண்டுவந்து, ஸ்ரெச்சர் எடுக்க முதல் உங்கள தூக்கிகொண்டந்து இஞ்ச விட்டவர். பின்னேரம் வாறேன் எண்டு டொக்டரிட்ட சொல்லிற்றுப் போனதக் கேட்டனான்."

"அப்பிடியே, நல்லகாலம் அவரும் காணாட்டில், அப்படியே அதிலையே முடிஞ்சிருப்பனோ தெரியாது. அவரப்பாத்து கும்பிட வேணும் கடவுள்போல." மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் இராசாத்தி.

நாலு பிள்ளையள் பெத்தவள் இராசாத்தி, வசதியான வாழ்க்கை, சந்தோசமாகப் போனகாலம். கணவனின் மறைவோடு கொஞ்சம் சஞ்சலமானது. மூன்று பிள்ளைகளையும் கரைசேர்த்துக் கடைக்குட்டியுடன் காலம் கழிந்து கொண்டிருந்தது.

என்னதான் கணவனின் பென்சன் வந்தாலும் பிள்ளையின் படிப்பு, அது இது என்று விலைவாசி ஏற்றத்துடன் போட்டி போட்டே வாழவேண்டி இருந்தது. கல்யாணம் கட்டிச்சென்ற பிள்ளைகள் தங்கள் குடும்பம், வேலை, பிள்ளைகள் என்றாலும் அடிக்கடி தாயையும் தங்கையையும் தங்கள் பிள்ளைகளுடன் வந்து பார்த்துப்போவது வழக்கம்.

இந்த நிலையில்தான் கடைக்குட்டி செல்வியின் காதல் விவகாரம் தாய்க்கு எட்டியது. துடித்துப் போனாள் இராசாத்தி. கொஞ்சமும் பொருத்தமில்லாத, தன் சாதி சனம் ஏற்றுக்கொள்ள முடியாத இடமாக இருந்ததாலும், பையனின் சினேகிதரும், பழக்கவழக்கங்களும் சமூக மட்டத்திலே நல்லதாகப் பேசப்படவும் இல்லை, கேள்விப்படவும் இல்லை என்பதாலும், என்ன செய்வது, ஏது செய்வது, என அறியாமல் முதலில் தன் மூத்த பிள்ளைகளுக்கே தெரியப்படுத்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் கோவம் கொண்டு வந்து இவளை நறுக்கென்று நாலு கேள்விகள் கேட்டுச் சிந்திக்கவைத்து, அதிலிருந்து விடுவிப்பார்கள் என நினைத்தவளுக்கு, நினைத்ததுக்கு எதிர்மாறாகவே நடந்து முடிந்தது.

மூவரும் சேர்ந்து "அம்மா, உங்கட காலம் வேற, எங்கட காலம் வேற, இனி இவளின்ர காலம் வேற. மற்றது இவள் இன்னும் சின்னப்பிள்ளை இல்லை. அவளின்ர வாழ்க்கையைப்பற்றி முடிவெடுக்கிற உரிமை எங்களுக்கில்லை. ஓரளவுக்கு நாங்களும் சொல்லிப் பாத்தோம், அவள் கேக்கேல, உங்களுக்கு தெரிஞ்சா நீங்கள் பிரச்சனப்படுவீங்கள் என்று மூண்டுபேருக்கும் தெரியும். அது தான் அம்மா, உதசும்மா விடுங்கோ. அதுதான் வேணும் எண்டு நிண்டால், செய்து வைக்கிறதத் தவிர வேறு வழி இல்லை" என்று வெட்டு ஒண்டு, துண்டு இரண்டாய் மூவரும் சேர்ந்து கதைச்சது இராசாத்திக்குக் கொஞ்சமும் பிடிக்கேல்லை. அதனால வீட்டில நிம்மதி இல்லாம, அவளோட முகம் குடுக்காம இருக்கிறத்துக்கு சாகலாம்போல தோன்றியது. வாய்த்தர்க்கம் வரம்புமீற, செல்வியின் செயல் எல்லோரையும் திகைக்க வைத்தது. யாருக்குமே எதுவும் சொல்லாமல் நான் என் எதிர்காலக்கணவருடன் போகிறேன், என்னைத் தேடவேண்டாம் என எழுதிவைத்துவிட்டு வீட்டைவிட்டே போய்விட்டாள்.

யாராலும் எதுவும் செய்யமுடியவில்லை, சட்ட நடவடிக்கை எடுக்கும் வயதுமில்லை. வீட்டில் தனிமையில் இராசாத்தி மனமுடைந்து, வெளியில் தலைகாட்ட வெட்கப்பட்டு, எங்கும் செல்லாமல் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தாள். பால்ய சிநேகிதி பாக்கியத்தின் தொடர்பு இருந்ததால், அவளைத் தேடி மட்டக்களப்பு சென்று, அங்கேயே நிரந்தரமாய் வசித்து வந்ததால், எவரொருவரின் தொடர்பும் இல்லாமல் கணவனின் பென்சனோடு காலம் கழிந்தது. ஏறக்குறைய இருபத்தி நான்கு வருடங்களுக்குமேல் மட்டக்களப்பு வாசியாகியே விட்டாள். தொடர்புகொள்ள முனைந்த பிள்ளைகளையும் தலைமுழுகியதாய்ப்பேசி, அவர்களின் வெறுப்பையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பாதித்து, தான் ஏமாற்றப்பட்டுவிட்டேனே என்ற ஒரே நினைப்புடன், தனி ஒரு ஆளாய், அனைத்து சொந்த ஊர் உறவுகளும் அறுத்து, இப்போது தள்ளாத நிலையில் நோயாளியாக இப்படி இங்கே. பழைய நினைவுகளில் அப்படியே அசந்து தூங்கியே விட்டாள்.

நேரம் நாலு மணியை நெருங்கியது. இராசாத்தியின் நோய் நிர்ணயமானதும், கிளினிக் தொடர்வதாலும், இரத்த மாதிரி ரிப்போட்டுடன் அவரை விடுதியில் இருந்து வீடுசெல்ல அனுமதித்திருந்தனர். இருந்தும் இராசாத்தி தன்னை இங்கு கொண்டு வந்து சேர்த்தவரை சந்தித்து, நன்றி தெரிவித்துச் செல்வதற்காகக் காத்திருந்தாள்.

"பாட்டி, இப்ப எப்பிடி இருக்கிறியள்?"

"தம்பி நீங்கள்...?"

"நான்தான் உங்கள இங்க கொண்டுவந்து விட்டனான்."

"அப்பிடியே கிட்டவாங்கோ, கையைத்தாங்கோ" என்றபடியே, அவன் கையைப்பிடித்து தன் கண்ணில் ஒற்றிக் கொஞ்சிக்கொண்டாள்.

"நன்றி, தம்பி நன்றி. நீங்கள் இல்லாட்டில் இண்டைக்கு நான் இல்ல." கண்களில் நீர் பனிக்க, நா தளதளக்க கூறி நின்றாள் அவள்.

"என்ன பாட்டி இது, ஒருவருக்கொருவர் உதவி செய்யிறதுதானே மனித தர்மம். இதுக்கெல்லாம் நன்றி சொல்லிக்கொண்டு"

"இல்லத்தம்பி..."

"அது சரி பிள்ளையள் வந்து பாத்தவையோ? சாப்பாடு எல்லாம் இருக்கோ, ஏதும் வேணுமோ, கூச்சப்படாமல் கேளுங்கோ பாட்டி"

"இல்ல தம்பி, ஒண்டும் வேண்டாம், ரிக்கட்டும் வெட்டியாச்சு, உங்களப் பாத்திட்டுப் போகத்தான் நிண்டனான். சரி எப்பிடிப்போகப்போறியள். ஆர் வருவினம்" இம்... என்ற பெருமூச்சுடன், "நீங்கள் போட்டுவாங்கோ தம்பி நான் போவன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன பாட்டி, நான் கொண்டுபோய் விடட்டே?" ஏதோ புரிந்தவன்போல் கேட்டான் மதன். "தம்பி" எனக் கண்கலங்கினாள் இராசாத்தி.

"பாட்டி, என்ன பாட்டி அழாதேங்கோ, நீங்கள் வாங்கோ" எனக் கையைப்பிடித்தான் மதன்.

"தம்பி நீங்கள் யார் பெத்த பிள்ளையோ, பெத்தவளின்ர வளர்ப்பு உங்களில் தெரியுது. நானும் நாலு பெத்தவள். ஆனால் இப்ப தனி மரம்."

"என்ன சொல்லுறிங்கள் பாட்டி," பாட்டி தன் சோகக் கதையையும், தன் பிடிவாதத்தையும் யாழ்ப்பாணத்தில் விட்டுவந்த வீட்டையும், உறவுகளையும் பற்றி சொல்லி முடித்தாள். "வாங்கோ பாட்டி, கதைச்சுக்கதைச்சுப் போவோம்" என்றவன், பாட்டியை மெல்ல கட்டிலால் இறக்கிக் கூட்டிச்சென்றான்.

"தம்பி நான் விழுந்த இடத்தில அடுத்த ஒழுங்கேக்க மூண்டாவது வீடு. சந்தில இறக்கிவிட்டால் நான் போவன். அப்ப தம்பி நீங்கள்"

"நாங்களும் இங்கதான் அப்பா வெளிநாட்டில வேலை, நானும் தங்கச்சியும் அம்மாவும்தான். கல்லடிக்கங்கால மெயின்றோட்டில் வீடு. தங்கச்சி படிக்கிறா நான் வேலை செய்யுறன்."

"அப்ப அம்மா....?"

"அம்மா வீட்டிலதான். அம்மாவும் அப்பாவும் யாழ்ப்பாணம்தானாம். ஏதோ பிரச்சனையிலயும், சண்டை இடம்பெயர்வோட மட்டக்களப்பு வந்திட்டினமாம். நான் இங்கதான் பிறந்தது, படிச்சது எல்லாம். இப்படியே வீட்ட வாங்கோவன் வீட்டையும் பாத்திட்டு, அம்மாவையும் பாத்திட்டு திரும்பக் கொண்டந்து விடுறன்."

"இல்லத்தம்பி, இன்னொருநாள் பாப்பம், நான் கொஞ்சம் றெஸ்ற் எடுக்கோணும், என்ன இதில றக்கிவிட்டால் போதும். எங்க இருந்தாலும் நீங்கள் நல்லா இருக்கோணும் தம்பி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சரி பாட்டி, நான் உங்கள வீட்ட கொண்டந்து விடுறன்” என்ற படியே பேசை திறந்து ஒரு 1000 ரூபா நோட்டை எடுத்து பாட்டியின் கையில் திணித்தான்.

“ஐயோ தம்பி, இது எதுக்கு? என்னட்டக் காசு இருக்கு, இவற்ர பென்சன் வாறது எனக்கு போதும். இத நீங்கள் வைச்சுக்கொள்ளுங்கோ தேவை என்டாக் கேக்கிறன்.” என்ற படியே மதனின் சட்டைப்பையில் செருகி விட்டாள் இராசாத்தி.

“சரி பாட்டி”

“தம்பி நிப்பாட்டுங்கோ இது தான் வீடு. தம்பின்ர பெயர் கேக்கேல.”

“எனக்கு மதன் பாட்டி, தங்கச்சிக்கு மலர், அம்மாவுக்கு செல்வி, அப்பாவுக்கு ராசன். அப்ப உங்களுக்கு” என்றான் மதன். முகமெல்லாம் வெழுவெழுத்தபடி ஒருகணம் திகைத்தவள், சுதாகரித்துக் கொண்டு எனக்கு ‘ராசாத்தி’ என்ற படியே மதனின் முகத்தை வருடிய வண்ணம், “அம்மாவக் கேட்டதா சொல்லு, பத்திரமா போட்டுவா தம்பி,” கை அசைத்து வழி அனுப்பினாள் இராசாத்தி.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து முடிந்த யாவையும் பற்றிச் சிந்தித்த வண்ணம் இருந்த ரசாத்தியைத் தொலைபேசி அழைப்புமணி நிலைதிருப்பியது. வந்து தொலைபேசியை எடுத்தவள் "ஓ திவ்வியாவா?" என்றவாறு அழைப்பைத் தொடுத்து "சொல் திவ்வியா" என்றாள்.

"அம்மா என்ன செய்யுறீங்க, நான் சொல்லுறத்த கவனமாக் கேளுங்கோ. தம்பி எங்க பட்டடைக்குப் போயாச்சா? என்னண்டால் அம்மா, இவருடைய நண்பன் யாரோ வாடகைக்கு வீடு தேடித் திரியுறாராம். அதுதான் இவர், இப்ப அப்பாவும் இல்ல, நீங்களும் தம்பி திவ்வியனும்தானே. அது தான் உங்கள அந்தக் கடைசி அறையில இருந்து கொண்டு, வீட்ட வாடைக்குக் கொடுக்கலாம் என்று முடிவெடுத்துச் சொல்லுறார். முற்பணமும் வாங்கி, மாதாந்தம் ஐயாயிரம்ரூபா வாடைக்கும் பேசி முடிச்சிட்டார். அதுதான் உங்களுக்கு தெரிவிக்கச் சொன்னவர்."

"பிள்ளை இப்ப என்ன அவசரம்? மருமகனுக்கு என்ன தேவை? திவ்வியனும் காலேலாததோட வேறு ஆக்கள் வாடகைக்கு இருக்கேக்க எப்படி?" என்றாள் ராசாத்தி.

"அம்மா நானும் நினைச்சனான்தான். ஆனா அவர் வாங்கிய புதுக்காருக்குத் தவணைக்கட்டுப்பணம் கட்டுறத்துக்கு வசதியாக இப்படிச் செய்யுறார். வீடு வளவு வேற அவற்றையும் என்ரையும் பேரிலைதானே இருக்கு அதுதான். நான் வைக்கிறன். நீங்கள் மாறி அந்த அறைக்குப்போங்கோ" என்றபடி தொலைபேசியை நிறுத்தி விட்டாள் திவ்வியா.

மிகவும் மகிழ்வாகக் கடந்த ராசாத்தி, ராகவன் குடும்ப வாழ்வு, திவ்வியா, திவ்வியன் என்ற இரு பிள்ளைகளுடன் ராகவனின் தச்சுத்தொழிற்பட்டடை வருமானத்தில் மிகவும் சிறப்பாகவே நடந்து வந்தது. ராகவன் அரச தனியார் ஒப்பந்த வேலைகள் செய்து வருவதனால், நகரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டிய பகுதியில், வசதியான வீடு கட்டி வாழ்ந்து வந்தனர். திவ்வியாவின் படிப்பு முடிந்ததும், நல்லஇடமாக மாப்பிள்ளை கிடைத்ததால், அதுவும் அரசஅலுவலராகவும் இருந்ததால் வீடு வளவு, நகை பணம் எனக் கொடுத்துத் திருமணத்தை முடித்து வைத்தனர். கணவர் வரதனின் தொழில் நிமித்தமாகவும், அவரது பெற்றோரின் விருப்பப்படியும் அவர்களின் வீட்டிலேயே வாழ்க்கை தொடங்கியது வரதனுக்கும் திவ்வியாவுக்கும்.

இங்கே ராகவன், ராசாத்தி, திவ்வியன் மூவரும் நாளாந்த நடவடிக்கையில் காலம் கடந்த வேளையில்தான் அந்த பெரும் கொடுமை நடந்தேறியது. வழமைபோல் கல்லூரி செல்லும் வழியில் தகப்பனுக்குச் சாப்பாடு கொடுப்பதற்காகச்சென்ற திவ்வியனின் சைக்கிள் பிரதான வீதிக்கு ஏறும்போது, வேகமாக வந்த வாகனம் ஒன்று முட்டிமோதி நிற்காமலே சென்றது. படுகாயமடைந்து விழுந்த திவ்வியன், பொது மக்களால் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டதும், இடுப்பிற்குக்கீழ் கால்கள் செயலிழந்ததும் கதைபோல் நடந்து முடிந்தது. திவ்வியனின் படிப்பு இடையில் முறிந்து, சக்கர நாற்காலியில் வாழ்க்கை தொடர்ந்ததும் கூட அதேபோல் உண்மையானது.

மாதங்கள் அல்ல, வருடங்கள் இரண்டு கடக்க திவ்வியன் மெல்லமெல்ல வெளியுலகிற்கு வந்து அப்பாவின் பட்டடை நிர்வாகத்தைப் பார்ப்பதிலும், இரவு நேரங்களில் மாணவர்களுக்கு இலவச மேலதிக வகுப்புகள் எடுப்பதிலும் மனதளவில் திருப்தி அடைந்தாலும், ராகவனோ மகனை இப்படிப் பார்ப்பதில் மனமுடைந்தே போனார். இந்நிலையில் இவர் வாழ்வும் இதயஇறுக்கத்துடன் முடிவுற, தாயும் திவ்வியனுமே தனிமையாகினர். திருமணமாக முடியாத தனிமை வாழ்வைத் தனது அம்மாவுடன் தொடர்ந்து வந்தான் திவ்வியன்.

இந்நிலையில்தான் திவ்வியாவின் அறிவுறுத்தல் கிடைத்தது. சற்றும் எதிர்பார்க்காத தாயும் மகனும் இதை ஏற்க முடியாமல், தனது சுதந்திரமான சக்கர நாற்காலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்வுகளுக்குத் தக்கவண்ணமாகப் பட்டடையிலேயே ஓர் இடமமைத்து, வீட்டை அவர்களிடம் ஒப்படைத்து வாழத்தொடங்கினர். காலம் கடந்திடத் தாயும் முதுமை அடைந்திட, திவ்வியனும் வயதாக, இவ்வாழ்க்கை முறையிலேயே பயணம் தொடர்ந்தது.

அன்றும் வழமைபோலப் பட்டடைச் சுற்றாடலில் உடற் பயிற்சிக்காகவும், மன அமைதிக்காகவும் சுற்றி வந்தவனின் சக்கரநாற்காலி, நடைபாதைச் சிறுதடையில் தடங்கல்படவே யாரும் உதவிக்கு வராதபோது, ஒரு சிறுவன் மட்டும் வந்து சக்கர நாற்காலியின் முன்பக்கம் பிடித்து இழுத்து, மேலேற்றி விட்டான். "தம்பி ரொம்ப நன்றியடா, என்ன பெயர், எங்க இருக்கிறாய் நீ தம்பி?" என்ற கேள்விக்கு

"ஐயா, இது என்ன பெரிய உதவி. இதுக்கு நன்றி எல்லாம் எதற்கு?. என்ர பெயர் கண்ணன், யாருமே இல்லாத அனாதையாம். கோயில்ல சாமியோட இருக்கிறன். கடையில் ஏதாவது வாங்கிச் சாப்பிடப்போறேன். அப்பதான் உங்களப் பாத்தன். ஒருவருமே உதவேல்ல, ஆனால் நான் அப்படி இல்லை." என்று வயதுக்கு மிஞ்சிய தோரணையில் சொன்னான். அவனது உறவுகளற்ற நிலையும், வாழ்க்கை முறையும், கற்றுக்கொடுத்த பாடமாயும் இருக்கலாம் என நினைத்த வண்ணம்.

"கண்ணா, நீ என்னோட வாறியா? நானும் அம்மாவும் தனியத்தான். நீ வந்தால் எங்களுக்கு உதவியாயும் சந்தோசமாயும் இருக்கும். நான் உன்னைப் படிக்க வைத்துப் பெரிய ஆளாக்குவேன்." என்றவுடன்,

"படிக்க வைப்பீங்களா?" என ஆவலோடு கேட்டவனை, எட்டி அணைத்தபடி "நிச்சயம் படிக்க வைப்பேன் வா" எனத் தன்னுடன் சேர்த்துக்கொண்டான் திவ்வியன்.

இப்போது ராசாத்தி, திவ்வியன் குடும்பத்தில் கண்ணன் இளவரசன் ஆகிவிட்டான். கண்ணனின் மனிதநேயம் திவ்வியனின் மனிதநேயத்தையும் மலரச்செய்ததே உண்மை.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 நடை மேடைப் பூக்கள்

"அம்மா, சாப்பாடு முடிஞ்சுதா, எனக்குத் தனியாக ஒரு 15 சாப்பாடு கட்டித்தாங்க. நான் நேற்றைக்குக் கடைப்பக்கம் போகேக்க, அந்தத் தெருவோர நடைபாதைக் கரையாகச் சிறுவர்கள் சட்டையும் இல்லாமல் தட்டோட நிண்டவையள். பாக்கப் பாவமாக இருந்தது. அப்பாவின் நினைவாக இம்முறை அவையளுக்கும் கொஞ்சம் குடுப்பம்"

"சரி சரி, நினைவு நாளில் தானமாக முதியோர் இல்லத்துக்கும், சிறுவர் காப்பகத்திற்கும் கொடுக்கிறோம். இதில இவர்களுக்குக் கொடுக்கிறத்தில ஒண்டுமில்ல, முடிஞ்சதும் கட்டித்தாறன்." என்றாள் நேசனின் அம்மா மரகதம்.

உண்மையில் மரகதத்தின் கணவன் அமெரிக்க நாட்டவர் டேவிட்சன். அவர் உல்லாசப்பயணியாக உள்ளூர் வந்தபோது, கிறிஸ்தவப் பாதிரியாரின் மடத்தில் மரகதத்தைச் சந்தித்தவருக்கு, அவளது பழக்க வழக்கங்களும் நடையுடை பாவனையும் பிடித்துப்போனது. தமிழ்க் கலாச்சாரமும் பாரம்பரியமும் ஏற்கனவே டேவிட்சனைக் கவர்ந்திருந்ததால், அவர் விடுமுறை கிடைக்கும் போதெல்லாம் உள்ளூர் வருவது வழக்கமானது. பாதிரியாரின் துணையுடன் தன் விருப்பத்தை மரகதத்தின் பெற்றோரிடம் தெரிவித்து மரகதத்தை மனைவியாக்கிக் கொண்டார். மரகதத்தின் பெற்றோர் அப்பாதிரியாரின் சமையல், ஆலய வேலைகளைக் காலாகாலமாக செய்து வந்ததால் இத்தொடர்பு ஏற்பட்டது. பாதிரியாரின் நம்பிக்கையிலேயே மரகதத்தைப் பெண் கொடுக்க சம்மதித்தனர். அந்தவகையில் மரகதமும் அவருடன் அமெரிக்கா சென்று சேர்ந்தாள். டேவிட்சனும் தனது பண்பாடு பாரம்பரியத்திலும் பார்க்கத் தமிழ் கலாச்சாரத்தில் மிகுந்த நாட்டமுள்ளவரானதால், மரகதத்தின் வாழ்வும் இனிதே தொடர்ந்தது. இருந்தும் காலங்கள் கடந்தும் இவர்களுக்குப் பிள்ளைப்பாக்கியம் இல்லாமலே இருந்தது. ஆனாலும் விடுமுறை என வருடாவருடம் உள்ளூர் வந்து, ஓரிரு மாதங்கள் தங்கிப்போவதை வழக்கமாகக் கெண்டிருந்தனர்.

டேவிட்சன், சமூக சேவைகளில் ஈடுபடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுவார். அந்தவகையில் சில பொது நிறுவனங்களுக்கு உதவி வருவதையும், விடுமுறையில் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அவற்றை மேற்பார்வை செய்வதனையும் வழக்கமாக வைத்திருந்தார். மிகவும் இளகிய இரக்க சுபாவமே இவர்மேல் மரகதத்திற்கும் அன்புவரக் காரணமாக இருந்தது. பிள்ளை இல்லையே என்பது ஒரு குறையாக இருந்த மரகதத்திற்கு, இவர்கள் உதவிவரும் சிறுவர் காப்பகத்திலிருந்து ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றுக் கொண்டது, அக்குறையைத் தீர்த்தது. மரகதத்தின் மகனாக, டேவிட்சனின் வாரிசாக இப்போது தந்தையின் நிர்வாகத்தைக் கவனித்து வருபவனே நேசன். அமெரிக்காவிலேயே படித்துத் தந்தையைப் போலவே இயல்புகள் கொண்டு வளர்ந்தவனுக்கு, தானொரு தத்துப்பிள்ளை என்ற எந்தவிதமான செய்தியும் தெரியாமல், இன்றுவரை தன்னைப் பெற்றவர்களாகவே இவர்களை எண்ணி வாழ்ந்து வருகிறான்.

விடுமுறையில் இவர்கள் மூவருமாக வந்து, உள்ளூரில் சில மாதங்கள் தங்கி மகிழ்ச்சியாகக் காலம் கழித்து வருவதும், ஏழைகள், அநாதைகளாக்கப்பட்ட, கைவிடப்பட்ட சிறுவர்களைக் காணுமிடத்து அவர்களை உள்ளூர் சட்ட திட்டங்களுக்கு அமையக் காப்பகத்தின் வாரிசுகளாக்கிப் படிக்கவைத்து, சமூகத்தில் தரமானவர் களாகத் தன்னம்பிக்கையுடன் வாழவைப்பதில் பெரும் பங்காற்றி வந்தனர் டேவிட்சன் குடும்பத்தினர். கால ஓட்டத்தில் முதிர்வயதில் நோய்வாய்ப்பட்ட டேவிட்சன் இயற்கை எய்தினார். அவர் இறுதிக்காலங்களில் உள்ளூரிலேயே வாழ ஆசைப்பட்டதையும், தனது உடல் இங்கேயே புதைக்கப்பட வேண்டும் என்பதையும் நிறைவேற்றிய மரகதமும், மகனும் அவரது நினைவு நாட்களில் அமெரிக்காவில் இருந்து இங்கு வந்து, அந்நாளைத் தானங்கள் செய்து சிறப்பாக நினைவு கூருவது வழக்கமானது.

அம்முயற்சியில்தான் நேசன் தான்கண்ட அந்த நடை மேடைப்பூக்கள் இல்லை, இல்லை அரும்புகளுக்கு உணவளித்து, அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்ற விரும்பினான். அதன்படி அன்று அவ்விடம் சென்று அவர்களுக்கு உணவளித்தவன், ஆடைகளும் பரிசாக வழங்கித் தன் தந்தையின் நினைவு நாளில், அவர் ஆசைப்படி அப்பிஞ்சுகளில் விரும்பி வந்த ஒரு சிலரை அவர்களது பாதுகாவலர்களின் அனுமதியுடன், தங்களது காப்பகத்தில் சேர்த்து வைத்ததில் மகிழ்வு கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 ☞ நன்றிக்கடன்

ஊரில் பெரும்புள்ளி பொன்னர். பரம்பரை வழிவந்த பெரும் பண்ணையும், தோப்பும் வருமானம் தந்தாலும், வழிவழி வந்த மரபுகள் மாறாமல் வட்டிக்கெனப் பணம் கொடுத்து வாங்குவதும், அதில் தயவு தாட்சணியம் காட்டாமல் நடப்பதும், இரத்த சொந்தங்கள் தவிர மற்றவரை தீண்டத்தகாதவர்களாகத் தள்ளிவைப்பதும், அகப்படும் சொத்துக்களை தன்னுடமையாக்குவதுமாக, அரசியல் பலமும் அடியாட்பலமும் கொண்ட ஒரு நாட்டாண்மையாக ஆண்டு வருகிறார்.

இவரின் ஒரே மகன் தேவன். படித்தாலும் சொத்து சுகங்களை ஆண்டு பராமரிப்பதில் பழக்கப்பட்டு, மாமன் மகளை மணந்து, ஏகபுத்திரியாக செல்வியைப் பெற்று வளர்த்து வருகிறார்கள். பொன்னருக்கு முதுமை வந்தாலும், தன் கொள்கைகளை அப்படியே தேவனைக் கொண்டு நடாத்தி வருவதில் மிகக் கவனமுடனேயே இருப்பார். செல்வி கல்லூரியில் படித்து வந்தாலும், குடும்பத்தில் கொஞ்சம் வித்தியாசமான அன்பு, பண்பு, சமத்துவமென இரக்க சுபாவம் உடையவள்.

இவர்களது பண்ணையிலேயே பரம்பரையாகத் தங்கி வேலை பார்க்கும் கந்தன் குடும்பத்தினரின் உண்மை உழைப்பைப் பெற்றுவருவதால், அவர்களது தேவைகள் அனைத்தையும் ஈடுசெய்துவரும் தேவன், மாதக்கொடுப்பனவும் வழங்கிவருவது நடைமுறையானது. கந்தனின் இரண்டு ஆண் பிள்ளைகளில் மூத்தவன் தந்தை தாயுடன் பண்ணை வேலைகளில் ஈடுபட, இளையவன் குமரன் வேலைகளுடன் கல்லூரிப்படிப்பையும் தொடர்ந்து வந்தான்.

தேவன் வட்டிப் பணம் வசூலிக்க முடியாத நேரங்களில், அடியாட்களை வைத்து மிரட்டி வாங்குவதும், சொத்துக்களை எழுதி வாங்குவதும் தொடர்ந்த வண்ணமே இருந்தது. அடியாக்களின் பரம்பரையும் அடியாட்களாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து வந்தாலும், நாகரீக வாழ்க்கையில் இளைய தலைமுறை கொஞ்சம் தடம்மாறவே பார்த்தது. அந்தவகையில் மாறன், காந்தன் இருவரும் அடியாட்கள் பரம்பரையில் வந்தாலும், ஏன் நாம் இப்படி, நாம் முதலாளியாகினால் எம் பரம்பரையையும் மாத்தலாமே என எண்ணினாலும், அதிலும் குறுக்கு வழியையே கையாளப் பார்த்தனர். இதனால் செல்வியைத் தங்கள் வலையில் விழுத்தினால், ஒரே கல்லில் இரண்டு மாங்காயாக வாழ்வும், வளமும் சேர்ந்து வரும் என்பதில் முனைப்புக் காட்டினர்.

"காந்தன், என்ன மச்சான், என்னவாம் செல்வி கதைச்சனியோ?" என்றான் மாறன்.

"ஆ, அவள் ஒன்றுக்கும் அசையிறாள் இல்ல, அப்பாட்ட சொல்லட்டோ என்கிறாள்."

"சொல்லச் சொல்லு, அதப்பாக்கிறதும் நாங்களாத் தானே இருப்போம்" எனச் சிரித்துக் கொண்டான் மாறன்.

"இல்லையெடா, இது சரிப்பட்டுவராது, களத்தில இறங்க வேண்டியதுதான்" என இருவரும் திட்டமிட்டுக் கொண்டனர். அதன்படி செல்வி வரும்வழிமறித்துத் தங்கள் முயற்சியில் ஈடுபட, தப்பி ஓடமுடியாத செல்வி அவலக்குரல் எழுப்பினாள்.

நடமாட்டம் குறைவான இடம் என்பதால் உதவிக்கு எவருமே வரவில்லை. அதேநேரம் மாட்டுடன் சென்ற குமரனைக் கண்ட செல்வி, அவளையும் அறியாமல் பெரும் சத்தமாய் "குமரா" எனக்கத்தினாள். குமரன் வரவும், மாறனும் காந்தனும் முரண்பட்டு இறுதியில் "உன்னை பார்க்க வேண்டிய இடத்தில் பார்க்கிறோம்" எனச் சென்று விட்டனர். செல்வியும் தனது மானம், மரியாதை என, குமரனையும் எவருக்கும் சொல்ல வேண்டாமெனக் கேட்டுக்கொண்டு, தானும் மனதிற்குள்ளேயே மறைத்துக் கொண்டாள்.

கிழமை ஒன்று கடந்த நிலையில், குமரன் வைத்தியசாலையில் எனக் கேள்விப்பட்ட செல்வி, அவனுக்கு நேரில் நன்றிகூட சொல்லவில்லையே என்ற ஆதங்கத்தில், கல்லூரியில் இருந்து குமரனைப் பார்க்கச் சென்றவளுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கிவாரிப்போட்டது. ஒரு கால் இழந்த நிலையில் பரிதாபமாக இருந்தான் குமரன். அப்போதுதான் தெரிந்தது, மாறனும் காந்தனும் இரவு குமரனை வழிமறித்துத் தாக்கி வெட்டியதால், அவனது கால் துண்டாடப்பட்ட விடயம். செய்வதறியாது அழத் தொடங்கி விட்டாள் செல்வி. இருவரும் ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லியும் முடியவில்லை. இதன் பின்தான் தேவனுக்கும் கந்தனுக்கும் விபரம் புரிந்து, மாறனும் காந்தனும் காவல்துறையால் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

தேவனும் மனைவியும், செல்வியுடன் குமரனைச் சென்று பார்த்து வந்தனர். அவனது அன்றாடதேவைகளை ஆத்மார்த்தமாக நிறைவேற்றுவதில் மனம் திருப்திப்பட்ட செல்விக்கு, அவனிடம் அன்பு மலர்ந்து. நாளடைவில் காதலாக மாறியது.

“குமரா, என்ன மன்னிச்சிடு, என்னாலதான் உனக்கு இந்த நிலமை” என்று செல்வியும்,

“உன்னைக் காப்பாற்றியதில் எனக்கு நிறைவுதான்” எனக்குமரனும் பேசிக் கொண்டாலும்,

செல்வி “வாழ்நாள் முழுக்க உனக்கு நான்தான். என்னுயிர் உன்னால்தான் காப்பாற்றப்பட்டது. உன்னைக் காப்பது என் பொறுப்பு, அதுதான் நான் செய்யும் நன்றிக் கடன்” என்றாள். இருவரின் நிலை உணர்ந்த தேவனும் மனைவியும் தங்களது அர்த்தமற்ற பிடிவாதங்களை விட்டு, மகளின் ஆபத்தில் உதவிய குமரனை மருமகனாக ஏற்றுக்கொண்டனர். தற்போது குமரன், செயற்கைக்கால் பொருத்திய வண்ணம் பண்ணையின் உரிமையாளராக, செய்த நன்மைக்குக் கிடைத்த பரிசான செல்வியுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 நிதர்சனம்

"தம்பி, நேரமாச்சுஎழும்புங்கோ, கொஞ்சமெண்டாலும் காலையில படிச்சாத்தான் இது பழக்கத்துக்குவரும். இந்த வருசம் ஐந்தாம் ஆண்டு ஸ்கொலசிப் வேற, பஞ்சியப் பாக்காமல் எழும்புங்கோ" மெல்லத்தட்டி எழுப்பினாள் மலர், தன் மகன் சுதாவை.

"இன்னும் விடியேல்ல, இராத்திரியும் படிச்சிட்டுத் தானே படுத்தனான்." கண்ணைத்திறக்காமலே பதில் சொல்லிப் புரண்டு கொண்டான் சுதா.

"என்ர செல்லமெல்லே, உன்னை நம்பித்தானேடா அம்மா இருக்கிறா. எனக்கு வேற யார், எழும்படா குஞ்சு." செல்லமாகக் கெஞ்சினாள் மலர். இதற்கு மேலும் அவனால் மேற்கொண்டு உறங்க முடியவில்லை. கண்ணைக் கசக்கிக்கொண்டு எழுந்து, முகத்தை அலம்பிக் குசினியில் பலகையில் அமர்ந்து கொண்டான். போர்ச்சூழலால் வன்னியில் உறவுகளைக் காவுகொடுத்து, மலரும் மகனும் மட்டுமே மீண்டு, முகாம் வாழ்வு முடித்து, முன்னமே இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் இருந்த இடத்தில் மீண்டும் குடியேறினார்கள். கணவனையும் இளைய மகளையும் இழந்த இவள், கிடைக்கும் நிவாரணத்துடன், கடைகளுக்கு சிற்றுண்டிகள் செய்து கொடுத்தும் வருகிறாள்.

பக்கத்துப்பள்ளியில் சேர்த்துக் கொண்டதால் போக்கு வரத்துப் பிரச்சனையில்லாமல் படித்து வருகிறான் சுதா. ஆண்டு ஐந்து ஸ்கொலசிப் பரீட்சைக்கென வசந்தி ரீச்சர்தான் பாடங்களெடுப்பதால், சுதாவும் நன்றாகப் படித்து வருகிறான். பிள்ளைகளில் அவர் நிரம்பவும் கவனமெடுப்பதால் எல்லோருக்கும் அவவிடம் மதிப்பும் மரியாதையும்தான். சுதாவின் நிலமை புரிந்ததால், அப்பப்ப ரீச்சரும் சிறு சிறு உதவிகள் செய்து, சுதாவையும் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார்.

பாடசாலை தவிர்ந்த மேலதிக நேரப்படிப்புக்காக, வசந்தி ரீச்சரிடம் வேறு பாடசாலைப்பிள்ளைகளும் ரியூசன் வருவது வழக்கம். அந்தவகையில் சுதாவும் ரீச்சரின் அழைப்பின்பேரில் பாடம்பயிலச் சென்றுவருவது வழக்கமானது. இதனால் இவனுக்கு வேறு பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் பழக்கங்கள் கிடைக்கப்பெற்றன. எதையும் இலகுவில் புரிந்து கொள்ளும் தன்மையும், கிரகித்து நினைவில் நிறுத்திக்கொள்ளும் கெட்டித்தனமும், இவனிடம் இயல்பாகவே இருந்ததால், படிப்பு இவனுக்கு பாகற்காயாய் இருந்ததில்லை. படிப்பைப்போல், மற்ற விடயங்களும் இவனுக்குள் புகுந்து விடுவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருந்தது. ஆடம்பரமும் அந்தஸ்தும் கூடிய மாணவர்களும் அவர்களின் பழக்கவழக்கங்களும், நடையுடை பாவனையும் இவனைப் பாதிக்கத்தான் செய்தது. ஏன் அம்மா எங்களுக்கு மட்டும் இப்படி, அவையளுக்கு அப்படி என்பான்.

"எல்லாம் ஆண்டவன் சித்தம், எல்லாமே நன்மைக்குத்தான் என்றும், எங்களிலும் பார்க்க எவ்வளவோ ஏழைகள் உள்ளனர், அவர்களும் மனிதர்கள்தானே, நாம் எல்லோரிடமும் அன்பாயும் ஆதரவாயும் நடந்துகொள்ள வேண்டும். அப்படி நடந்தால் நமக்கு எல்லாமே நலமாய் நடக்கும்." அப்படி என்று அடிக்கடி புத்தி சொல்லிக் கொடுப்பாள் மலர். இதனால் சுதாவிடம் படிப்போடு நல்ல பண்புகளும் ஒட்டிக்கொண்டன.

இவனோடு பக்கத்துத் தெருவில் குடியிருக்கும், பெரிய கல்லூரியில் படிக்கும் மாணவர்களும் ரியூசனில் நண்பர்களாகியதால், போக்குவரத்தில் ஒன்றாகச் சென்று வரும் சந்தர்ப்பங்கள். அதில் ராஜன் என்பவனின் தந்தை வெளிநாட்டில் வேலை செய்வதால், அவன் தாயாரே ராஜனைக் கல்லூரி, ரியூசன் என்று மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்வது வழக்கம். சந்தர்ப்பங்களில் சுதாவையும் ஏற்றி வீட்டில் இறக்கிவிடுவதால், மலருக்கும் ராஜனின் தாயாருக்கும் சினேகம் வளர்ந்தது.

ராஜனின் குடும்பம் பண வசதியிலும், பகட்டு வாழ்விலும், சமூகத்தில் தங்களைப் பெரிதாகக் காட்டிக் கொண்டு வருவதில் வல்லவர்கள். நாலுபேர் தங்களை அப்படி இப்படிச் சொல்லவேண்டும் என்பதற்காக, அநியாயத்திற்கு ஆடம்பரத்தை ஆட்கொள்பவர்கள். ஒரே மகன் படிப்பிலும் மற்ற எல்லோரிலும் முன்வர வேண்டும் என்ற ஆவலில், கல்லூரி தவிர்ந்த வசந்தி ரீச்சர், இன்னும் பெயர் பெற்ற ரியூசன் என மூன்று இடங்களில் மாறி மாறி ஸ்கொலசிப் வகுப்புகளுக்கு ராஜனை அனுப்பி எடுப்பதில் கவனமாய் இருந்தனர். ராஜனோ தாய் தந்தையர் நினைப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் இல்லாமல், நுண்ணறிவுத் திறமையில் சுமாரான வனாகவே இருந்தான். ஆனாலும் ஸ்கொலசிப்பில் சித்தி எய்தாவிடில் தங்கள் மதிப்பு மரியாதை குறைந்துவிடும், சுற்றம் சூழலில் தலைகாட்ட முடியாது, கல்லூரியில் கதை சொல்ல முடியாது, பத்திரிகையில் பெயர் வர முடியாது என்ற ஏக்கம் வேறு அவன் தாயாருக்கு இருந்தது. இவ்வழியில் கவனம் செலுத்தும் பெற்றோர்கள் பிள்ளையின் உள வளர்ச்சியில் துப்பரவாகக் கவனம் செலுத்துவதே இல்லை. உடையிலும் உடலிலும் உள்ள கவனம் படிப்பிலும் பண்பிலும் வளர்க்க அவர்களுக்குத் தெரியவில்லையோ, அல்லது அதன் தாற்பரியம் புரியவில்லையோ தெரியவில்லை.

இதனால் ராஜன் வெளியில் பகட்டாக, எடுப்பாக இருந்தாலும், அவன் மனதில் ஏதோ ஒரு வாட்டம் இருந்தே வந்தது. மெசின்கள் போல அவனைப் படி படி எனத்தூண்டும் அளவிற்கு அவனது மற்றைய விடயங்களில் கவனம் செலுத்தாத பெற்றோரால் பிள்ளைகளின் மனநிலை பாதிப்படையும் என்ற சிந்தனை அற்ற பெற்றோராய், இப்படி இளமனசுகள் மடிவுற்று, அவர்களின் குழந்தை உள்ள உணர்வுகள், உற்சாகங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு, விளையாட்டுக்கள் குறும்புகள் இன்னும் அன்பு, பரிவு, பாசம் என்பன கிடைக்கப்பெறாமல், இத்தனையும் இருந்தும் அனுபவிக்க முடியாதபடி கௌரவப்படிப்பு எனும் பெற்றவர்களின் மாயக்கவர்ச்சியில் நசிபட்டுப்போகும்போது, எதிர்காலத்தை ஆளும் இன்றைய இளைய தலைமுறைகள் மனித நேயத்துடன் வாழ்ந்து வளம்பெறுவதென்பது கேள்விக்குறியாகவே இருந்தது.

ராஜன், சுதா இருவரின் உறவும் வலுப்பெற, ராஜனுக்கு சுதாவின் தாயின் பாசமும், பரிவும், அன்பும் அரவணைப்பும் மிகவும் பிடித்துப்போயிருந்தது. தன் வீட்டில் கிடைக்காத, பணத்தால் அடையமுடியாத, அனைத்தும் கிடைக்கும் இடத்தில் நாட்டம் கூட வருவது இயற்கைதானே. இதனால் அவன் பாடசாலை மற்றும் ரீயூசன் தவிர்ந்த ஏனைய நேரங்களில் சுதாவீட்டை நாடுவது வழமையானது. அங்கு செல்வதிலும், அவர்களுடன் கூடி மகிழ்வதிலும், மனமகிழ்வும் மனநிறைவும் அடைவது அவனின் முகத்திலேயே தெரியும். இது ராஜனின் தாயாருக்குக் கொஞ்சம் தர்மசங்கடமானது. இதனால் மகனைப் படிப்புப்படிப்பு என மேலும் இறுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தாள். படிக்க என இருப்பவனுக்கு, சுதாவின் தாயாருடன் தன்தாயை ஒத்து நோக்கும் சிந்தனைதான் ஓடியதே தவிர, படிப்பு ஓடவே இல்லை. என்னை அம்மா அன்பாய் அழைப்பதில்லை, மடியில் வைத்து அணைப்பதில்லை, உணவு ஊட்டுவதில்லை, எல்லாமே அவசரமும் அதிகாரமும் மட்டுமே என்று ஏங்குவான்.

இதனால் அவனோ மனநிம்மதி இழந்து தவித்து, நித்திரை இழந்து துடிப்பான். ஆனால் தாய் கைத்தொலைபேசியில் பேசியவண்ணம் படுக்கையில் இருப்பாள். அவனுக்குத் தேவையான அனைத்தும் அதாவது உணவு, உடை, உறைவிடம் என்பவை கொடுத்தால் மட்டும் போதும் என எண்ணியவள், தன் நிம்மதியும் தன் நிலமையும், இப்படியே இருக்கவேண்டும் என நினைத்தாளே தவிர, மகனின் மறுபக்கம் பார்க்க மறந்ததுதான் மடமை என்பதை அறியவில்லை அவள். பரீட்சையும் நடந்து முடிந்தது. பெறுபேறுகளும் கிடைத்தன.

ராஜன் வெட்டுப்புள்ளிக்குள் வரவில்லை, ஆனால் சுதா, திறமையான முறையில் சித்தியெய்தி இருந்தான். மனமுடைந்த ராஜனின் தாய், தன் மானம் மரியாதை, சமூக அந்தஸ்து எல்லாம் போனதாய் எண்ணிப் பிள்ளையை நச்சரித்தே நையப்புடைத்தாள். அவனுடன் படித்து வென்றவர்களின் வாழ்த்துக்களும், பரிசில்களும் அவளை மேலும் மேலும் குழப்பத்துக்குள்ளாக்கியது. தன் ஒரே மகனின் மனநிலை புரியாது, அவனின் எதிர்காலம் தெரியாது, வாழ்வில் மிகத்தோல்வியைச் சுமந்தவள்போன்ற நிலையானாள் அவள். மூன்று நான்கு நாட்களாய் ராஜனின் தாயாரையும், ராஜனையும் காணாததால், மலரும் சுதாவும் அவர்களின் வீட்டிற்கு சென்றிருந்தனர். இவர்களைக் கண்டதும் ராஜன் ஓடிவந்து சேர்ந்து கொண்டான்.

“அம்மா, அம்மா அன்ரியும் சுதாவும், வாங்கோ, இங்க வாங்கோ” என்று தாயை அழைத்தான். வேண்டாவெறுப்பாய் வெளியில் வந்தவள், சம்பிரதாயத்துக்காக “வாங்கோ, இருங்கோ” என்றாள்.

“என்ன, அந்தப்பக்கமே காணேல்ல. அததான் ஏதும் வருத்தமோ எண்டு பாத்திட்டுப்போகலாம்” என்று இழுத்தாள் மலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓம், ஓம், எனக்கும் கொஞ்சம் சுகமில்லைத்தான். இவன் செய்த வேலையைப் பாத்தனீங்களே, எனக்கு வெளியால தலகாட்ட ஏலாமல் பண்ணிட்டான்” என்று தலை குனிந்தாள் ராஜனின் அம்மா. ஏற்கனவே ஓரளவு இவர்கள் பற்றித்தெரிந்த மலருக்கு, ராஜனின் அம்மாவின் தாக்கம் புரிந்திருந்தது.

“சரி சரி, இதெல்லாம் பெரிய விடயமில்ல. அப்படி பிள்ளை என்ன வெட்டுப்புள்ளிக்குள் வரவில்லையே தவிர, அவன் பாஸ்பண்ணித்தானே இருக்கிறான். நாங்கள் செய்யிற பிழை இதுதான். தட்டிக்கொடுத்து, பிள்ளை மேலும் முன்னேற ஊக்கம் கொடாமல், அதற்கு முயற்சிக்காமல் விட்டிடுவோம். எங்கட எதிர்பார்ப்பு நடைபெறவில்லையே என்கிற ஆதங்கத்தில் பிள்ளையின் மனம் பாதிக்குமே, அவன் ஆளுமையுள்ளவனாய், எதிர்நீச்சல் போடுபவனாய், சமூகத்தோடு ஒத்தோடுபவனாய், பாசமுள்ளவனாய், மனித நேயமுள்ளவனாய் வளரவேண்டும். சவால்களைச்சந்தித்து வெல்லவேண்டும் என்ற சிந்தனையற்ற பெற்றோர்களால் எம் இளையசமுதாயம்பாழ்படுவதுதான்உண்மை. இந்நிலைமாறி படிப்போடு பண்புகளும் ஆன்மீகமும்வளர அனைவரும் முயற்சிசெய்தாலே சமூகம் மேம்படும், உயர்வுகொள்ளும். இதை ஒவ்வொரு பெற்றோரும் உணரவேண்டும்” என்றாள் மலர்.

சுதாவுக்கு வெற்றி கிட்டியதால், அவனுக்கும் ராஜனின் கல்லூரியில் இடம் கிடைத்தது. இருவரும் ஒன்றாகத் தற்போது ஆண்டு ஆறு படித்து வருகிறார்கள். சுதாவின் தாயுடன் பழகியதாலும், உண்மை நிலை உணர்ந்ததாலும், ராஜனின் தாயாரும் நிலமை புரிந்து, அவனை அரவணைத்து, அன்புசெலுத்தி தட்டிக்கொடுத்ததால், வகுப்பில் தற்போது இருவருமே திறமைகாட்டிப் படித்து வருகிறார்கள். நாம் நம் நிலமையையும், மற்றவர் மனதையும் புரிந்து நடக்கும்போது அனைத்திலும் வெற்றி நம்பக்கம்தான்.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 ☞ திருந்திய வாழ்க்கை

காலைவேளை பரபரப்பில் ராசாத்தி சுற்றிச் சுழன்றாள். கணவனுக்கும், மகன் வரதனுக்கும் சாப்பாடுகள் சரிசெய்து, கட்டிவைத்து இருவரையும் வேலைக்கும் பள்ளிக்கும் அனுப்புமட்டும் ஒரே அவசரம்தான். அதுமுடியக் கால்நடைகளைக் கவனித்து, வீடுவாசல் கூட்டிப்பெருக்கி காலைஉணவு உண்டதும், துணிமணிகள் துவைத்தல், அடுத்தவேளை உணவுசமைத்தல், எனஇரவு படுக்கைக்குப் போகுமட்டும் ஒரேவேலைதான். வீட்டுப் பெண்களுக்கு இது வழக்கம் என்றாலும் ராசாத்திக்கு மாமன்மாமி, தாய்தந்தை என்ற எவ்வித உதவியுமில்லாதது ஒரு குறைதான். இதனால் வேலைப்பழுவும் கூடியது போலத்தான். அழகிய கிராமச் சூழலில் ராசாத்தி, கணவன், மகன் மட்டுமே உலகமெனத் தனித்தே வாழ்ந்து வந்தாள். அவர்களின் பணிவிடைகளுடன் நாட்கள் நகர்ந்துவந்தது. மகன் வரதன் படிப்பில் மிகவும் கெட்டிக்காரனாய் இருந்ததால், அவனது உயர்வு நாடியும், கணவனின் நண்பர்களது அறிவுறுத்தல்களின் படியும் வரதனை நகரத்தில் பிரபலக் கல்லூரியொன்றில் சேர்த்தனர்.

அன்றும் வழமைபோலக் காலை வேலைகளை முடித்துவிட்டு, மகனின் உடுப்புகளைத் தோய்க்கக் கொண்டுசென்றவளுக்கு அவனது சேட் பையிலிருந்து இரண்டு இனிப்புகள் கிடைத்தன. அதிலொன்றை வாயில் போட்டுக்கொண்டு உடுப்புகளை ஊறவிட்டவளுக்கு, அந்த ரொபியின் சுவையும், அதுதந்த உணர்வுகளும் புதிதாகவும் நல்லதாகவுமே இருந்ததால் மற்றதையும் வாயில்போட்டுக் கொண்டாள். துணிகளின் வேலைமுடித்துக் காயவிட்டு அடுக்களை திரும்பியவளுக்கு ஓர் தடுமாற்றமும், ஆனால் உடலில் இனம்புரியாத இன்பஉணர்வும் தோன்றியது. என்னவென்றே புரியாதவளாய் அடுப்பைப் பற்றவைக்க மண்ணெண்ணையை உற்றியவளின் உடையிலும் தீப்பற்றிக் கொண்டது. செய்வதறியாது அலறத்தொடங்கினாள். அயல்வீட்டாரின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டு, ராசாத்தி வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டாள். கணவனுக்கு அறிவிக்கப்படவே, அவன் உடனேயே வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசாத்தியுடன் நின்றுகொண்டான். நல்ல வேளை உடனேயே தீ அணைக்கப்பட்டதால் உயிராபத்தில்லாமல் போனது. இருந்தும் முகத்தில் ஏற்பட்ட காயங்கள் கொஞ்சம் ஆழமாகவே இருந்தன. கல்லூரி முடிந்து வந்தபின் தான் வரதனுக்கு நடந்தவை தெரிந்தது. ஓடிச்சென்று தாயைப்பார்த்தவன் "என்னம்மா, எங்களுக்கெல்லாம் கவனம் சொல்லும் நீங்கள் எப்படிக் கவனமில்லாமல், சீ, நல்ல காலம் இந்தளவத்தோட முடிஞ்சது" என்றவனுக்குத் தாய் நடந்ததைச்சொன்னதும் தான் தனது தவறுபுரிந்தது.

கிராமச்சூழலில் வஞ்சகமில்லாது நல்ல பழக்க வழக்கங்களோடு இருந்தவனுக்கு, நகரத்தின் பழக்கங்களும் புதிய நண்பர்களின் நட்பும், காரணமாக மறுக்கமுடியாத சிலசெயற்பாடுகளில் ஈடுபாடு ஏற்பட்டது. இந்தவகையில் தான் வரதன் போதைக்கும் பழக்கப்படுத்தப்பட்டு அதைத் தொடரவும் செய்தான். அதன் விளைவுதான் கவனயீனமாகப் பையில் விட்டதும், இன்று அம்மாவின் இந்நிலைக்குத் தானே காரணமானதும் குற்றஉணர்வாகி அவனைப் பற்றிக்கொண்டது. அம்மாவின் அழகிய முகம் இனி அவலட்சணம்தான். நிதமும் பார்க்கையில் என்னைக் கொல்லுமேயெனக் கலங்கினான். என்னதான் கலங்கிக் கவலைப்பட்டாலும் நடந்தது நடந்ததுதானே. பழைய நிலைக்கு அம்மா எங்கே எனச்சிந்தித்தவன் மனதுக்குள் ஒருமுடிவுக்கு வந்தான்.

இனியும் நான் அக்கல்லூரியில் படிக்கப் போவதில்லை, அம்மாவின் நிலையைக்கூறி அப்பாவிடம் சொல்லித் திரும்பவும் கிராமத்துடன் இணையவேண்டும். ஆசைப்பட்டது அநியாயமாய்ப் போய்விட்டது. கள்ளம் கபடமற்ற வரதனின் உள்ளம், கபட உளங்கொண்ட நகர நண்பர்களால் திசைமாறியது உண்மைதான். அன்றிலிருந்து திருந்தியவனாய் நேர்வழியில் தொடர்ந்தான் வரதன். தற்போது அனுபவங்கள் தந்த பாடத்துடன், கல்லூரிப் படிப்பு முடித்து பல்கலைகழகத்தின் அனுமதிக்காகக் காத்திருக்கிறான் தன் தாய் தந்தையுடன் இனிதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 ☞ துயர் தீர்ப்பான் தோழன்

வழமைபோலத் தன் அலுவலக வேலைகளில் மும்முரமாய் இருந்த சேகரின் தொலைபேசி ஒலித்தது. "இம் சொல்லுங்க. நான் சேகர் பேசுறேன் என்ன விடயம்" "சேர் உங்கள் நண்பன் மோகன் இப்ப சரியாகிட்டார், எல்லா விதத்திலும் நன்றாகவே உள்ளார். நீங்கவந்தா நாளைக்கே ஒப்படைப்போம்" என மறுமுனையிலிருந்து பதில் வந்தது "நன்றி சந்தோசம். நாளைக்கு வருகிறேன்" என்ற சேகருக்கு ஒரே சந்தோசம். அப்படியே பழைய நினைவுகளை மீட்டிக் கொண்டான்.

கிராமப்புறத்தில் ஒரு சாதாரணக் கூலித் தொழிலாளியின் மூத்தபிள்ளைதான் சேகர். படிப்பில் படுசுட்டியாய் இருந்ததால், இடைநிலைப் படிப்பை நகரக் கல்லூரி ஒன்றில் தொடர வாய்ப்புக்கிடைத்தது. அங்குதான் முதன்முதல் மோகனின் அறிமுகமும், அது நாளடைவில் நட்பாகவும் மாறியது. மோகன் நகரவாசி, தந்தையார் அரச அலுவலகம் ஒன்றில் பதவிநிலை அதிகாரி. சமுக அந்தஸ்தும் பணபலமும் இருந்ததால் மிகவும் ஆடம்பரமாகவே வாழ்ந்து வந்தான். படிப்பு அவனுக்குப் பொழுது போக்காகவே இருந்தது. சேகர் நண்பனாக இருந்தாலும் பணபலமுள்ளவர் நட்பே இவனிடம் செல்வாக்குச் செலுத்தியது. இவர்களின் நட்பு, மோகனை நாளடைவில் போதைப்பழக்கத்துக்கு ஆளாக்கியது. போதை இல்லாவிடில் இயங்காத நிலைக்கு அடிமையானான்.

ஒருமுறை இருமுறை என்றில்லாமல் பலமுறை காவல்துறையிடம் மாட்டுவதும், சமுகச் செல்வாக்காலும் பணபலத்தாலும் பெற்றோர் மீட்டுவிடுவதும் வழக்கமானது. இறுதியில் ஊடகங்களிலும் வெளிவரவே உறவறுத்து மோகனை வீட்டை விட்டே துரத்திவிட்டனர். படிப்பும் பாதியில் நிற்கப் பரதேசியானான் மோகன்.

இதேநேரம் முதல்நிலையில் தேர்வெழுதி, மாவட்டச் செயலகத்தில் உயர் பதவியும் பெற்று, தற்போது ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக அந்தஸ்துடன் வாழ்ந்து வருகிறான் சேகர். இருந்தும் தன் நண்பனின் இழிநிலை கண்டு மனம் வெதும்பியவன், மோகனின் பெற்றோருடன் பேசிச் சமரசப்படுத்த முயன்றும் முடியவில்லை. ஆரம்பத்தில் சுமாராய்ப் பழகிய மோகன். நாளடைவில் நெருங்கிய உறவினன் போலானான். இருந்தும் பணக்கார நட்புகளின் சகவாசம், தவறான பாதையில் போவதாகப் பலமுறை சேகர் சொல்லியும் அவன் ஏற்கவில்லை. சேகர் சற்று விலகியதும் உண்மைதான். ஆனாலும் உண்மை நட்பு அவனை வீதியில் விடவில்லை. எடுத்த முயற்சிகள் தோற்றுப்போக, இறுதியிலேயே புனர்வாழ்வு மையத்தில் மோகனைக் கையளிக்க நேர்ந்தது.

இவ்வளவும் நினைவில் நிழற்படமாகியது. மீண்டும் மோகனுக்கான எதிர்காலத் திட்டங்கள் பற்றி சிந்தித்துக் கொண்டான். தற்துணிவின் மூலம் மோகனுக்கு ஓர் சுயதொழில் வாய்ப்பையும், அதற்கான அரச மானியத்தையும் ஏற்பாடு செய்து வைத்திருந்தான் சேகர். நற்குணம் கொண்டவன் தான் மோகன். சேரிடம் தவறியதால் இன்று இந்நிலை.

காலம் கடந்தது ,சேகரின் திட்டப்படி மோகன் தற்போது ஓர் தொழிலதிபர். இருபது பேருக்கு வேலைவழங்கும் முதலாளி. கால்நடைத் தீவனங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றை நிர்வகித்து சந்தோசமாக வாழ்கிறான். தற்போது அவன்நிலை கண்டு உறவாட வந்தனர் பெற்றோர். ஆபத்தில் என்னை விரட்டிய இவர்களிலும், தன் வாழ்வில் உண்மை உயர்வுகாண உழைத்த நண்பன் தான், பெற்றோரிலும் உயர்ந்தவனாக அவன் உள்ளத்தில் திகழ்ந்தான்.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 ☞ வசதிக்கே வாய்ப்பா?

கோயில் மணி ஓசையும், கோழிச் சேவலின் கூவலும் விடியலின் வாசலைத்தட்டி நின்றாலும், கூரை நீக்கலின் இடையே மெல்லிய ஒளிக் கீற்றுக்கள் கண்களில் தென்படவே இல்லை. புரண்டு படுத்துக் கொண்டவள் கைகளால் குழந்தையைத் தொட்டுப்பார்த்துக் கொண்டாள். படுக்கையில் ஈரம் தென்படவே அவைகளைச் சரிசெய்து குழந்தையை வளர்த்திக் கடவுளே, என்றவண்ணம் மீண்டும் பாயில் புரண்டு திரும்பினாள் கமலம். நித்திரைக்கும் அவளுக்கும் நீண்ட இடைவெளி இருந்தது ஏதோ உண்மைதான்.

வறிய குடும்பத்தில் பிறந்தாலும், வறுமை தெரியாமல் வளர்ந்ததால், இளவயதிலேயே கண்காணிப்பும் கட்டுப்பாடும் இல்லாமல் போனதாலும், கண்டதே காட்சி கொண்டதே கோலமென, ஆசைக்கு அணைபோடாமல் அச்சமின்றி வாழ்ந்ததால், மிச்சமாகக் கிடைத்த பரிசு குழந்தை தீபா மட்டும் தான். உணவிட்டால் போதும் என்று உரிய கடமைகளைத் தட்டிக்கழித்த ஊதாரிப் பெற்றோரால் உதாசீனமானவள் இவள். உறவுகள் சொல்லை உதறித்தள்ளி, உணர்ச்சிக்கு உரிமம் கொடுத்ததால், சமூகத்தால் தள்ளிவைக்கப்பட்டுத் தனியான ஓரிடத்தில் ஒதுக்கமாகவும், கெட்டபின்னே வந்த ஞானத்தால், இப்போது ஒழுக்கமாகவும் வாழ்ந்து வந்தாலும், இவள் முகவரி முழுதும் மறைக்கமுடியாத மையால் அல்லவா அச்சிடப்பட்டுள்ளது. படிப்பு என்று பெரிதாக ஒன்றும் இல்லை. என்றாலும் அனுபவம் தந்த படிப்பு, அவளைப் புடம்போட்டே இருந்தது.

அகதிக்கு ஆகாயம் துணை என்பது போல், இவளுக்கு அரச உதவிகளும், வறுமைக் கோட்டுக்குக் கீழான பாதுகாப்பும் இருந்தாலும், இவளது வாழ்க்கைச் சக்கரம் சுழல்வது பெரும் சிரமமாகவே இருந்தது. இளமைச் செழிப்பும், இன்முகத் தோற்றமும் இளையோர் முதல் அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தது. கைகொடுத்து உதவும் அளவுக்குத் துணிச்சலற்றவர்களாகத் தூரவே நின்றவர்கள்தான் அதிகம். ஏனெனில் சமூகத்தில் இவள் பெற்ற புள்ளிகள், இவளிலல்லவா புள்ளியிட்டு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச உத்தியோகத்தர்கள் சிலரின் வீட்டு வாடிக்கை வேலைகளும், அவ்வப்போது கிடைக்கும் அவசரச் சமையல் வேலைகளும் இவளுக்கு ஒருவருமானத்தைக் கொடுத்தாலும், பாதுகாப்பு இல்லாததும், பாசமுள்ள உறவுகள் இல்லாததும், தான் விட்ட தவறுக்குக் கிடைத்த தண்டனையாகவே நினைத்து, தனிமையிலும் தன்னம்பிக்கையுடன் வாழ்ந்து வந்தாள். எந்தவித இலட்சியமும் இல்லாமல், அர்த்தம் புரியாமல் வாழ்ந்தவள் இப்போது கொண்ட இலட்சியமோ மிகப் பெரிது.

முண்டியடித்துப் பழக முயன்றவர்களில், மிகவும் விரும்பியதும் மனதார நேசித்ததும் முத்து என்ற ஒருவனைத் தான். தன் உணர்வுகளுக்கும், உடல் உள உணர்ச்சிகளுக்கும் அவனையே வடிகாலாக்கியிருந்தாள் கமலம். காலத்தின் கோலமோ, கடவுளின் நியதியோ அவனை இவளிடம் இருந்து பிரித்து, இவளைச் சுமையாக்கித் தீபாவை உறவாக்கிக் கடந்து சென்றுவிட்டது காலம். தன்மகள் தீபாவை மேல் நிலைக்கு உயரவைத்துச் சமூகத்தில் பதியவைத்து, அவளது உச்சநிலையின் நிழலில் தனது பழைய முகவரியைத் தொலைத்து, மற்றவர் மத்தியில் தலை நிமிர்ந்து நின்று காட்டவேண்டும் என்பதே இவளது இப்போதைய இலட்சியம், கனவு எல்லாம்.

நாம் ஆசைப்படுவதும், அதற்காக அயராது உழைப்பதும் உண்மை என்றாலும், ஆண்டவனின் சித்தம் அப்படியே அமைந்து விடுவதில்லை. இதைத்தான் வாழ்ந் தவர்களும் வாழ்பவர்களும் விதி என்று சொல்லியே மனமதைத் தேற்றிக்கொள்கிறார்கள். ஆண்டவன் படைப்பு கள் அற்புதமாக இருந்தாலும், அவை அனைத்தும் உயிர் வாழ்ந்திடப் போராடியே வெல்லவேண்டி உள்ளது நியதியாகியே நிற்கிறது. அரசமானியங்களும், பெண்தலைமைக் குடும்பமெனத் தரப்படும் இலவசக் கொடுப்பனவுகளும் அவ்வப்போது வாழ்க்கைச் சுமையை இலகுபடுத்தினாலும், இயற்கை அனர்த்தங்கள் இயல்பான போக்கை மாற்றிவிடுவதும் மறைக்கமுடியாத உண்மைதான். இதைப்பயன்படுத்திப் பொருட்களைப் பதுக்கிச் செயற்கை யான தட்டுப்பாட்டை ஏற்படுத்தும், அங்காடி முதலாளிகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் அதிகாரிகள் ஆகியிருந்தனர். இதில் முன்னுரிமை என்பது ஏழைகளுக்கு என்ற காட்சிப்படுத்தலுடன் பட்டம் பதவிகளுக்கே சென்றடைவதை யார் தடுப்பது?, யார் கேட்பது?.

தொண்டை அரிப்பும், அடிக்கடி இருமலும் வந்து தூக்கத்தைக் கெடுத்தாலும், காலையில் கச்சேரியில் ஒரு பதிவுக்காக வரச்சொல்லிக் கடிதம் வந்ததால், முதல் பேருந்திலேயே செல்லத் திட்டமிட்டிருந்தாள் கமலம். அவ்வாறே நகரத்தில் சிலபல தேவைகளையும் முடித்துக் கொண்டு வரும்போது, பரிசோதனைக்காகக் கொடுத்த சளி, மற்றும் இரத்த மாதிரிகளின் அறிக்கையையும் எடுத்து வைத்தியரிடம் காட்டி வரவும் யோசித்தாள் கமலம்.

குழந்தையின் முன்னுரிமை, பேருந்தில் இருக்கையும் கச்சேரியில் தடங்கலில்லாத பதிவுக்கும் உதவிநின்றது. இப்படியே வைத்தியசாலை வந்தவளுக்குச் சோதனை அறிக்கை வேதனையான முடிவைக் காட்டியதால் கமலம் மனம் மடிந்து, இடிந்து போனாள். காசநோய் அறிகுறிகள் இருப்பதாகவும், தொடர் வைத்திய பராமரிப்புத் தேவை எனவும், மற்றவர்களுக்குப் பரவாத வண்ணமான இவளது நடவடிக்கைகள், பராமரிப்புகள் பற்றியும் அறிவுறுத்தப்பட்டு அனுப்பப்பட்டாள்.

இலட்சிய வாழ்வின் வாசல் வளமிழந்து, ஒளி இழந்து இருளில் மூடிக்கொண்டது. தாய்ப் பாலை நம்பியிருந்த குழந்தைக்கு என்னசெய்வது? மற்றவர்களுக்குத் தெரிந்தால் வருமானத்துக்கு வழி..? இப்போதே விலகி நிற்பவர்கள் இனி? இப்படிப்பல கேள்விகளோடு நடைப்பிணமாகத் திரும்பினாள் கமலம். இதுவரை இலவசமாகக் கிடைத்த தாய்ப்பால் விசமானதால் பயந்து, பரிதவித்து நின்றாள்.

"இது ஒன்றும் பயங்கரமில்லை. முறையான சிகிச்சை எடுத்தால் முற்றாக மாற்றி விடலாம்." என்ற வைத்தியரின் அறிவுறுத்தல் ஆறுதல் தந்தாலும், எதிர்கால வாழ்வு பற்றிய ஏக்கம் ஏணியில் ஏறியே நின்றது. மற்றவர்க்குத் தெரியப்படுத்தாமல் தன்னோடு மறைத்துக் கொள்வோம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் வருமானத்தின் வாசலும் மூடாது இருக்கும் என்ற முடிவுடன் பேருந்திற்காகத் திரும்பினாள் கமலம். கண்ணெதிரே கடை ஒன்றின் முன்னால் நீண்ட வரிசையில் நின்றவர்களிடம் "ஐயா என்னத்துக்காக எல்லாரும் வரிசை யில நிக்கினம்?"

"தட்டுப்பாடான சாமானுகள் குடுக்கினமாம் அது தான்"

"ஐயா, பால்மா பக்கற்றும் வாங்கலாமோ?"

"ஓம் ஓம்" என்றவரின் பதிலைத் தொடர்ந்து குழந்தை தீபாவுக்கு இனி இது தானே, என்ற எண்ணத்துடன் மெல்லத் தானும் இணைந்து கொண்டாள் அவ்வரிசையில்.

இவ்வரிசைகூட ஒரு சமரச இடம்தான். எந்தவித வித்தியாசமும் இல்லாமல், இளையோர் முதல் முதியோர் வரை, இளைத்தவன், சளைத்தவன் என்றில்லாமல், ஆண் பெண் பாகுபாடு இல்லாமல், முட்டிமோதி பிதுங்கி வழிந்து நின்றது வரிசை. ஒருவருக்கு ஒன்று மட்டும்தான் என்பதால், கமலத்திற்குப் பின்னும் வரிசை நீண்டு சென்றது. பலவிதமான சுயநல நோக்குடன் நிற்பவர்கள் மத்தியில் மனிதநேயம் மறந்து நின்று வேடிக்கை பார்த்து, வாங்கி, கூடிய பணத்திற்கு விற்பவன், சாலையோரக் கடைக்காரனின் கைக்கூலிகள், அலுவலக அதிகாரிகளின் எடுபிடிகள், சொந்தத் தேவைக்காக காத்திருப்பவர்கள், இப்படிப் பலருடன் குழந்தையின் முன்னுரிமை பயனளிக்காத வரிசையின் பாதியில் நின்றாள் கமலம்.

"நேற்றுத் தான் வந்தது, மாவட்டச் செயலாளர் தட்டுப்பாடே இல்லையெனப் பத்திரிகையில் அறிவித்திருக்கிறார். இனிச் சங்கக்கடைக்கு வந்தால் பரவாயில்லை, அது மட்டும் இப்படித்தான்." என்ற குரல்கள் மத்தியில் வரிசை மெல்ல மெல்ல வளர்ந்து, நகர்ந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு கடை முன்னும் ஒவ்வொரு பொருட்களுக்காக மனித வரிசைகள்.

கைப்பையைத் திறந்து பத்திரப்படுத்தி வைத்த பணத்தில் ஐநூறு ரூபாவை எடுத்து வைத்துக் கொண்டாள் கமலம். "இன்னொரு பெட்டிமட்டும்தான் இருக்காம் உடைக்க. அது முடிஞ்சா நாளைக்குத்தானாம்" என்ற தகவலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலத்தின் காதுகளுக்கு எட்ட, முன்னால் எட்டிப் பார்த்தாள் கமலம். தான் ஐந்தாவது ஆளாக நிற்பதால் நிம்மதி அடைந்தாள். இருந்தும் நெரிசல் அதிகமாகி, வரிசை இறுகி வளைந்து நின்றது. பிரதான வீதி என்பதால் போக்குவரத்தும் அதிகமாகவே இருந்தது. அந்த இரைச்சல் மத்தியிலும் குழந்தை தீபா தோளில் சாய்ந்து, விரல் சூப்பியபடியே தூங்கிப்போனாள்.

தொடராகச் சென்ற வண்டிகளில் ஒன்று கடை யோரமாக மெல்லவே ஒதுங்கி நின்றது. அதிலிருந்து இறங்கியவரின் தோற்றமும், வண்டியில் ஒட்டி இருந்த அடையாளமும் அவர் ஒரு வைத்தியர் என்பதை வெளிப்படுத்தியது. என்ன இவரும் வரிசையில் நிற்கத்தானோ? என்று எண்ணியவளுக்கு, அந்தத் துன்பத்தைக் கொடுக்காது கடைப்படியில் கால் வைத்தவரை "வாங்கோ ஐயா, வாங்கோ, என்ன வேணும்"? என்ற முதலாளியின் குரல் மெல்லத் தணிந்து, சைகை மூலம் கடைப் பையனை அழைத்து ஏதோ காதில் சொல்ல, அவனும் தலையாட்டி உள்ளே சென்றான். ஒரு பையில் ஏதோ போட்டு எடுத்து வந்து வைத்தியரின் வண்டியில் வைத்தான். வைத்தியரும் சிரித்துக் கையசைத்து ஒரு வெற்றி நடையுடன் வண்டியிலேறிச் சென்று விட்டார்.

"பாருங்கோ, நாங்கள் வெய்யிலில் வாடி வரிசையில் நிக்கிறோம். உது பால்மா பக்கற்தான் போகுது. படிச்சவையளின்ர மாதிரிப் பழக்கத்தப் பாருங்கோ." இப்படியான கதைகள் மத்தியில் தன்னுள் உசாராகிக் கொண்டாள் கமலம். பிள்ளையைத் தோள் மாற்றி வளர்த்திக் கொண்டு எல்லையை எட்டியவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

"சரி எல்லாம் முடிஞ்சுது. இனி நாளைக்குத் தான். அதுவும் எங்கட லொறி வந்தால்தான்" என்ற முதலாளியின் குரல் ஓங்கி ஒலித்தது. கமலத்திற்கோ தூக்கிவாரிப்போட்டது. கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத பரிதாபநிலை. இது தனக்காகத் தான், அம்மா நிக்கிறா என்பது தெரியாத குழந்தை தீபா சுற்றிப் புதினம் பார்த்துக் கொள்கிறாள். கண்கள் பனித்து விட்டது கமலத்திற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்வது? பலபேரினது விமர்சனங்களுடன் கூட்டம் கலைய, எதுவுமே புரியாமல் மீண்டும் பேருந்தில் ஏறிக்கொண்டாள் கமலம். மனம் மாளாமல் தவித்தது. வசதி வாய்ப்புகள், அந்தஸ்து அதிகாரம் அத்தனையும் உள்ளவர்களுக்கே கிடைக்கிறது. இறைவன் இரக்கமும் அவர்களுக்கே கிடைப்பதென்றால்! சீ, என்ன இறைவன் என்று சலித்துக் கொண்டாள் கமலம். கறுப்புச் சந்தையில் வாங்கும் வசதியும், இது இல்லை என்றால் இன்னொன்றைத் தெரிவு செய்யும் தகுதியும், பட்டினியே கண்டிராத நிறைந்த வாழ்க்கை வசதிகள் இருந்தும், இவர்கள் ஏன் இப்படி?. ஏழை எளியவர்க்கென்று கிடைக்கும் சொற்ப வசதிகளைக்கூட, இப்படி வசதி படைத்தவர்கள் தட்டித் தம் வசமாக்கினால் எப்படி?

இதற்குள் இவர்கள் ஏதோ சாதனை படைத்தவர்கள் போல் பாவனை வேறு, இவர்களை என்ன வென்று சொல்வது.? சமூதாயத்திற்கு உதவிசெய்து, சமூகத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டிய படித்த உயரதிகாரிகளே சுயநலம் கொண்டவர்களாக, சுயஇலாபம் தேடும் மனித நேயம் மறந்தவர்களாக இருப்பதால், மனிதர்கள் மத்தியில் இவர்கள் மகாத்மாக்களா? உள்ளத்தால் உயர்ந்தவர்களா? படிப்பாலும் பதவியாலும் உயர்ந்தாலும், பண்பாலும் பழக்கத்தாலும் மிகவும் இழிவானவர்களாகவே எண்ணத்தோன்றுவதில் வியப்பேதும் இல்லையே என்ற சிந்தனையோடு, எதிர்காலம் பற்றிய ஏக்கத்தோடும், எவ்வளவு வித்தியாசமான மனிதர்கள் மத்தியில் நாமும் மனிதர்களாக வாழ, நிதமும் போராடுவதே வாழ்வாகிவிட்டது என்ற உண்மை புரிந்தவளாகப் பயணத்தைத் தொடர்ந்தாள் கமலம் பிள்ளையுடன்.

இருந்தும் அவள் அடிமனது ஆறுதல் அடையாது அங்கலாய்த்துக் கொண்டது. நான்ஒன்று நினைக்க இறைவன் வேறொன்று நினைக்கிறானே, எல்லாம் நன்மைக்குத்தான் என்று எண்ணியவளுக்கு, அனாதை இல்லத்தில் பணிபுரியும் பழையதோழி வசந்தாவின் நினைவு வந்தது. தனது தனிமை, வறுமைநிலைகண்டு சிறு சிறு உதவிகளுடன், நிறையவே அறிவுரைகள், ஆலோசனைகள் கூறி வாழ்க்கையில் ஓர் விருப்புக் கொள்ளவைத்தவள் அவள்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மகள் தீபாவின் எதிர்காலத்தை ஏற்றமுள்ளதாக ஆக்கி, நான் இழந்த அத்தனையையும் என்மகள் மூலம் பெறவேண்டும் என்ற எண்ணத்தை விதைத்தவளும் வசந்தாதானே. எனவே எல்லாவகையிலும் அனாதையான எனக்கு அடைக்கலம் அவள்தான் என்ற முடிவுடன், பேரூந்தை விட்டு இறங்கி நடந்தவளைத் தூரத்தே கண்ட வசந்தா, ஓடிச்சென்று தீபாவை வாங்கியபடியே "என்னடி முகமமெல்லாம் வாடிப்போயிருக்கு, நான் எத்தனைமுறை வரச் சொல்லி இருப்பேன், இப்பதான் வழி தெரிந்ததோ? நீவா உள்ளவா" என்றவள், பருகிடத் தேனீர் கொடுத்தபடியே "கொஞ்சம் இதில ஆறுதலாக இரு, நான்பிள்ளைக்கு ஏதும் கொடுக்கவா, இல்ல நீ பால் கொடுக்கப்போறியா?" என்றவளுக்கு "இல்ல இல்ல, பால் கொடுக்கக் கூடாது" என்று தனது நோய், பால்மாவுக்கு வரிசையில நின்றது, நடந்தது எல்லாவற்றையுமே சொல்லி முடித்தாள் கமலம்.

மனம் சங்கடமான வசந்தா, நிலைப்பாட்டைப் புரிந்த வளாகத் தங்கள் ஆச்சிரம வைத்தியரின் ஆலோசனைப் படியே. நகரத்திலுள்ள காசநோய் வைத்தியசாலையில் கமலத்தைச் சேர்த்து, குழந்தை தீபாவைத் தன்பொறுப்பில் ஏற்றுக்கொண்டாள். ஒரு பாதை மூடினால் ஒரு பாதை திறக்கும் என்ற இறைநம்பிக்கையுடன், வசந்தாவின் கண்காணிப்பில் பிள்ளையைவிட்டு, வைத்தியசாலை விடுதியில் இணைந்துகொண்டாள் கமலம். கால ஓட்டத்தில் அந்த அநாதை ஆச்சிரமத்தில் தோழிவசந்தாவின் உதவியுடன் பணிக்கமர்ந்து கொண்டு, தனது இலட்சியப்பாதையில் பயணிக்கத்தொடங்கினாள் கமலம்.

என்னதான் நடந்தாலும் இன்னும் பால்மாவிற்காக நின்று ஏமாந்தநிகழ்வு அவள் நினைவழியாத நிதர்சனமானது. உயர்ந்தவர்களில் சிலர் வசதிகள் இருந்தும் மற்றவர்களது வாய்ப்புக்களைத் தட்டிப்பறிக்கும் நிலை எப்போதுதான் இந்த உலகில் மாறுமோ? என்ற ஏக்கம்தான் அவளிடம் இருந்தது.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 ☞ வடிவின் விடிவு

"பிள்ள, கேற்றுக்க ஆரோ கூப்பிடுகினம்போல கிடக்கு, நாயும் குலைக்கிது, ஆரெண்டு பாருங்கோ" குசினியில் நின்றபடியே குரல் கொடுத்தாள் மீராவின் அம்மா, கல்லூரிக்கு வெளிக்கிட்டு தலை பின்னியபடியே வாசல்பக்கம் எட்டிப்பார்த்தவள் "ஓம் ஓம் நிக்கிறார், நாய் கடிக்காது, வாருங்கோ" என்றபடியே "அப்பா உங்களிட்டதான்" என்றவள், "அப்படி இருங்கோ, வருவார்" என்று கூறிக்கொண்டு போய்விட்டாள்.

கையில் சில பத்திரங்களுடன், கண்ணில் பல ஏக்கங்களுடன், கணவனை இளம் வயதிலேயே இழந்த, இரண்டு பிள்ளைகளுக்கு தாயான வடிவு, அமுதரின் வருகைக்காக வாடியே நின்றாள். "ஆ, என்ன விசயம், வெள்ளண வந்து நிக்கிறியள்" என்றபடியே அன்றைய தினப்பத்தரிகையை மடித்தபடியே முன்னுக்கு வந்தார் அமுதர்.

"ஐயா, எனக்கிந்த வீட்டுத்திட்டம் கிடைச்சிருக்காம் விதானை சொன்னவர், இண்டைக்கு எ.ஜீ.ஏ ஒவ்விஸ்சுக்கு போய்ப் பதிஞ்சுகொள்ள வேண்டுமாம். அதுதான் அவையள் கேட்டதெல்லாம் எடுத்திட்டன். காணி உறுதிதான் வேணும். அதுதான் வந்தனான்" என்ற ஒரு ஏக்கத்தோடும் எதிர்பார்ப்போடும், வசனத்தை முடிக்காமல் இழுத்தாள் வடிவு.

பிள்ளைகளின் படிப்புக்காகவும், நாளாந்த செலவுக் காகவும், வடிவு எப்படித்தான் பலகாரங்கள் செய்து கடைகளைப்பிடித்து உழைத்தாலும், கணவனை இழந்த அவளின் வாழ்வு, கடன்சுமை எனும் ஏணியில் ஏறியே சென்று கொண்டிருந்தது. ஓ, எல். வரையும் படித்தவள், விரும்பியே மணம்செய்து, சந்தோஷமான வாழ்வில் இரு குழந்தைச் செல்வங்களுடன், 12 வருட வாழ்வு துரதிஷ்டவசமாக அஸ்தமித்துவிட்டது. ஆம், மூத்தவன் ரமேஸ் 10 வயதிலும், தங்கை மாலதி 8 வயதிலும் தந்தையை இழந்து விட்டனர். அன்றுதொட்டுத் தன்சொந்த முயற்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவித இழிச்சொல்லுக்குமாளாகாமல், இருந்த சொற்ப சொத்துக்களுடன் வாழ்ந்து வருகிறாள் வடிவு. இந்த வழியிலேயே மகனின் மேற்படிப்புக்காகவும், கொஞ்சம் கடன்பெற்றவழியில் காணியுறுதி அமுதரிடம் அடகு நிலையில் அகப்பட்டு நின்றது.

அமுதர் ஊரில் கொஞ்சம் செல்வாக்கு மிக்கவர். பரம்பரைச் சொத்துக்களுடன், மனைவியின் வழியிலும் சேர்த்து ஒன்றைப்பத்தாக்கி, பத்தைநூறாக்கும் ஆற்றல்மிக்க அரச உத்தியோகத்தர். அவர் சொந்த நலன் இல்லாமல் எதுவும் செய்யமாட்டார். தானாய்ப்போய்த் தேடாவிட்டாலும், இப்படி வரும் வழிகளை வழித்து எடுப்பதில் வல்லவர். அந்த வழியில்தான் வடிவின் காணி உறுதியும் இவரிடம் சிக்கி இருந்தது. நல்ல சந்திப்பகுதியில் அமைந்த காணித்துண்டு என்றபடியால் அதை அமுக்கும் திட்டம்தான் அவரிடம் இருந்தது. இதுவரையில் அறுபது ஆயிரத்துக்குமேல் வந்து விட்டது. எப்படியும் ஒரு லட்சம் கணக்குவர ஒரு மாதிரி மாத்தி எழுதிவிடலாம், என்று இருந்தவரின் சிந்தனை இப்போது இப்படிச்சிந்திக்கத் தொடங்கியது.

"இம்" என்ற படியே பிடரியைச் சொறிந்த கையுடன் மேலே பார்த்தவரின் சிந்தனையில் வடிவு பிரச்சனையில்லை, பெடியன் படிக்கிறான், கெட்டிக்காறன்தான் என்றாலும் ஒரு வேலை கிடைச்சு மீளுறதெண்டால் கஸ்டம்தான். இந்த வீட்டுத்திட்டத்தில் இவள் ஒரு வீடு போட்டால், காணி எனக்கு மாறேக்க அதுகும் என்னிட்ட மாட்டும்தானே. அதைக் கடையாக்கி, வாடைக்கு விட்டால் போதும் ஒரு நிரந்தர வருமானமாய் வந்திடும்.

"ஏனையா யோசிக்கிறியள், நான் உறுதியைக் காட்டிப் பதிஞ்சுபோட்டுக் கொண்டந்து தந்திடுவன். இவற்ற காசு கச்சேரியில் தாறதெண்டவங்கள். அப்படி வந்தால் ஓர் அளவுக்கு சமாளிக்கலாம்தானே, கடவுள் இப்படியே விடப்போறாரே, ஏதோ உங்களைப்போல ஆட்களால எங்களுக்கும் வழிகாட்டிக் கொண்டுதான் இருக்கிறார். எல்லாம் அவர் சித்தம்தான். தலை எழுத்து அதுதான் எண்டால் நான் என்ன? நீங்கள் என்ன செய்யிறது?" என்றாள் வடிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையிலிருந்து விடுபட்டவராகச் சிரித்தபடியே "உன்னை நம்பாமலே வடிவு, எதுக்கும் கொஞ்சம் யோசிச்சுப்பார்த்தனான். ஆத்தில போட்டாலும் அளந்து போடவேணும் எண்டெல்லே சொல்லுவினம் அதுதான். சரி நான் எடுத்து வைக்கிறன். நீ வெளிக்கிட்டுப்போகேக்க இதால வந்து எடுத்திட்டுப்போ. பதிஞ்சு முடிஞ்சவுடனே மறக்காமல் பின்னேரம் கொண்டந்து தா" எண்டவர், கதையை முடித்து உள்ளே சென்றுவிட்டார். சிறு நிம்மதியுடன் திரும்பிய வடிவு, அன்றாட வேலைகள் எல்லாவற்றையும் முடித்து பிள்ளைகள் இருவரையும் அனுப்பிவிட்டுத் தானும் புறப்பட்டுவிட்டாள்.

ரமேஸ் கணிதப்பிரிவில் கல்விகற்றுப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்து, கொழும்பு சென்றுபடிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. மகனின் உயர்வுகண்டு மகிழ்வுகொண்டாலும் வடிவின் மனதில் அமைதி ஆட்கொள்ளவில்லை. ஏனெனில் ஏற்படும் செலவுக்கும், ஏற்ற தங்குமிடத்திற்கும் ஏது செய்வதென்றறியாமல் ஏங்கிய வண்ணம் இருந்தவளுக்கு, ரமேசின் நண்பனின் உதவி கைகொடுத்தது. அவனின் தந்தை கொழும்பில் வேலை பார்ப்பதால் சில வசதிகளைச்செய்து கொடுக்க முன்வந்தார். ரமேசின் நற்பண்புகளும், பழக்க வழக்கங்களும் அவர்களின் குடும்பத்தினருக்கும் பிடித்தி ருந்ததும் இதற்கொரு காரணமாய் இருந்தது.

கடவுளின் கருணையோ என்னவோ, அவ்வேளை பார்த்து ரமேசின் தந்தையின் நஷ்டஈட்டுத்தொகையும் வடிவுக்குக் கிடைக்கப்பெற்றதால் சிறு ஆறுதல் கிடைத்தது. இருந்தும் காணி உறுதியை மீளலாம் என்ற பணம் இப்போது மகனின் தேவைக்கு மாறியது, கொஞ்சம் கவலையைத்தந்தது வடிவுக்கு. இருந்தும் கிழக்கு வெளுக்காமலாபோகும். மகனால் வாழ்வு விடியாமலா போகும், என்ற தன்னம்பிக்கை யின் முன் மற்றவை எல்லாம் துரும்பாய் இருந்ததால், வடிவின் மனம் உள்ளூர விடியலை நோக்கியே மலர ஆரம்பித்துவிட்டது, அவள் முகத்தில் கோடுகாட்டி நின்றது.

குடில்வீடும் சிறுகல்வீடாகி மாலதியும் ஆளாகி, அழகாகி, ஏ எல் வரை படித்து விட்டு கல்வியியல் கல்லூரியின் அனுமதிக்காகக் காத்திருந்த நேரமது. வடிவும் வயதாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் பாதிவரை வந்து விட்டாள். அமுதரின் கடன் சுமையைத்தவிர வடிவுக்கு வேறு சுமை தற்போது இல்லை. அமுதரோ அடிக்கடி நினைவூட்டிக்கொள்வதோடு, தனக்கே சொந்தமாகும் இடத்தை பார்த்து இரசித்துக்கொள்வதிலும், உறுதியை மாற்றி எழுதும் திட்டத்திலும் கண்ணாயிருந்தார்.

"வடிவு, இந்த மார்கழிக்கிடையில ஒரு வழி பண்ணப்பார். எனக்கும் மூத்த மகளின்ர கல்யாணம் வருகிது. காசு வேணும், இல்லாட்டில் அறுதியாய் எழுதினால் நான் என்னவும் பண்ணலாம். தெரியாதே எனக்கும் மூண்டும் பொம்பிளப்பிள்ளையள். எப்படியும் சீதனம் காட்டவேணும்" என்று ஒரு படம் வரைந்தார் அமுதர். வடிவுக்கு அந்தத்துண்டையும் வீட்டையும் தவிர வேறு இல்லை. எல்லாப்பாரத்தையும் கடவுளிடம் போட்டு நடப்பது நடக்கட்டுக்கும், தகப்பனில்லாப்பிள்ளைகளை இவ்வளவு தூரம் கொண்டுவந்த கடவுள், இன்னும் கொஞ்சம்தானே என மனதைத்தேற்றிக்கொள்வாள் வடிவு. மகனின் படிப்பு இறுதிக்கட்டத்தை அடையும் நேரமே, அவனுக்கோர் பெரிய நிறுவனத்தில் பொறியியலாளராக வேலைகிடைத்த செய்தி வடிவுக்குக்கிடைத்தது. இதே நேரம் மகள் மாலதிக்கும் கல்வியியல் கல்லூரி அனுமதி கிடைத்தது வடிவுக்கு இரட்டிப்பு மகிழ்வானது.

நாளை மகன் வாறானாம் என்ற களிப்புடன் வடிவு அங்கலாய்த்துக் கொண்டு ஆடியோடித்திரிந்தாள். அக்கம் பக்கத்து வீட்டாருக்கெல்லாம் மனதுக்குள் பொறாமை கொண்டாலும், காட்டிக்கொள்ளாமல் ஒத்தாசைபோல் இருந்தனர். அமுதருக்கும் கொஞ்சம் யோசனைதான். அவருக்குள் இப்படியும் ஒரு புதுத்திட்டம் இருந்தது. காணியிலும் பார்க்க வடிவின் மகனை மருமகனாக்கினால் என்ன என்றும் சிந்தித்தார்.

இதற்கிடையில் மகனும் நண்பன் வீட்டாரும், வடிவின் வீட்டில் வைத்து பேசிமுடித்து, ரமேசை அவர்கள் மருமகனாக்கிக் கொழும்பில் வீட்டுடன் திருமணம் நிச்சயமானது கனவுபோல இருந்தாலும், அவ்வளவும் உண்மையானது. வாடியிருந்த வடிவின் வாழ்வில் வசந்தம் வீசத்தொடங்கியது. கடன்கள் தீர, சமூகத்தில் காலூன்றித் தன் நம்பிக்கையின் பயனை அறுவடை செய்த களிப்பில், அவளின் கிழக்கு விடியலை நோக்கி வியாபித்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 ☞ வறுமையிலும் செம்மை

தாயுடன் பாத்திரங்கள் கழுவிக்கொண்டிருந்த ராணிக்கு "அக்கா, இந்தா உனக்குத்தான்" என்றவாறே தம்பி கைபேசியைக்கொடுத்தான். கைபேசியில் பேசிய ராணி "அம்மா, கடைக்குப்போக மேனகாவும் ரேவதியும் என்னையும் வரட்டாம்" எனறவள், தாயிடம் அனுமதியும் பெற்றுக்கொண்டாள்.

இவர்கள் மூவரும் பள்ளித்தோழிகள். மேனாகாவும் ரேவதியும் வசதியானவர்கள் என்றாலும், நல்ல குணம் கொண்டவர்கள். ராணி சிறுவயதிலேயே தந்தையை இழந்து, தாயாரின் உழைப்பிலேயே படித்து வருகிறாள். இவளுக்கு நாளை பிறந்தநாள், அதனாலேயே அழைக்கின்றனர் என்பது ராணிக்குப் புரிந்தது.

மூவருமாகக் கடை ஒன்றில் நுழைந்து உடைகளைத் தெரிவுசெய்தனர். "இது எப்படி ராணி?" என்றாள் மேனகா. "விலை அதிகம்" என்றாள் ராணி.

"ராணி, சட்டை பிடிச்சிருக்கோ எண்டுதான் கேட்டனாங்கள்" என்று அதட்டினாள் ரேவதி. சங்கடத்துடன் பிடிச்சிருக்கெண்டுசொல்லவும், அதைமடித்துப்பொதிசெய்து ராணியின் கையில் கொடுத்து அனுப்பிவைத்தனர் தோழிகள்.

மறுநாட்காலையில் ராணி குளித்து, புதுச்சட்டையை போடுவதற்கு எடுத்துபோது, ஒரு தங்கச் சங்கிலி கீழே விழுந்தது. அது மேனகாவினது என்பது புரிந்ததால், அதைப் பத்திரப்படுத்திக்கொண்டு தாயிடம் ஆசிபெற்று, "அம்மா, கோவிலுக்குப்போய் மேனகா வீட்டிற்கும் போய்த்தான் வருவேன்" என்றவாறு தம்பியுடன் புறப்பட்டாள்.

அழைப்பு மணிகேட்டுக் கதவு திறந்த மேனகா, ராணியைப் பார்த்து அந்த சட்டை மிகவும் பொருத்தமாக இருந்ததைக்கண்டு, கட்டி முத்தமிட்டுப் பிறந்ததின வாழ்த்துக் கூறி அழைத்துச் சென்றாள். "சரி, நீ எனக்கு சட்டை வாங்கித் தந்தனி, நானும் உனக்கொரு பரிசு தரப்போகிறேன்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம் அவள் கையைப்பிடித்துத் தங்கச்சங்கிலியைக் கொடுத்தாள் ராணி. "ராணி எப்படி உன்னிடம்? நான் தேடியும் கிடைக்காமல் கவலையுடன் இருக்கிறேன்"

"இந்தச் சட்டைக்குள் தான் இருந்தது. நீ பிடித்துப் பார்க்கும்போது கழன்று சட்டையில் மாட்டுப்பட்டிருக்க வேண்டும். காலையில் சட்டையைப் போடும் போது தான் கண்டேன்" என்றாள் ராணி.

மகிழ்ச்சியுடன் ராணியைக் கட்டித் தழுவி, வறுமை யிலும் ராணியின் கண்ணியத்தை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டாள் மேனகா.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29 ☞ வாழ நினைத்தால் வாழலாம்

பிரதேசசெயலகக் கேட்போர் கூடத்தில் சுயதொழில் முனைவோருக்கான கூட்டத்தில் கண்ணனும் கலந்து கொண்டான். அங்கே மண்டபச் சாரளம் ஒன்றின் கதவுச்சட்டம் கழன்று, கண்ணாடி தொங்கிக் கொண்டிருந்ததைச் சரிப்பண்ணும் முயற்சியில் முடியாமல் விழித்தார், கடமையில் உள்ள ஒரு பெண் அதிகாரி. அதை அவதானித்த கண்ணன் உடனே அவ்விடம் சென்று அதைச்சீர்செய்து கொடுத்தான். நன்றிகள் சொன்ன அவ்வதிகாரி, கண்ணனை நோட்டமிட்டுச் சென்றார். வளரும் வளமிழந்த இளையோரை ஊக்குவிக்கும் முகமாக, அரசால் இவ்வாறான சுயதொழில் ஊக்குவிப்புத்திட்டங்கள் கிராமமட்டத்தில் நடாத்தப்பட்டு வருகின்றன.

கண்ணனும் அக்கிராமவாசிதான். தன் ஏழாவது வயதினில் தாயை இழந்தவன். தந்தையுடன் தனித்தே வாழ்ந்து வந்தான். தனது விருப்பத்திற்கு சாதி, மதம் பார்க்காது திருமணம் செய்தமையால், கண்ணனின் தந்தை வேலனை உறவுகள் ஒதுக்கியே வைத்திருந்தனர். இதனால் மனைவியை இழந்த நிலையில், வேலனும் கண்ணனும் தனித்தே வாழ்ந்து வந்தனர். தனது சிறு வியாபாரத்துடன் சமையல் முதற்கொண்டு, துணிதுவைப்பு என்று அனைத்தையும் ஒரு தாயின் நிலையிலிருந்து கவனித்து வந்த வேலன், கண்ணனைப் படிக்கவும் வைத்தான்.

இந்நிலையில் வியாபர நிமித்தம் துவிச்சக்கர வண்டியில் சென்றவேளை வீதி விபத்தொன்றில் சிக்கிக் கால் முறிந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தான். அப்போது கண்ணனுக்குப் பத்து வயதே ஆகியிருந்தது. செய்வதறியாது உறவுகளற்ற அனாதையாக வைத்தியசாலையில், கண்ணனே தந்தையைப் பார்த்துப் பராமரித்து வந்தான். அங்கு தந்தைக்கு வழங்கப்படும் உணவே இவன் வயிற்றுப்பசியையும் ஆற்றியது. மாதங்கள் இரண்டு கடந்துபோக, வேலன் ஊன்று கோலுடன் வீடு திரும்பினான். வியாபாரமும் இன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடமான தந்தையுடன் அன்றாட உணவிற்கே அல்லல் பட வேண்டியதாயிற்று. இந்நிலையிலேயே படிப்பைக் கைவிட்டு, ஒரு தச்சுத்தொழில் பட்டடையில் துப்புரவு, எடுபிடி வேலைக்குச் சேர்ந்து கொண்டான் கண்ணன். அவர்கள் கொடுக்கும் பணத்துடன் தந்தையும் மகனும் காலம் கழித்தனர். உண்மையும், நேர்மைத்தன்மையும், மதி நுட்பமும், முயற்சியும் கொண்டவனாதலால் கண்ணன் ஓரளவு தொழில்நுணுக்கங்களையும் பழகிக்கொண்டான். இவ்வாறு வருடங்கள் ஓடி, இப்போது வாலிபப் பருவத்தில் தான் இக்கூட்டத்தில் கலந்து கொள்கிறான்.

இவனுடன் சிறுவயதில் படித்தவர்கள், இப்போது கல்லூரி பல்கலைக்கழகம் எனப் படிப்பைத் தொடர்கையில், இவன்மட்டும் இப்படிக் குடும்பப் பாரம் சுமக்க வேண்டிய நிலை. தாய் நோய்வாய்ப்பட்ட வேளையிலும் தந்தை,

"உன்னை வசதியாக வைத்திருக்க என்னால் முடியவில்லையே" எனக் கவலைப்படும் போதெல்லாம்,

"காசு மட்டும்தான் வசதி என்றில்லை. அன்பான உறவுதான் வாழ்க்கை. வாழ நினைத்தால் எப்படியும் மகிழ்ச்சியாக வாழலாம். அதுவேணும் இது வேணு மென்றில்லாமல் இருப்பதைக்கொண்டு திருப்திப்பட்டு வாழ்வதே வாழ்க்கை" என்பாள். இதை அச்சிறுவயதிலேயே கண்ணனும் கேட்டு மனதில் பதித்துக் கொண்டான்.

அன்று கூட்டம் இனிதே முடிந்தது. ஒவ்வொருவரின் விபரமும் பதிவுசெய்த பின், அப்பெண் அதிகாரி கண்ணனை அழைத்துத் தனது வீட்டில் சில தளபாடங்களின் திருத்த வேலை உள்ளதாகவும், அதைத்திருத்தித் தருமாறும் கேட்டுக்கொண்டதற்கிணங்கக் கண்ணன் அவர்கள் வீடு சென்று அவற்றைச் சீர்செய்து கொடுத்தான். இருப்பதைக் கொண்டும், எதையும் வீணாக்காமலும், சிறப்புடன் சீர்செய்ததை அவதானித்த அந்த அதிகாரி, இவனிடத்தில் ஒரு மதிப்பும் மரியாதையும் கொண்டாள். அந்தவகையில் அவரது சிபாரிசுடன் கண்ணனுக்குத் தொழில் உபகரணங்களும், சகல தச்சுத்தொழில் வேலைகளும் செய்யக்கூடிய ஒரு இயந்திரமும் அரசால் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் தந்தையின் துணையுடன் அவற்றை வீட்டிலேயே பொருத்தி வேலைசெய்ய ஆரம்பித்தவன், சிறுகச்சிறுக முன்னேறித் தாயாரின் பெயரான "தர்மினி தச்சுத்தொழிலகம்" என்ற நிறுவன அதிபராக ஆகிக்கொண்டான். கண்ணனின் உற்பத்தித் தளபாடங்கள், சந்தையில் மிகவும் தரமானதாகக் கணிக்கப்பட்டுப் பலராலும் கொள்வனவு செய்யப்படுவதுடன், நகரங்கள், பிறமாவட்டங்கள் என வழங்கல்களும் செய்து வந்தான்.

படிப்பபைக்கைவிட்டு வறுமையின் பிடியில் வைத்திய சாலை உணவுடன், பிஞ்சுவயதில் சிரமப்பட்டவனைப் பார்த்து ஏளனம் செய்தவர்களும், விலக்கிவிட்ட உறவினரும் விழித்துப்பார்க்கக் கண்ணன் வளர்ந்ததுதான் பெருமை. தாய், தந்தைக்குச் சொன்ன மந்திரம் "வாழ நினைத்தால் வாழலாம்" என்பது கண்ணனுக்கு வாழ்வின் தாரகமந்திரமானதே உண்மை.

☼ ☼ ☼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 ☞ விடியலைத்தேடி

பலகாரங்கள் செய்து கடைகளுக்குக் கொடுத்து, வரும் வருமானத்தில் தனது குடும்பத்தை நகர்த்தி வந்தாள் காயத்திரி. இளமையில் துடிப்பும், படித்துப் பெரியவளாக வேண்டும் என்ற ஆவலுடனும் இருந்தவளுக்குக் குடும்ப நிலமை காரணமாக, பருவமடைந்ததும் படிப்பை நிறுத்தி வீட்டுவேலைகளில் ஈடுபடவைத்ததுமல்லாமல், அவளது ஆசைகளில் மண்ணைத்தூவித் தங்கள் காரியத்தையும் நிலைநாட்டிக் கொண்டனர் அவளது பெற்றோர்.

தன் சமூக நிலமைகளை மாற்றிப் பாரதிகண்ட புதுமைப் பெண்ணாக, சமநீதி கண்டு முன்னேறவேண்டும் என்ற அவளது கனவு, பெற்றோரின் வறுமை, வசதியின் மையில் அழிந்துபோக, தங்கள் கடமை நிறைவேற்றல் என்ற வேலிக்குள், தூரத்து உறவான கூலித்தொழிலாளி ஒருவனுக்குக் காயத்திரி வாழ்க்கைப்பட வேண்டியதாயிற்று. நல்லொழுக்கம், பண்புகளற்ற ஒருவனின் உழைப்பை நம்பி காயத்திரியின் வாழ்வை, நிலமை அறியாமலே தாரைவார்த்து விட்டார்கள்.

கால ஓட்டத்தில் துன்பம், துயரம் மத்தியில் இரு பிள்ளைகளுக்குத் தாயாகவுமானாள். எவ்வளவு புத்திமதிகள் எடுத்துச்சொல்லியும், பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிச் சொல்லியும் ஏற்றுக்கொள்ளாதவன். உழைப்பை ஊதாரித் தனமாகச் செலவு செய்து, நிதமும் மனைவியிடம் சண்டையிட்டு வாழ்வதை விலக்கி, தொழில் புரியுமிடத்தில் தங்கி வேலை செய்யமுற்பட்டவனுக்கு, அங்கு ஒரு தகாத உறவு அணைத்துக்கொள்ளக் காயத்திரியை மெல்ல மெல்லத் தனிமையாக்கி நிரந்தரப் பிரிவென்றானதே மிச்சம்.

தன் வாழ்வாதாரத்துக்கும் பிள்ளைகளின் எதிர் காலத்திற்கும் தன்கையை நம்பியவள், வீட்டில் பழகிய சமையல் வேலை கைகொடுக்க, பலகாரங்கள் செய்து துவிச்சக்கர வண்டியில் கொண்டுசென்று விநியோகித்து வந்தாள். தரமானதும் சுவையானதும் என்பதால் நாளுக்குநாள் வியாபாரம் மெருகேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது இலட்சியக்கனவு தன்னிடம் பலிக்கா விடினும் தன் பிள்ளைகளினூடாக அதைச்சாதிக்கவேண்டும் என்ற வெறியில், கணவன் கைவிட்டாலும் தன் உழைப்பையே நம்பியிருப்பது ஒரு சுமையாகவே தோன்றவில்லை அவளுக்கு.

மகளும் மகனும் தன் சமூகத்திற்கு விடிவெள்ளியாகி விடியலைக்காட்டவேண்டும் என்ற விடாமுயற்சியில், நிதமும் விடியலோடு எழுந்து, மூவருமாகச் சேர்ந்தே பலகாரவேலைகளையும் முடித்து, அதன்பின் பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஆயத்தமாக்கி, தலைவாரி அழகுபடுத்தித் தானும் புறப்பட்டுத் துவிச்சக்கர வண்டியிலேயே பாடசாலை, கடைகள் எனப்பயணித்து, ஒற்றை மரமாய் அதுவும் பெண்ணாய், விடியலை நோக்கியே வாழ்வை நகர்த்தி வருகிறாள் காயத்திரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியர் இயல்பு பற்றி இனிமையுடன்...



பண்டைநகர் நாயகன் படைப்பாற்றல் மிக்கவர்
பண்புக்கோர் இலக்கணமாய்ப் பாசத்துடன் பழகுபவர்
பணிசெய்து வாழ்வதில் பக்குவப்பட்டவர்
பல்துறை ஆற்றல்கள் தன்னகத்தே கொண்டவர்
தேவைகள் அறிந்தே சேவைகள் புரிபவர்
கவிதைகள் வழியால் இதயங்கள் கவருபவர்
கனிவுடன் மாணவர்க்கும் சொல்லியே தருபவர்
இளமைத் துடிப்புடன் எறும்பதன் சுறுசுறுப்பானவர்
இரகசியங்கள் மூலம் பரகசியமாக்கும் வல்லவர்
முகநூல் கவிதைகளால் முழுவுலகும் அறியப்படுபவர்
மடைதிறந்த வெள்ளமெனக் கலைகள் வளர்ப்பவர்
புன்னகையின் பூரிப்புடன் படைப்புகள் தொடரவே
மனதார வாழ்த்துகிறேன், இறைவனை இறைஞ்சுகிறேன்



என்றும் அன்புடன்
திருமதி லுசிந்தா தர்மினி பாலேந்திரன்
அதிபர்
யா /பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ. க. த. க. பாடசாலை

9 786249 602618

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org